Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)


முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 28 செவ்வாய்க்கிழமை (12.03.2013) பக்கங்கள் 20 ஓசை - 163













# மீண்டும் குழப்பத்தை உருவாக்க சதி செய்கிறது மேற்குலகம்



(கொழும்பு)

உள்நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த மேற்குலக நாடுகள் முயற்சித்து வருவதாகவும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஊடாக அரசு மீது அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சித்து வருவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் பாதுகாப்பு உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக அண்மையில் அமெரிக்கா இரண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு பெருந்தொகை பணத்தை ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் நோக்கில் மேற்குலக நாடுகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை பயன்படுத்திக் கொள்வதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்து வரும் தரப்பினர் இந்த நிதி உதவியைக் கொண்டு மேலும் தீவிரமாக பிரசாரங்களை முன்னெடுப்பார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக்கு எதிரான தரப்பினர் ஒன்று கூடும் இடமாக ஜெனிவா மாற்றமடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் சில ஊடகவியலாளர்களுக்கு பெருந் தொகைப் பணம் கிடைக்கப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் சலசலப்புக்கு அஞ்சக்கூடாது இந்தியா

### புதுடில்லிக்கு 'இந்து' போதனை

(புதுடில்லி)

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை தூரநோக்குடையதாக இருக்கவேண்டும். உள்நாட்டு அரசியல் சலசலப்புகளுக்கு மத்திய அரசு இடம்கொடுக்கக்கூடாது என்று பிரபல இந்திய பத்திரிகையான 'இந்து' தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள மனித உரிமை தொடர்பான பிரேரணையின் போது, இந்திய வெளிவிவகார கொள்கையானது நீண்டகால நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட

(19) ஆம் பக்கம் பார்க்க

## சுயாதீன விசாரணை சர்வதேச சதி அல்ல

(ஜெனிவா)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான சுயாதீன விசாரணையை சர்வதேச சதித்திட்டமாக அரசு கருதுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது,

உண்மையைக் கண்டறியாது நாட்டில் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய கொள்கைகள் மக்களின் அதிருப்தியையே சம்பாதித்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லா நேரங்களிலும் மக்களை முட்டாளாக்க முடியாது என்பதனை புரிந்து கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை மக்கள் நீண்ட காலத்திற்கு ஏற்றுக் கொள்ள



மாட்டார்கள் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். குற்றச் செயல்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## படையினர் வசமுள்ள காணிகள் மக்களிடம் கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

படையினர் வசமிருக்கும் பொதுமக்களது காணிகள் அனைத்தும் அவர்களிடமே ஒப்படைக்கப்படும் என்று காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு திறந்துவைக்கப்படும் அலுவலகத்திற்கு பொதுமக்கள் வருகைதந்து தமது காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் மயிலிட்டி மேற்கு, வசாவிளான் கிழக்கு, தெல்லிப்பளை வடகிழக்கு மற்றும் பலாலியின் சில பகுதிகள் எதிர்வரும் காலங்களில் பொதுமக்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் இந்த கருமங்களின் பொருட்டும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும் இன்று (நேற்று) காணி தொடர்பான பட்டதாரி பயிலுநர்கள் 20 பேருக்கு தாம் நியமனம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்குள்ள மக்களுக்கு காணி தொடர்பாக போதிய தெளிவு அற்ற நிலை காணப்படுகின்றது. இதனாலேயே பொதுமக்களது காணிகளை படையினர் அபகரிக்கின்றனர் என்று கூறுகின்றனர்.

(19) ஆம் பக்கம் பார்க்க



## பிரபாகரன் மீது மக்களின் சாபம்

### எனது சொல்லை கேட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காது

(வவுனியா)

வன்னியில் சிக்கியிருந்த 3 இலட்சம் மக்களின் சாபம் உங்கள் மீது சூழ்ந்து விடும் என்று பிரபாகரனிடம் நான் தெரிவித்திருந்தேன்.

நாற்பது ஆண்டுகால அரசியல் அனுபவத்தைக் கேட்டிருந்தால் பிரபாகரன் இன்றும் உயிருடன் இருந்திருப்பார் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் வாக்களிக்க நட்பு நாடுகள் தகுதியிழப்பு

### பாகிஸ்தான் பிரேரணையும் நிராகரிப்பு

(ஜெனிவா)

அமெரிக்கத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் இலங்கையின் முன்னணி நட்பு நாடுகளான சீனா, கியூபா, ரஷ்யா ஆகியவை வாக்கெடுப்பில் கலந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளன என்று ஜெனிவாவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சுழற்சி முறையிலான அங்கத்துவத்தின் அடிப்படையில் இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான சீனா, கியூபா, ரஷ்யா போன்ற நாடுகள் இம்முறை வாக்களிக்கும் தகுதியை இழக்கின்றன. எனவே, பாகிஸ்தான், ஜப்பான் போன்ற நாடுகளையே இலங்கை இந்த முறை முழுமையாக நம்பியிருக்கின்றது.

இதனடிப்படையிலேயே

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாளைய தினமுரசில்...

### விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்



27

### மறுப்புக் கடிதம்

# அர்த்தமிழந்தது நிர்ணயவிலை

# கிளிநொச்சி விவசாயிகள் கவலை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளினால் அறுவடை செய்யப்படும் நெல் கொள்முதல் செய்யப்படும் நிலையில் இந்நெல்லுக்கான நிர்ணயவிலை மற்றும் நிர்ணய எடை அளவு என்பன இல்லாமையாயால் இப்பிரதேச விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்குவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

வன்னியில் போகத்திற்குப் போகம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு நெல் அறுவடை செய்யப்படுகின்ற நிலையில் இந்நெல் கொள்வனவு செய்வோரால் மிகக் குறைந்த விலைக்கே நெல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்ற அதேவேளை ஒரு மூடை நெல்லினுடைய எடையாக 72 கிலோ தொடக்கம் 78 கிலோ வரையான கொள்வனவு செய்யப்படுகின்றன.

இதேவேளை விவசாயிகளிடமிருந்து ஒருகிலோ சம்பா நெல் 35 ரூபாவுக்கும் சிவப்பரிசி நெல் 32 ரூபாவுக்கும் என நிர்ணயிக்கப்பட்ட நிலையில் விவசாயிகளிடமிருந்து ஒருமூடை 70 கிலோ என்ற விகிதத்தில் நெல் கொள்வனவு செய்யப்படுவதால் விவசாயிகள் ஓரளவு நன்மையடையும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் எனினும் இலாபம் இல்லாமலும் நஷ்டத்தை எதிர்கொள்ள முடியாமலும் இருப்பதாக விவசாயிகள். தெரிவிக்கின்றனர்.

மேலும் மழை காலங்களில் நெல்லை கொள்முதல் செய்வோர் விவசாயிகளிடம் மிகக் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் மழையில் நனைந்த நெல்லை வைத்திருக்க முடியாது என்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விவசாயிகளிடம் கேட்க அவர்களுக்கு வழியின்றி குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 2011 ஆம் ஆண்டு விவசாயக் கடனைப் பெற்ற விவசாயிகள் இவ்வாறான நிலையில் தாம் எப்படி கடனை மீளச் செலுத்துவது என மன ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

பல வகையிலும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் நெல்லுக்கான நிர்ணயவிலை, அளவு என்பவற்றை நிர்ணயிக்க வேண்டும் என விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுககின்றனர். (கே)

# மல்லாவி சம்பத் வங்கி புதிய கிளை திறப்புவிழா

(மல்லாவி)

சம்பத் வங்கியின் மல்லாவிக் கிளையின் புதிய கட்டடத்திறப்பு விழாநேற்று சிறப்புற நடைபெற்றது.

இக்கிளை கடந்த 2 வருடங்களுக்கு மேலாக தற்காலிக இடத்தில் மல்லாவியில் இயங்கி வந்தது. தற்போது இக்கிளைக்கெனப் புதிதாகக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று காலை 9.00 மணிக்கு சம்பத் வங்கியின் மல்லாவி கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தேசிய கொடியேற்றல், மங்கல விளக்கேற்றல் ஆகியன இடம்பெற்றன. வங்கியின் புதிய கட்டடத்திற்கான சிரேஷ்ட பிரதிப் பொதுமுகாமையாளர் சமன் ஷேரத் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைத்தார்.

இதன்பின்னர் கணக்கு வைப்புக்கள், சிறுவர் சேமிப்புக்கள், வடக்கின்வசந்தம் திட்டத்தினூடாக கடன்வசதிகள் என்பனவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மல்லாவி பொலிஸ் அதிகாரி, அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (140)

# "கண்டல்" இறுவட்டு இன்று வெளியீடு

விஞ்ஞான கற்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கண்டல் இறுவட்டு வெளியீடு இன்று இடம்பெறவுள்ளது. விஞ்ஞான கற்கை நிலையத்தின் முகாமையாளர் அ.ஜெய்க்கீசனால் தயாரிக்கப்பட்ட இவ் இறுவட்டு காலை 9.00 மணிக்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட விஞ்ஞான கள கற்கை நிலையத்தில் வெளியிடப்படவுள்ளது.

வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை வட மாகாண விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஏ.சிவனருள்ராஜா ஆற்றுவதுடன் வெளியிட்டும் வைக்க, வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பராசக்தி கணேசலிங்கம் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

மதிப்பீட்டு உரையினை வவனியா தெற்கு கல்வி வலயத்தின் விஞ்ஞானபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இந்திரலிங்கம் நிகழ்த்த ஏற்புரையினைத் தயாரிப்பாளர் அ.ஜெய்க்கீசனும் நன்றியுரையினை வவுனியா தெற்கு விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் இ.மாதவனும் வழங்கவுள்ளார். (160)

# இறைச்சிக்காக மாடுவெட்டும் இடத்தினை மாற்றுமாறு கோரிக்கை

அச்சுவேலி வடக்கில் உள்ள இந்து மயானத்துக்கு அருகில் இறைச்சிக்காக மாடு வெட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். மயானத்துக்கு அருகில் உரிய வசதிகள் அற்றுக்காணப்படும் சிறு கட்டடத்தில் இறைச்சிக்காக மாடு வெட்டப்படுவத்துடன் எச்சங்களான தோல், எலும்புகள் போன்றவற்றை உரியமுறையில் அகற்றப்படாமல் விட்டுச செல்வதால் நாய்கள் காகங்கள் போன்றன எடுத்துச்செல்வதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் கிணறுகளுக்குள் காகங்கள் கொண்டு வந்தும் போட்டுச் செல்கின்றன. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை அப்பகுதியல் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேசத்துக்குரிய பொதுச் சுகாதார பரிசோதகரைத் தொடர்புகொண்டு கேட்டபோது "மயானத்துக்கு அருகில் இறைச்சி வெட்டுவதனை நிறுத்துமாறு கேட்டுகொள்ளப்பட்டபோதும் இவற்றை செவிமடுக்காது இங்கு அத் தொழில் நடைபெறுவதாகவும். இது தொடர்பாக பிராந்திய சுகாதாரப் பணியகத்துக்கு தெரியப்படுத்தி உரிய கடிதம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டதாகவும், அத்துடன் இறைச்சிஅடிக்கப்படும் பகுதியில் 25 விதமான குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்யுமாறு பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

எனவே இத்தகைய சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்க இறைச்சிக்காக மாடு வெட்டும் இடத்தினை வேறு ஓர் இடத்திற்கு மாறறியமைத்து கழிவுகளை அகற்றும் உரிய கொள்கலன்களை அமைத்துக் கொடுப்பதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வவுனியாவில் சிறப்பாக நடைபெற்ற கச்சியப்பர் விழா

(வவுனியா)

வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்திய கச்சியப்பர் விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வவுனியா, வைரவ புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மங்கல விளக்கினை வேலுச்சாமி சத்தியநாதன், காந்தி தம்பதியர் ஏற்றிவைத்தனர்.

திருமுறையினை திருமதி சௌந்தரராஜா குருக்கள் பானுரேகா ஓதினார். தமிழ் வாழ்த்தினை வவுனியா, இலங்கை திருச்சபை தமிழ் மகாவித்தியாலய இசைததுறை ஆசிரியை திருமதி தாட்சயிணி கணேசநாதன் பாடினார்.


தொடக்கவுரையினை வவுனியா நகர சபையின் செயலாளர் வே.வசந்தகுமார் நிகழ்த்தியதுடன் தலைமையுரையினை தொடர்ந்து மாணவர் உரை அரங்கம் இடம்பெற்றது. 'கச்சியப்பர்' என்னும் பொருளில் வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியின் மாணவி செல்வி ஜெசிந்தா ஆனந்தமூர்த்தியும், கந்தபுராணம் என்னும் பொருளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் மு.துவிஜனனும் உரையாற்றினார்கள். கௌரவம் வழங்கும் நிகழ்ச்சியில் கந்தபுராணபடன வித்தகர், அருளுரைவாரிதி, சுழிபுரம் மாதவர் மார்க்கண்டு, ஓய்வு பெறும் கிராம சேவை உத்தியோகத்தர் மயில்வாகனம் தியாகராஜா ஆகியோர் சிறப்பாக கௌரவிக்கப்பட்டார்கள். இக்கௌரவிப்பு நிகழவினை மா.நந்தகுமார் கவினுறத் தொகுத்து வழங்கினார்.

அடுத்து நடைபெற்ற கந்த புராணக் கருத்தரங்கில் "வேலும் வில்லும்" என கவியெழில் திருமதி த. நிறைமதி, "கந்தபுராண கலாசாரம்" என சிவ.கஜன், "கந்தபுராணத்தில் சைவசித்தாந்தம்" என திருமதி வி.முருகேசம்பிள்ளை, "கந்தபுராணம் காட்டும் பண்பாடு" என கவிச்சிகரம் கி.உதயகுமார், "கந்தபுராணத்தில் இலக்கியச் சுவை" என ஆ.லோகேஸ்வரனும் நல்ல முறையில் கருத்துரைகளை வழங்கினர். இக்கருத்தரங்கத்திற்கு தமிழருவி த.சிவகுமாரன் நடுவராக கடமையாற்றினார். நிறைவாக நடைபெற்ற நாட்டிய அரங்கில், வவுனியா நர்த்தன சேஷாதிராலயா நடனப்பள்ளி இயக்குநர், செல்வி. பாலசுப்பிரமணியம் ஜெயசீலாவின் நட்டுவாங்கத்தில் "அழகுத் தெய்வம்" என்னும் நாட்டிய நாடகம் சிறப்பாக இடம்பெற்றது. ஒரு மணியளவில் விழா இனிதே நிறைவு பெற்றது.

# பரிசில் வழங்கல்

கிளிநொச்சி கண்டாவளைக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளிடையே கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கம் நடத்திய கோட்டமட்ட திருக்குறள் மனனப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகள் தமிழ்த் தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு தொடக்க விழாவாக தமிழ்ச் சங்கத் தலைவர் க.ம.பத்மநாதன் தலைமையில் பரந்தன் இந்துக் கல்லூரியில் இன்று பி.ப. 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழாவில் அடிகளாரின் தமிழ்த்தொண்டு என்னும் பொருளில் கண்டாவளைப் பிரதேச செயலர் க.முகுந்தன் அவரகளும் பரந்தன் இந்து உயர் நிலைப்பள்ளி ஆசிரியர் சி.ரமேஸ அவர்களும் சிறப்புரையாற்றவுள்ளனர். (142)





முல்லைத்தீவு நகரில் அபிவிருத்திப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன. தொலைத்தொடர்பு வசதிகள் உட்பட அரச கட்டடங்கள், பாடசாலைகள் மற்றும் பொதுஇடங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (படப்பிடிப்பு - மதி)

# தாமதமாகும் மண்ணெண்ணெய்

(யாழ்ப்பாணம்)

வரணி வடக்குப் பகுதியில் வசிக்கும் மின்சார வசதிகளற்ற குடும்பங்களுக்கான மண்ணெண்ணெய் இன்னும் வழங்கப்படவில்லை என பயனாளிகள் கவலை தெரிவிக்கின்றனர். இந்த பயனாளிகளுக்கான மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டு சுமார் ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் ஏன் இவ்வளவு கால தாமதமெனத் தெரியவில்லை. சங்க வட்டாரங்களைத் தொடர்புகொண்டு கேட்டபோது தமக்கு அனுமதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர்.(150)

# மரபுசார் விழுமியங்களை மாணவர்கள் பின்பற்றவேண்டும்

## உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன்

(யாழ்.நிருபர்)

கிராமப்புறங்களில் உள்ள ஆலயங்களுக்கு ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு நடைபெறும் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை போன்ற நிகழ்வுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கு ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும். இத்தகைய செயற்பாடுகளினூடாகவே பாடசாலை மாணவர்களிடையே சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கட்டியெழுப்ப முடியும் என யாழ்.கல்வி வலய முகாமைத்துவ உதவிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் தெரிவித்தார்.

யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரியில் சைவநெறிப்பாட சேவைக்கால ஆலோசகர் திரு மதி.ரி.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற சமயபாட ஆசிரியர்களுக்கான செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கந்தபுராண கலாசாரம் நிலவிய யாழ்ப்பாணத்தில் இன்று புராணபடனம் அருகி வருகிறது. நாவலர் பாரம்பரியத்தைப் பேணும் வகையில் பாடசாலைகளில் மாணவர்களிடையே புராணபடன நிகழ்வினை நடாத்துவதற்கு சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் முன்வர வேண்டும். வெள்ளிக்கிழமை நடைபெறும் பிரார்த்தனை நிகழ்வின் போது புராணபடனம் செய்யலாம்.

சைவசமய பாடத்தின் ஊடாக மாணவனுக்கு ஒரு தொழிலைக் கற்றுக் கொடுக்க வேண்டும். இன்று மாலை கட்டுதல் நல்ல வருமானம் ஈட்டத்தக்க தொழிலாகக் காணப்படுகிறது. பிள்ளைகளுக்கு மாலை கட்டப் பழக்கி விட்டால் அவர்களில் யாராவது எதிர்காலத்தில் அதனையே ஒரு தொழிலாகச் செய்ய முடியும்.

மங்கல நிகழ்வுகளின் போது ஒற்றைக் குத்துவிளக்கு ஏற்றுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சரியான சம்பிரதாயங்கள், மரபுகளை நாம் கடைப்பிடிப்பதனூடாகவே எதிர்காலத்தில் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக விளங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (10)

# யுனிசெவ் நிறுவனத்தினால் பாடசாலைகளுக்கு சிறுவர் முற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உட்பட சகல இடங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனத்தால் சிறுவர் விளையாட்டு முற்றம் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின்படி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவரகளினை பெருமளவு கொண்ட பாடசாலைகளினைத் தெரிவு செய்து யுனிசெவ் நிறுவனம் இத்திட்டத்தினை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஊஞ்சல்கள், வழுக்கிச் செல்லும் திடல், சிறுவர் அப்பியாசத் திடல், இராட்டினம், சுழல் கதிரை கொண்ட தொகுதியினை யுனிசெவ் நிறுவனத்தினரே நேரில்வந்து அமைத்துக் கொடுத்துச் செல்கின்றனர்.

இதேநேரம் வன்னிப் பகுதியில் கட்டடப் பணிகள் இடம்பெற்று வரும் பாடசாலைகளில் சிறுவர் முற்றம் அமைப்பதற்குரிய உபகரணங்களுடன் அவற்றினை நிர்மாணிப்பதற்கான மணல், கல், சீமெந்து, போன்றவற்றினையும் யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது. (42)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முக்கியமாக தற்கால அரசியல் நிலவரம் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து அரசியல் அமைப்புக்களினது உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# கல்வி நிர்வாக சேவையில் சித்திபெற்ற இருவருக்கு கௌரவம்

(கிளிநொச்சி)

மட்டுவில் மக்களால் தமது பிரதேசத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த இருவருக்கான பாராட்டு விழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மட்டுவில் மத்தி பொதுநோக்கு மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றும் வேலுப்பிள்ளை கந்தசாமி, பதுளை, பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் சிவசம்பு மதியழகன் ஆகியோருக்கே இப்பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தின் கணக்கியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி. பா.நிமலதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில்,

முதன்மை அதிதிகளாக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஸ்ணகுமார், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

வரவேற்புரையை சந்திரபுரம் மட்டுவில் நுணாவில் கிர்ாம அலுவலர் க.வாமதேவன் நிகழ்த்தவுள்ளார்.

ஆசியுரையை ஜோதிட ஆலோசகர், இந்துசமய பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள், வண.பிதா. டானியல் ரஞ்சித் (C.A.C.M) ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரைகளை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், சைவப்புலவர் கா.கமலநாதன், மட்டுவில் மத்தி கிராம அலுவலர் செ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர் (90)

# முதுமானி கற்கைநெறி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடம் கல்வியியல் முதுமானி 2013/2014 கற்கை நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்குரிய தகமைகளாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமும், பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவும், அதனுடன் ஒரு பாடசாலையில் அல்லது ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்தாண்டுகள் கற்பித்தல் அனுபவம் அன்றேல் மேற்படி கற்கை நெறிக்குப் பொருத்தமான கல்வி சார் பணிகளில் குறைந்தது 5 வருட அனுபவம் ஆகியனவாகும்.

ஒருவருட காலத்தைக் கொண்ட இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் சித்திரை மாதம் 11 ஆம் திகதியாகும். விண்ணப்பப் படிவங்களை உயர்பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (54)

# நல்லூர் நாச்சியம்மனுக்கு வருடாந்த மஹோற்சவம்

(திருநெல்வேலி)

யாழ்.கச்சேரி நல்லூர் வீதி - பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றமும், 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு சப்பறமும், புதன்கிழமை காலை 8.00 மணிக்கு தேர் உற்சவமும், மறுநாள் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும், 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பூங்காவனமும் நடைபெறவுள்ளன. (137)

# மணிவாசகர் சபையால் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சமயப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

பிரிவு - I (தரம் 2,3)

பா.நிசாந்தன் - யா/யாழ்ரன் கல்லூரி, க.கஜானா - யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், செ.வனஜா - யா/காரை. ஊரி அ.மி.த.க.பாடசாலை.

பிரிவு II (தரம் 4,5)

சி.தர்சினி - யா/காரை. மெய்கண்டான் வித்தியாலயம், ரா.தமிழினி - யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், கி.மதுஷன் - யா/காரை.ஊரி அ.மி.த.க.பாடசாலை.

பிரிவு III (தரம் 6,7)

ஆ.அமிர்தா - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், இ.கல்யாணி - யா/யாழ்ரன் கல்லூரி, ம.கபிலேஷன் யா/யாழ்ரன் கல்லூரி.

பிரிவு IV (தரம் 8,9)

சோ.நிறோஜினி - யா/யாழ்ரன் கல்லூரி, ப.யாழினி - யா/யாழ்ரன் கல்லூரி, ஜெ.சரணியா - யா/யாழ்ரன் கல்லூரி, இ.நிருபமா - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.


பிரிவு V (தரம் 10,11)

ப.மகிபன் - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், மதிவதனி - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம், இ.பவதாரணி - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.

பிரிவு VI (தரம் 12,13)

தி.கிருசாந்தி - யா/யாழ்ரன் கல்லூரி, ந.சோபிதன் - யா/யாழ்ரன் கல்லூரி (10)

**மலேசியா - இந்து சங்கத்தில் நடைபெற்ற 'இலங்கையில் இன்றைய சூழலில் இந்து மதம்' தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்ட கலாநிதி ஆறு.திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள், அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் மற்றும் இந்து சங்கப் பிரதிநிதிகளையும், கருத்தரங்கு நடைபெறுவதையும் காணலாம்.**





பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## 'தேவை' தாண்டிய 'விருப்பம்' வேண்டாம்!

சாதாரண மக்களுடைய தேவைகள் எவை? அவர்களுடைய தேவைகள் எளிமையானவை, வெளிப்படையானவை, நேர்மையானவை. அவை உணவு, உடை, உறைவிடம், நன்னீர், ஆரோக்கிய உடல்நலம் ஆகியவைதான். இவற்றை இயற்கையிடமிருந்தே பெற்றுக் கொள்ளும்போது அவர்களுக்கு எந்தப் பிரச்சினைகளும் இருப்பதில்லை.

இயற்கை வளங்களை அழிக்காமல் அதிலிருந்து வாழ்வுக்குத் தேவையானவற்றை மட்டும் பெற்றுக்கொண்டு அவர்களது இதர தேவைகளான கல்வி, மருத்துவம், போக்குவரத்து, பொழுதுபோக்குக்கு கலைகள் என வசதி வாய்ப்புகளை ஒரு அரசு செய்து தருமாக இருந்தால் அந்த வாழ்க்கையே அவர்கள் மகிழ்ந்து கொண்டாடப் போதுமானது.

தாமே தயாரித்த மற்றும் சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறார்கள். அவற்றைக் கொண்டே தங்கள் வாழ்வியலை நகர்த்துகிறார்கள். ஆனால் நடுத்தரக் குடும்பங்களிலும், செல்வ வளமிக்க குடும்பங்களிலும்தான் "தேவைகளைத்" தாண்டி மேலதிக "விருப்பம்" பிரதானமாகியுள்ளது. நீண்ட நாள் ஆசைகள், திடீர் ஆசைகள், குழப்ப மனநிலை, மயக்க நிலை, அந்தஸ்து என பொருட்களை வாங்கிக் குவிக்கும் நுகர்வோர் மனநிலைக்குள் அவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

நடுத்தரக் குடும்பங்களில்தான் பெரும்பாலும் பொருட்களை வாங்கிக் குவிப்பதா அல்லது சேமிப்பதா என்று முடிவெடுக்கத் தெரியாமல் தவிக்கிறார்கள். நுகர்வோர் மனநிலைக்கு அடிமையாகிற சமூகத்தில் அவர்களை எது மகிழ்விக்கும் என அறியாமல் குழப்பத்தில் உள்ளனர். செல்வம் சேர்க்க வேண்டும் என்ற பேராசைதான் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு மிக முக்கிய காரணமாக உள்ளது என்கிறார் பொருளாதார வல்லுனரும், சமூகவியலாளருமான Thorstein Veblen.

பொருட்களை வாங்கிக் குவிப்பதின் பின்னணியில் தங்களின் "மகிழ்ச்சி" அடங்கியுள்ளது என்பதை விட தன்னைச் சுற்றியுள்ள சமூகத்தின் முன்பு தாங்கள் "வளமிக்கவர்கள்" என்று காட்டுகிற மனப்பாங்கே உள்ளது. அதில்தான் அந்தஸ்து அடங்கியுள்ளது என நினைக்கிறார்கள். எதிர் பாலியலை கவர்வதற்கும் மயக்குவதற்குமாகவும் பொருட்களை வாங்கிக் குவிக்கிறார்கள். இதைத்தான் "பகட்டான நுகர்வு" என வர்ணிக்கிறார் வெப்லன். மகிழ்ச்சி எனச் சொல்லி பொருட்களை வாங்கிக் குவித்தாலும் பெரும்பாலும் அவர்கள் வாங்கிக் குவிக்கிற பொருட்கள் பயனற்று இருப்பதைக் காணலாம்.

தீர்மானிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் தங்களின் தேவைகளைக் கருதி குறிப்பிட்ட சில பொருட்களை வைத்துக் கொள்வதே சமூக நுகர்வு (Social Consumption) ஆகும். உதாரணமாக ஒருவர் மோட்டார் சைக்கிள் வைத்துக் கொள்ளுதல், செல்போன் வைத்துக் கொள்ளுதல், வீடு வாங்கிக் கொள்ளுதல், தரமான பள்ளிகளில் குழந்தைகளைப் படிக்கச் செய்தல் ஆகியவைதான் சமூக நுகர்வுக்கான காரணிகள்.

சுற்றத்தினருக்கு இணையாக வாழ வேண்டும். தங்களின் சுற்றத்தார் படிக்க வைக்கிற பாடசாலைகளிலேயே தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். இதை நிறைவேற்ற விடுமுறை நாட்களில் கூட பணிபுரிகிறார்கள். ஓய்வு பெறும் நாள் வரை ஓயாது ஓடுகிறார்கள். ஒருவர் ஓடுவதைப் பார்த்து அடுத்தவர் ஓடுகிற சமூகமாகத்தான் நுகர்வு மனநிலை இவர்களை மாற்றியுள்ளது.

இந்த நுகர்வுப் போட்டா போட்டி மனநிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். நுகர்வு வெறிகொண்டு இயற்கையிடமிருந்து விலகிச் செல்லச் செல்ல மானுட சமூகத்தின் மகிழ்ச்சிநிறை வாழ்வும் மனிதனிடமிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கும்.

- ஆசிரியர்

# அனுமதி பெறாத சிறுவர் இல்லங்கள் இழுத்து மூடப்படுமென எச்சரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள அனுமதி பெறப்படாத சிறுவர் இல்லங்கள் இழுத்து மூடப்படும் என வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஜோசப் ஜெயக்கெனடி நேற்றுத் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் அதிகரித்துள்ளமை மற்றும் சிறுவர் இல்லங்களின் நிலைமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு வடமாகாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வின் அடிப்படையில் வவுனியா மாவட்டமே அதிகளவிலான சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியிருந்தது.

கிராம மட்டத்தில் உள்ளவர்கள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பல்வேறுபட்ட அறிவைப் பெற்றிருக்கின்றார்கள். குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றால் எவ்வாறான நடைமுறையை கைக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படை அறிவினைக் கொண்டுள்ளனர். இதன் காரணமாக கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக துஷ்பிரயோகம் தொடர்பில் அறிக்கையிடுவது அதிகரித்துள்ளது.

இதேவேளை ஏனைய மாவட்டங்களில் இல்லாத அளவிற்கு வவுனியா மாவட்டத்தில் சிறுவர் இல்லங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. தற்போது சிறுவர்களைக் குடும்பங்களுடன் இணைப்பது மாகாண அமைச்சுக்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் என்பவற்றின் பிரதான செயற்பாடாக உள்ளது. அந்த வகையில் பதிவு செய்யப்படாத பல சிறுவர் இல்லங்கள் தற்போது மூடப்படுகின்றன. 6 சிறுவர் இல்லங்கள் மாத்திரமே வவுனியாவில் பதியப்பட்ட சிறுவர் இல்லங்களாக உள்ளன. எனவே மேலதிக அனைத்து இல்லங்களையும் இழுத்து மூடுவதற்கான நடவடிக்கையை வடமாகாண சிறுவர் நன்னடத்தை பணிப்பாளர் செல்வி உமா மேற்கொண்டு வருகின்றார்.

இது வவுனியாவிற்கு மாத்திரமல்ல ஏனைய மாவட்டங்களுக்குமாக உள்ளது. இதற்கென முதற்கட்டமாக கடந்த வாரம் பணிப்பாளரினால் அனைத்து சிறுவர் இல்ல முகாமையாளர்களையும் அழைத்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பதியப்படாத சிறுவர் இல்லங்களை மூடுவது தொடர்பாகவும் 18 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்குத் தொழிற்பயிற்சியை வழங்குவதற்கும் அதன் பின்னர் அவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதற்கும் அதனூடாக குடும்பமயமாக்கலுடன் சமூக மயப்படுத்தும் வேலைத்திட்டத்தினையும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் சிறுவர் இல்லங்களின் முகாமையாளர்களிடம் கூறியிருந்தார் எனவும் வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி தெரிவித்தார். (160)

## இந்திய மீனவரின் அத்துமீறல் விரைவில் கட்டுப்படுத்தப்படும்

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன் பிடிக்காதவாறு தடை செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி அட்மிரல் உடவத்த தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொன்னாலை கடற்படை முகாமில் நடைபெற்ற கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்கள் மீது இறுக்கமான நடவடிக்கை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார். தற்போது இலங்கைக் கடற்பரப்பில் கடற்படையின் படகுகள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ரோந்து நடவடிக்கையின் பின்னர் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடித்தல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவர்கள் மீண்டும் இலங்கைக் கடற்பரப்பிற்குள் தொழிலுக்கு வராதபடி இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் வடமாகாண கடற்படைக் கட்டளைத் தளபதி மேலும் கூறினார். (25)

# பொதுநலவாய மாநாடு விடயத்தில் இலங்கைக்கு எதிரான செயற்பாடு

### பிரித்தானிய அரசை வலியுறுத்தும் மில்லிபான்ட்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் நடத்தப்படக்கூடாது என்று முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு பிரித்தானிய அரசு ஆதரவு அளிக்க வேண்டும் என பிரித்தானிய முன்னாள் வெளிவிவகார செயலாளர் டேவிட் மில்லிபான்ட் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை விடயங்களை கருத்திற் கொண்டு பிரித்தானிய அரசு இந்த முடிவை எடுக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இலங்கை பாதிக்கப்பட்ட அல்லது சர்வதேச சமூகத்தால் தேர்வு செய்யப்பட்ட நாடு அல்ல என டேவிட் மில்லிபான்ட குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் வெளிவிவகார அமைச்சர் பேர்நாட் குச்நருடன் இலங்கை சென்று முகாம்களுக்கு விஜயம் செய்தபோது தமிழ்ப் பெண்கள் காகிதத்தில் தமது கணவர் மற்றும் பிள்ளைகளின் பெயர்களை எழுதி கண்டு பிடித்துத் தருமாறு கண்ணீர் விட்டதை மறக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

330,000 பொது மக்கள் வன்னி நிலப்பரப்பில் இருந்த நிலையில் 2011 ஐ.நா. அறிக்கையில் ஒரு இலட்சம் பேர் கொல்லப்பட்டுவிட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் அமைப்பும் சர்வதேச சட்டங்களை மீறி செயற்பட்டுள்ளதென டேவிட் மில்லிபான்ட சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலகின் ஆச்சரியத்தை நோக்கிச் செல்லும் அரசு

### கூறுகிறது ஐ.தே.க.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மின் கட்டணம் உயராது எனக் கூறுகின்ற போதும், அரசாங்கம் மின் மற்றும் பஸ் கட்டணங்களை அதிகரிக்க தயாராவதாக ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அநாவசிய பொருட்களுக்கு வரி அறவிட்டு, அத்தியாவசிய பொருட்களின் விலையை உயர்த்தி அபிவிருத்தி எனும் எண்ணத்தை தோற்றுவித்து மக்களை கஷ்டத்தில் தள்ளும் அரசாங்கம் ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கியல்லாது உலகின் ஆச்சரியத்தை நோக்கிச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின் கட்டண அதிகரிப்பு குறித்து பெறப்படும் மக்கள் கருத்தின் முடிவை எதிர்காலத்தில் வெளியிட வேண்டும் என்றும், மின் கட்டண அதிகரிப்புக்கு மக்கள் ஒருபோதும் இணங்க மாட்டார்கள் எனவும் கயந்த கருணாதிலக குறிப்பிட்டார்.

மக்களை கஷ்டத்தில் வீழ்த்தாது மத்தல மற்றும் அம்பாந்தோட்டை அபிவிருத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்வும் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் அபிவிருத்தியோடு மக்கள் கஷ்டத்தில் தள்ளப்படவில்லை எனவும் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

**சர்வதேச அரங்கிற்கு இப்போது இழுத்து வரப்பட்டிருக்கும் இனப்பிரச்சினை சுதந்திரமாகத் தீர்வதற்கு சிங்களவர்களும் மற்றும் முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டும், மற்றும் எந்த நாட்டுக்கு இன்னமும் ஆளணி அதிக அளவில் தேவைப்படுகிறதோ அந்த நாட்டுக்கு செல்பவர்கள் தங்கள் சொந்த நாட்டு அரசியலை சொந்த நாட்டிலேயே விட்டுவிட்டுச் செல்லவேண்டும்.**

## என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து

பொருத்தமற்றதாக மாறிவருவது அதிகரித்துள்ளது. அது தாங்கள்தான் விஷயத்தை தூண்டி வருவதாக எண்ணி மகிழ்வதற்கு அவர்களுக்கு நன்றாக இருக்கலாம் - அத்தகைய மாயையை, ரி.என்.ஏ உட்பட்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சியினர்கள் இனிமேலும் பின்பற்றுவதாகத் தோன்றவில்லை மற்றும் உலகம் அவர்கள் பின்னாலிருந்து அழைப்பு விடுக்கிறது, மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற மோசமான அலையை விளக்கங்கள், அக்கறைகள், மற்றும் நடவடிக்கைகள் என்பனவற்றுக்காக காத்திருக்கப் போவதில்லை. கடந்த வருடம் இலங்கை ஒரு வாக்களிக்கும் அங்கத்துவத்துக்கான தகுதியை கொண்டிருக்கவில்லை. இந்த வருடமும் அந்த உரிமை அதற்கு இல்லை.

ஒரு சில விதிவிலக்குகளை தவிர்த்து அங்கு நடப்பதெல்லாம் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு ஏற்பாடான கணிப்புகள்தான், அவை பாதிக்கப்பட்ட நாட்டின் நடத்தை மற்றும் அக்கறைகளை அடிப்படையாகக் கொண்டவை


# மனித உரிமை மீறல்களின் மனசாட்சியை உலக நாடுகள் உட்புறமாகவும் பார்த்தல்!

எதிரிடையாக இருந்தாலும் இதுதான் உண்மை. இலங்கையிலுள்ள தமிழர்கள் விடயமாக முழு உலகமுமே ஒருவிதத்தில் போராட்டம் நடத்தும்போது, தமிழர்களின் முன்னணி அரசியல் அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனக்குள்ளே சண்டை போடுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. அல்லது அப்படித் தோன்றுகிறது. இனப்பிரச்சினை மற்றும் அதன் சகல வெளிப்படுத்தல்களும் அவர்களது கைகளை விட்டுப் போய்விட்டது, அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அவர்களின் வழக்கமான உள்ளகக் கோரிக்கையான தேசிய தேர்தல் திணைக்களத்தில் ரி.என்.ஏ யினை ஒரு தனியான அரசியல் கட்சியாகப் பதிவுசெய்ய வேண்டும் என்கிற கோரிக்கையை திருப்பி எழுப்புவதை தவிர, வேறுவிடயம் எதுவும் கைவசம் இல்லை போலத் தெரிகிறது.

இலங்கையிலுள்ள தமிழ் ஊடகங்களின் தகவல்களின்படி, திரும்பவும் யுத்தத்துக்கு பின்னான கோரிக்கையாக, ரி.என்.ஏ யில் உள்ள இலங்கை தமிழரசுக் கட்சியை (ஐ.ரி.ஏ.கே) சாராத நான்கு கட்சிகளும் ரி.என்.ஏக்குள் உள்ளடக்கப்பட்ட ஒரு அரசியல் அடையாளத்தை கோருகின்றன. எனினும் ஐ.ரி.ஏ.கே எனப்படும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கு - (சர்ச்சைக்குரியதாக அதனை ஆங்கிலத்தில் பெடரல் கட்சி என அதன் நிறுவனரான காலம் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு ஏனையவர்களாலும் அப்படியே பின்பற்றப்பட்டு வந்துள்ளது) அது எதுவும் தேவையில்லை. அந்தக் கட்சியின் தேர்தல் அடையாளமாகிய 'வீடு' சின்னத்தைத்தான், ரி.என்.ஏ பின்பற்றி வருகிறது, அதனால் அதன் ஆதிக்க அடையாளத்தை எந்த வகையிலும் விட்டுக் கொடுக்கவோ அல்லது நீர்த்துப் போகச் செய்யவோ அது விரும்பவில்லை. அதேபோல ஒன்றில் அதன் தலைமைப் பொறுப்பு அல்லது அதன் பணி நிலை அந்தஸ்து ஆகிய எதனையும் இப்போதோ அல்லது எப்போதுமே விட்டுக்கொடுக்கவும் அது தயாரில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியை சேராத பிரிவினர் குறிப்பாக நாட்டிற்கு வெளியில் உரத்து சத்தம் இடுவதால், இது நாட்டின் தமிழ் அரசியலில் பல பின் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் புலம் பெயர் சமூகத்திலுள்ள சில கூறுகள், இலங்கை தமிழரசுக் கட்சி பின்பற்றும் காந்தீய வழியினைக் காட்டிலும் எல்.ரீ.ரீ.ஈ யின் தத்துவங்களிலும் மற்றும் கொள்கைகளிலும் அதிகம் பற்றுள்ளவர்களாக உள்ளனர். ஒரு காலத்தில் போராளியாக இருந்தவர்களான, தமிழரசுக் கட்சியினை சாராத ரி.என்.ஏ பங்காளர் களர்களின் பேச்சுக்களிலிருந்து கிரகித்துக் கொள்ளக் கூடியது, இந்த மாதிரியான புலம்பெயர் பேச்சுக்கள்தான் மிதவாதத்தை காட்டிலும் கட்சியிலும் மற்றும் சமூகத்திலும் அதிகம் மேலோங்கி நிற்கிறது என்று. அவர்களின் எண்ணிக்கை பெரிதுபடுத்தக் கூடிய அளவுக்கு இல்லை, ஆனால் சில்லுகள் கீழிறங்கும்போது, மிதவாத போக்குள்ளவர்களுக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும். அல்லது அனுபவங்கள் அப்படி இருந்தால் உணர்வுகளும் அப்படியே இருக்கும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையேற்றுள்ள அரசாங்கம், விரோதமான பெரும்பான்மையான சிங்கள அரசியலுக்குள், பாரம்பரியமான ஐ.தே.க, ரி.என்.ஏ மற்றும் ஏனைய கட்சிகளின் புரவலர்களுடனும், அவர்கள் வாக்குகளை பங்கிடுவதில் பெரியளவு சேர்க்கையை ஏற்படுத்தாவிட்டாலும்கூட, அவர்களுடனும் கூட்டணி ஏற்படுத்துவதை பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது அரசாங்கம் ஜெனிவா முன்னிலையில் இன்னும்கூட இலகுவாக மூச்சுவிட முடியும் ஏனெனில் அங்கு பெரிதாக ஒன்றும் நடக்கப் போவதில்லை, அல்லது பெரிதாக எதையும் இழக்கப்போவதில்லை. உள்நாட்டின் முன்னிலையிலும் இதே விடயம்தான். நீண்ட காலமாக ஒழுக்கமுறை தவறியதாகவும் மற்றும் ரி.என்.ஏ பங்காளிகளைக் காட்டிலும் இன்னும் அதிகம் பிளவுபட்ட நிலையிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியினால் தற்போது மகிந்த ராஜபக்ஸ தலைமையிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - பொதுசன ஐக்கிய முன்னணி கூட்டணிக்கு எதிராக தேர்தல் சவால் விடுவதற்கு ஒரு வழியுமில்லை.




போருக்குப்பின் மாதங்கள் மற்றும் வருடங்கள் ஓடி மறைந்துவிட்ட பின்னரும் முக்கியமாக உள்நாட்டுப் பிரச்சினையாக கருதப்பட வேண்டிய ஒன்று இப்போது சர்வதேசத்தின் கவலைகளாக எழுந்துள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மீதமுள்ள தமிழ் அரசியற் கட்சிகள் மற்றும் சமூகங்களுக்கு அதில் ஒரு சிறிய பங்கு அல்லது ஒரு பங்குமே இல்லை. ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின்னர், தமிழ் புலம்பெயர் சமூகம் கூட உலகளாவிய திட்டத்துக்கு சேர்ந்த சர்வதேச தூதர்கள் அங்கு தங்கள் ஏலத்தை நடத்துகிறார்கள். இதன் மறுபக்கம்தான் இலங்கையிலும் நடக்கிறது அதுவும் கூட உண்மையாக இருக்கலாம்.

மனித உரிமை மீறல்கள்தான் உலகமெங்கும் மனச்சாட்சியை உசுப்புவதற்கான ஆணை என்றிருந்தால், இந்த தொண்டு நிறுவனங்கள் யாவும் உட்புறமாகப் பார்த்து, பொறுப்புக்கூறல் மற்றும் பாதுகாப்புக்கான உரிமை போன்ற பொறுப்புக்கான விடயங்களை இதே வீரியத்துடன் காட்சிப் படுத்த வேண்டும், ஏற்கனவே இந்த பாதுகாப்புக்கான உரிமை பற்றிய விடயத்திற்கு ஆப்கானிஸ்தான் ஒரு உதாரணமாகத் திகழ்கிறது, ஆனால் அடுத்த வருடம் முதல் அங்குள்ள மக்களை யார் காப்பாற்றப் போகிறார்கள், மற்றும் அதற்கான பொறுப்பை யார் ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்? இதன் கருத்து இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் தீர்க்கப்படக்கூடாது என்பதோ மற்றும் வரிசைப் படுத்தப் படாமல் அப்படியே விட்டுவிட வேண்டும் என்பதல்ல.

**உலகமே தமிழர்களின் பிரச்சினைகளுக்காக போராட்டம் நடத்தும்போது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் கட்சிகள் தம்முள் போராட்டம் நடத்துகின்றன.**

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தமுறை மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை, கடந்த வருடத்தின் ஒதுக்கீடுகள், அல்ல, ஆனால் சம்பந்தமில்லாத மூன்றாம் தரப்பினர் அமெரிக்க அனுசரணையுடனான பிரேரணைக்கு சார்பாகவும் அல்லது எதிராகவும் உள்நாட்டு அரசாங்கங்கள்மீது, நடத்தும் தள்ளுகை மற்றும் அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் அல்லது இலங்கையின் நிலையில் எந்த நாடு இருந்தாலும் இதுதான் நடக்கும்.

இறுதிக் கணிப்பில் இலங்கை உலகின் ஏனைய நாடுகளை சார்ந்திருக்க தேவையில்லை. அது இலங்கை மக்களையும், மற்றும் இலங்கையர்களுக்கு பின்னால் அணி திரள்வதை தெரிவு செய்த மக்களையும் மட்டுமே சார்ந்த விடயம். இலங்கைத் தமிழர்கள் விடயத்தைப் பொறுத்த மட்டில் தீர்க்கப்படாதவை இன்னும் அதிகம் இருக்கிறது, ஆனால் அதற்கு இன்னும் பல தசாப்தங்கள் போக வேண்டும் சர்வதேச அரங்கிற்கு இப்போது இழுத்து வரப்பட்டிருக்கும் இனப்பிரச்சினை சுதந்திரமாகத் தீர்வதற்கு சிங்களவர்களும் மற்றும் முஸ்லிம்களும் ஒன்றிணைய வேண்டும், மற்றும் எந்த நாட்டுக்கு இன்னமும் ஆளணி அதிக அளவில் தேவைப்படுகிறதோ அந்த நாட்டுக்கு செல்பவர்கள் தங்கள் சொந்த நாட்டு அரசியலை சொந்த நாட்டிலேயே விட்டுவிட்டுச் செல்லவேண்டும். வளைகுடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பணிப்பெண்களாகவும் தொழிற்சாலை தள உதவியாளர்களாகவும் கடினமாக உழைப்பவர்களின் பிள்ளைகள் ஒரு புதிய உலகிற்கான உருமாற்றத்துக்கு ஏற்ற தகுதிகளைப்பெற்று ஒரு புதிய ஆரம்பத்தை தொடங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் அதன் தற்போதைய கவலைகளை, பூகோள அரசியல் மற்றும் உலகளாவிய அரசியல் இரண்டையும் அவற்றின் சூழ்நிலைகளுக்கு பொருத்தமாக பூகோள மூலோபாயத்துடன் வெவ்வேறாக இணைத்து, வளர்ந்து வரும் யதார்த்த நிலைக்கு ஏற்றபடி அதை மாற்றியமைப்பதற்கான காலம் இன்னமும் கடந்துவிடவில்லை. தமிழர்கள் விரும்புவதும், யுத்தத்துக்கு பின்னான நடவடிக்கையாகவும், கணிசமானளவு அதிகாரப் பகிர்வை உட்படுத்திய ஒரு அர்த்தமுள்ள ஒரு தீர்வினை இனப்பிரச்சினைக்கு வழங்குவதற்கு ஏற்றபடி தனது சொந்த நிலைப்பாட்டை அரசாங்கம் மாற்றிக்கொள்வதற்கான காலமும் இன்னமும் கடந்துவிடவில்லை.

இனப்பிரச்சினையை சர்வதேசமயமாக்குவதால், அது செல்லும் வழி அதன் சொந்த வரம்புகளைக் கொண்டதாக உள்ளது. விரைவாகவோ அல்லது தாமதமாகவோ தமிழர்கள் அதைக் கற்றுக்கொள்ள நேரிடும்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்; தணிக்கும் முயற்சியில் இந்தியா

இலங்கைத் தமிழர் விவகாரத்தைப் பொறுத்தவரை இந்தியா ஒரு தயக்கத்துடனேயே செயற்பட்டுவந்துள்ளதாக தெற்காசிய விவகாரங்களுக்கான ஆய்வாளரான பேராசிரியர் சகாதேவன் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை குறித்த தீர்மானத்தில் கூட கடந்த தடவை அழுத்தங்களின் பேரில் தான் இந்தியா தீர்மானத்தை ஆதரித்ததுடன் அந்தத் தீர்மானத்தில் இருந்த வார்த்தைகளைத் தணிக்கும் வகையிலும் அது செயற்பட்டது என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

இந்திராகாந்தி போல ஒரு பலமான தலைமைத்துவம் இந்தியாவில் இல்லாத காரணத்தினால், அங்கே அதிகாரவர்க்கத்தின் தகவல்களின் அடிப்படையில் பயந்தாங்கொள்ளித்தனமான முடிவுகளை அது எடுப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இலங்கையில் நடந்த சம்பவங்கள் என்னவென்று இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும். ஒரு தார்மீக அடிப்படையில் என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்தியாவுக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவும் தேவையில்லை. இத்தகைய தீர்மானங்கள் காரணமாக இலங்கை இறங்கிவரத்தொடங்கியிருப்பதாகவும் சுட்டிக்காட்டுகிறார்.

இலங்கை விடயத்தில் அந்த நாட்டுக்கு எதிராக வாக்களித்தால், அதனால் இந்தியாவுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது.அதனை இந்தியத் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையில் இலங்கையில் இந்தியா எந்தவிதமான போரையும் நடத்தவில்லை, நீங்கள் நடத்துங்கள் என்று இலங்கைக்கு கூறிவிட்டு வாயை மூடிக்கொண்டு இருநதது என்பது உலகுக்கே தெரிந்த விடயம் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியாவுக்காக தானே போரை நடத்தியதாக ஏற்கனவே கூறிவிட்டதால், இந்தியா மீது இந்தப் போர் குறித்த பழி வந்துவிடும் என்று அது பயப்படத் தேவையில்லை



அதேவேளை, இந்தத் தடவைகூட இலங்கைக்கு எதிராக வரக்கூடிய தீர்மானத்தைத் தணிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடலாம் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார்

## இராணுவத் தொடர்பை அதிகரித்துவரும் சீனா

இலங்கையுடனான இராணுவ தொடர்புகளை சீனா அதிகரித்து வருவதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சீனாவின் பாதுகாப்பு அமைச்சர் லியாங் கோங்லீ இலங்கை வந்திருந்த போது, தென்னாசிய பகுதிகளில் இராணுவ தொடர்புகளை வலுப்படுத்த சீனா முக்கியத்துவம் வழங்குவதாக தெரிவித்திருந்தார்.

எனினும் இது பிராந்திய பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே தவிர ஏனைய நாடுகளை அச்சுறுத்துவதற்காக இல்லை என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே 'இந்து' பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்துசமுத்திரம் மற்றும் ஆப்ரிக பிராந்தியங்களில் சீனா தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருவதாக, வொஷிங்டனிலும், புதுடில்லியிலும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, சீன பாதுகாப்பு அமைச்சு இந்தக் கருத்தை வெளியிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

## முஸ்லிம்களின் சனத்தொகை அதிகரிப்பதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிங்கள பௌத்த சனத் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பொதுபலசேனா அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

சிங்கள பௌத்த சனத் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டு வரும் அதேவேளை, முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்துச் செல்வதாக பொதுபலசேனா அமைப்பின் தேசிய அமைப்பாளர் விதாரன்தெனிய நந்ததேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள சனத்தொகையை திட்டமிட்ட அடிப்படையில் குறைக்கும் நடவடிக்கை 1980களில் இருந்து முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை, ஹலால் தொடர்பில் உலமாக்கள் செய்து வரும் பிரசாரம் பிழையானது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

புனித குர் ஆனில் ஹலால் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதனை உலமாக்கள் பிழையாக வெளிப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கனேடிய தமிழர் மீது குற்றச்சாட்டு கைவிடக்கோருகிறது அரசாங்கம்

விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்ததாகவும், கருவிகளை வாங்க முயற்சித்ததாகவும் குற்றம்சாட்டி, கனேடியத் தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கையை கைவிடும்படி, அமெரிக்காவிடம் அரசாங்கம் கோரியுள்ளது.


இந்தத் தகவலை கனடாவின் நசனல் போஸ்ட் நாளேடு வெளியிட்டுள்ளது.

சுரேஸ் சிறிஸ்கந்தராஜா என்ற கனேடியத் தமிழர் மீது தீவிரவாத குற்றச்சாட்டின் மீது மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள் குறித்து கவலை தெரிவித்து, அரசாங்கம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அசாதாரணமான இந்த வேண்டு கோள் கடிதத்தை அனுப்பியுள்ளது.

கடந்த வாரம் சுரேஸ் சிறீஸ்கந்தராஜாவை பிணையில் விடுவிக்கக் கோரும் மனு நியூயோர்க் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோதே, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கைவிடக் கோரி அமெரிக்காவுக்கு இலங்கை எழுதிய கடிதம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

எனினும் இதனை அடிப்படையாக வைத்து சுரேஸ் சிறீஸ்கந்தராஜா சார்பில் கோரப்பட்ட பிணைக்கு நீதிபதி அனுமதி மறுத்து விட்டார்.

வோட்டர்லூ பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்ற சுரேஸ், விடுதலைப் புலிகளுக்காக அமெரிக்க வங்கிகள் ஊடாக 13 ஆயிரம் டொலர் நிதி சேகரித்ததாகவும், ரமணன் மயில்வாகனத்துடன் இணைந்து இரவுப் பார்வை கருவிகள், இலத்திரனியல் கருவிகள், நீர்மூழ்கி வடிவமைப்பு மென்பொருள்களை வாங்க முயன்றதாகவும் அமெரிக்க சட்டவாளர்களால் குற்றம் சாட்டப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது



## மனித உரிமைகளை குழிதோண்டி புதைத்துவருகிறது அமெரிக்கா

அமெரிக்கா அப்பட்டமான முறையில் மனித உரிமைகளை குழிதோண்டிப் புதைத்து வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. அமெரிக்காவுக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டை சுமத்தியுள்ள அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கையின் போது அப்பாவிப் பொது மக்கள் பலரை சுட்டுக் கொன்றதாக செய்திகள் வந்திருந்தன. ஆயினும் அமெரிக்காவின் இத்தகைய மனித் உரிமைகள் மீறல்களை அநேக நாடுகள் கண்டும் காணாதது போன்று இருக்கும் அதே சமயம் இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிராக அவை குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போகின்றன எனத் தெரிவித்தார்.

## தீர்மான வரைபில் திருத்தம் பரிந்துரைத்ததா அரசு?

(கொழும்பு)

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மான வரைபில் திருத்தங்களை செய்யுமாறு இலங்கை அரசாங்கம் பரிந்துரைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு எதிரான திருத்தம் செய்யப்பட்ட தீர்மான வரைபை உறுப்பு நாடுகளின பார்வைக்காக அமெரிக்கா வெளியிட்டுள்ளது.

இந்தவரைபில், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக விசாரணை நடத்தக் கோரும் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை வரவேற்பதாக கூறப்பட்டுள்ளது.

தீர்மானத்தில் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டதற்கு இலங்கை இராஜதந்திரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே, அமெரிக்கத் தீர்மான வரைபில் சில திருத்தங்களை அரசாங்கம் பரிந்துரைத்துள்ளதாக அறிய முடிவதாக அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை ஜெனிவாவில் இந்தத் தீர்மானம் தொடர்பாக ஆலோசிக்க அமெரிக்கா நடத்திய கூட்டத்தில், இந்தத் தீர்மானத்தை இலங்கை முற்றாக நிராகரிப்பதாகவும், இதுகுறித்து அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என்றும் ஜெனிவா வுக்கான அமெரிக்கத்தூதுவர் எலீன் டோனஹேயிடம் இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரியசிங்க கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

## இலங்கையில் குடும்ப அரசியல் உடன்பட மறுக்கும் சந்திரிக்கா



இலங்கையில் குடும்ப அரசியல் இடம்பெறுவதில் தமக்கு உடன்பாடு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதனால் தமது இரண்டு பிள்ளைகளையும் அரசியலை தெரிவு செய்ய வேண்டாம் என்று தாம் அறிவுரை வழங்கி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் ஆட்சியில் இருக்கும் போதே எனது சகோதரர்கள் பிள்ளைகள் எல்லோரும் அரசியலில் இருப்பதை நான் விரும்பவில்லை.

எனது பிள்ளைகளும் இலங்கை மீது பற்று வைத்துள்ளனர்.

எனினும் இலங்கைக்கு சேவை செய்ய அரசியல் தவிர வேறு பல்வேறு வழிகள் உள்ளன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனது இரண்டு ஜனாதிபதி தவணையும் நிறைவடைந்துள்ள நிலையில், நான் வெவ்வேறு வழிகளில் இலங்கைக்கு சேவையாற்றி வருகின்றேன்.

தற்போதைய அரசியல்வாதிகள் நாட்டின் வளங்களை சுரண்டி வருகின்றனர்

அரசியலை பிரதான வருமான வழியாகக் கொண்டு சிலர் செயற்படுகின்றனர்.

சமூகத் தொண்டு ஆற்றுவதற்கு அரசியல் அதிகாரம் அவசியமில்லை.

சமூக சேவை மக்கள் தொண்டு என்ற போர்வையில் அரசியல்வாதிகள் நாட்டின் வளங்களை சுரண்டி வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்

## இலங்கையில் நல்லிணக்க முயற்சி தொடர்ந்து கேள்வி எழுப்பும் பிரிட்டன்

(கொழும்பு)


நிலக்கண்ணி வெடி அகற்றல், அபிவிருத்தி, சிறுவர் போராளிகள் போன்ற விடயங்களில் இலங்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை நான் இலங்கைக்கு விஜயம் செய்தபோது நேரடியாகவே பார்வையிட்டேன் எனினும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக தொடர்ந்தும் பிரிட்டன் கேள்வி எழுப்புமென அந்நாட்டின் சால்டாரி நகரப் பிரபு வெலாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், வடக்கில் இராணுவ பிரசன்னத்தைக் குறைத்தல் மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம் போன்ற விடயங்கள் குறித்து தொடர்ந்தும் பிரித்தானியா வலியுறுத்தும்

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து இலங்கை அரசாங்கம் கணிசமான அளவு சவால்களை எதிர் நோக்கி வருகிறது. இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் எவ்வாறான பிரதிநிதித்துவத்தை செய்வதென்பது குறித்து இன்னமும் தீர்மானிக்கப் படவில்லை

எவ்வாறெனினும், பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை பெரும் அதிருப்தி அளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பொய்யுள்



— மூலபாரதி

## மறந்தா போச்சு?

சனல்கள் காட்டுச் சங்கதிப் பங்கினர்
சங்கைக் குலகை திசையுந் திருப்ப
சலனம் இல்லாது சருகா மிதக்கிறார்
சாட்சி மனதில் நிழலாய் உறுக்கும்!

எதுக்கும் கிறுங்கா இலங்கை அரசு
இருப்ப தற்கெது இலக்காய் உண்டு?
அதுகள் அந்தப் பங்குடை யார்க்கும்
அத்துபடி இல்லா ஆகுமா சங்கதி?

நீலிக் கண்ணீர் கண்துடைப் புடனாம்
நிரவுதல் கூடும் ஜெனிவாக் கூட்டம்
போலி வேடம் போடுகின்ற இந்தியா
போரதில் செய்ததை மறந்தா போச்சு?

# முரசின் இன்றைய பலன்

**12.03.2013 - செவ்வாய்க்கிழமை)**

நந்தன வருஷம் மாசி மாதம் 28 ஆம் திகதி.
நட்சத்திரம் பூரட்டாதி மரணம் பிற்பகல் 12.55 வரை. திதி பிரதமை பின்னிரவு 1.53 வரை. இராகுகாலம் 3.22 - 4.52 வரை.
சுபநேரம் 10.52 - 12.22 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | விலகி சென்றவர்கள் வலிய வருவர். கேட்ட பணம் கிடைக்கும். வீடு, வாகன திருத்தம். திடீர் லாபம். உழைப்பிற்கு அங்கீகாரம். |
| ரிஷபம் | அலைச்சல், டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் நிம்மதி. உறவினர்களால் ஆதாயம். சக ஊழியர்கள் உதவி. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். |
| மிதுனம் | உங்கள் வார்த்தைக்கு மதிப்பு. அரச அலுவல் நன்மையாகும். பிரபலங்கள் அறிமுகம். வழக்கில் திருப்பம். உபரி வருமானம். |
| கடகம் | கூடுதல் வேலைச்சுமை. குடும்ப விஷயங்களில் கூடுதல் ஈடுபாடு. பணவரவு அபரிமிதம். எதிர்பார்த்த உதவி தாமதம். பிள்ளைகள் சுபசெய்தி. |
| சிம்மம் | அன்றாடப் பணியில் மாற்றம். நண்பர்களுடன் அதிக நேரம். தொழில் அபிவிருத்தி. அளவான வருமானம். குடும்பத்தில் புதிய செலவு. எதிர்ப்பிலிருந்து விலகு. |
| கன்னி | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மனநிறைவு. ஆதாய பணவரவு. |
| துலாம் | திட்டமிட்டவை நிறைவேறும். கடும் முயற்சிக்குப் பலன். பணவரவு சீராக இருக்கும். முக்கிய பொருட்கள வாங்குவீர்கள். கூடுதல் மூலதனம். பெருமை. |
| விருச்சிகம் | குடும்ப சிக்கல் தீர்ப்பதில் நாள் செல்லும். வரவும் செலவும் சமமாகும். கடன் நேரும். உணவு கட்டுப்பாடு நல்லது. மனதிலும் உடலிலும் வருத்தமிருக்கும். |
| தனுசு | அடுத்தவர் நலனில் அக்கறை. கூடுதல் உழைப்புக்கு பலன். போக்குவரத்தில் கவனம். சேமிப்பு செலவாகும். வெளியூர் பயணத்தால் ஆதாயம். |
| மகரம் | புதிய எண்ணங்கள் செயலாகும். உறவினர், நண்பர் ஆதரவு. பழைய நண்பர் சந்திப்பு. திறமை வெளிப்படும். முயற்சிகள் பலிதமாகும். தாராள பணவரவு. |
| கும்பம் | கடந்தகால நினைவு. பெற்றோரின் விருப்ப நிறைவேற்றம். விட்டுக் கொடுப்பீர்கள். சூழ்ச்சி முறியழப்பீர்கள். அனுபவ அறிவு உதவும். |
| மீனம் | பிள்ளைகள் மகிழ்ச்சிப்படுத்துவர். உறவினர்கள் ஆதரவு. கல்யாண பேச்சு. சக ஊழியர் வலிய உதவுவார்கள். உபரி வருமானம். தன்னம்பிக்கை துளிர் |

# புதுவருடப்பிறப்பிற்கு முன்னர் வடமராட்சி கிழக்கிற்கு மின்சாரம்

(வடமராட்சி)

வடமராட்சி - கிழக்கு வத்திராயன், மருதங்கேணி வடக்கு மருதங்கேணி தெற்கு, உடுத்துறை, ஆழியவளை போன்ற கிராமங்களுக்கான மின்சார விநியோக இணைப்பு வேலைகள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் நெறிப்படுத்தலில் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மின்சாரத்தை வழங்குவதற்கான முழு நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமாகிய ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.ஸ்ரீராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்குச்சென்று நலன் புரிநிலையங்களில் தங்கவைக் கப்பட்டு பல இன்னல்களையும், இழப்புக்களையும் சந்தித்த நிலையில், மாணவர்கள் தளராத மனதுடன் படித்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியுள்ளனர்.


அதேபோன்று கல்வியில் மட்டுமல்லாது, விளையாட்டிலும் சோதனைகளை சாதனையாக்கி சிறந்த வீரர்களாக வளர்ந்து தேசிய ரீதியில் மாணவர்கள் வலம்வர வேண்டும்.

இன்றையகால கல்வி நிலையில் தகவல் தொழில்நுட்பம் முக்கிய இடம்பெறுகிறது. அந்த வகையில் இப்பாடசாலைக்கென கணனி வசதியுடனான கல்வி அறிவும் தேவைப்படுகிறது. அதற்கு மின்சாரம் இல்லாத சூழல் இருந்து வருகிறது.

இருப்பினும் மருதங்கேணி, தாளையடி அதேபோன்று மாமுனை, செம்பியன்பற்று ஆகிய கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக முதல்கட்டமாக மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வத்திராயன் மருதங்கேணி வடக்கு மற்றும் தெற்கு உடுத்துறை, ஆழியவளை போன்ற கிராமங்களில் வீடுகளுக்கான மின்சார விநியோகம் சித்திரைப் புத்தாண்டை அண்டிய காலத்திற்குள் துரிதமாக வழங்கப்படவுள்ளது.

இதற்கான வேலைகள் அமைச்சரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றுவருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (116)



கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் உள்ள முள்ளியின் இரு பாலங்களின் புனரமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம். (130)

## கூட்டுறவுச் சங்க கடைத்தொகுதி; திறப்பு விழா எப்போது?

கொடிகாமம் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான நான்கு கடைத் தொகுதியானது கட்டிடப் பணிகள் முடிவுற்று பல மாதங்களாகியும் இதுவரை திறப்பு விழா நடைபெறாமல் உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ப.நோ. கூட்டுறவுச் சங்கங்கள் பொது மக்களிற்கு சேவையாற்றுவதே முக்கிய குறிக்கோள். ஆனால் பல இலட்சக் கணக்கில் பணம் செலவு செய்து கட்டட வேலைகள் பூத்தியாகியுள்ள நிலையிலும், இதுவரை திறக்கப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுத்து புதிய கடைத்தொகுதியினை திறந்து இலாப நோக்கோடு பொது மக்களிற்கு சேவையாற்றவேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

## முறைசாராக் கல்வி பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முறைசாரப் பயிற்சிப் பிரிவினால் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

6 மாத கால அளவுள்ள வீட்டு மின்னிணைப்பு மற்றும் பொறியியல் சார்ந்த மரவேலை ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் எதிர் வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். பயிற்சி நெறியைத் தொடரவிரும்புவோர் விபரங்களைப் பெற அதிபருடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பகிரங்க சேவை ஓய்வூதியர் நிதிய பருத்தித்துறை சங்க பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்க 3 ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக கணக்காளர் கி.யோகேந்திரன், உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நிதியத் தலைவர் இ.ஸ்ரீ சக்திவேல், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதிய நிதியச் செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்னர்.

அன்றையதினம் 2012 டிசம்பர் மாதம் வரை உயிரிழந்த சங்க அங்கத்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்படும். அத்துடன் 2013 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாசபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. புதிதாக சங்கத்தில் இணைய விரும்புவோர் ஓய்வூதிய அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் சமூகமளிக்குமாறு செயலாளர் சி.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (109)

## 24 மணி நேரமும் ஒளிரும் வீதி மின் விளக்குகள்

(வரணி)

வடக்கு - வரணி அ.த.க.பாடசலை வளாகத்திற்கு அருகில் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் விடாது ஒளிர்வதால் மின்சாரம் வீண் விரயமாவதாக அப்பகுதி பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள வீதி விளக்குகள் பகல் வேளைகளில் அணைக்கப்படாமல் இரவு - பகலாக தொடர்ச்சியாக ஒளிர்ந்து கொண்டிருப்பதாகவும், பொதுச் சொத்து என்றவுடன் இப்படி அலட்சியமாக இருப்பது நியாயமற்ற விடயம் என்றும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வீதி விளக்குகளிற்குரிய ஆழியை திருத்தம் செய்து பகல் வேளைகளில் விளக்குகளை அணைப்பதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# சமநிலையை நோக்கி காலி டெஸ்ட்





(காலி)

பங்களாதேஷ்,இலங்கை அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி - தோல்வியற்ற முடிவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி காலியில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 438 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை பங்களாதேஷ் அணி தொடர்ந்தது. கப்டன் எம். ரஹீம், மொகமட் அக்ஷ்ரபுல் இணை இலங்கைப் பந்து வீச்சாளர்களை மேலும் பலவீனப்படுத்தி இரட்டைச் சதத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் துரதிர்ஷ்டவசமாக மேலும் ஒரு ஓட்டத்தைப் பெற்றிருந்த நிலையில் அக்ஷ்ரபுல் ஆட்டமிழந்தார். ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 267 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. தொடர்ந்து களமிறங்கிய நசீர் உசைன், கப்டன் எம். ரஹீமுடன் இணைந்து இலங்கைப் பந்து வீச்சாளர்களை புரட்டியெடுத்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடி கப்டன் ரஹீம் இரட்டைச் சதமடித்து சாதனை படைத்தார். பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் இரட்டைச் சதம் பெற்ற வீரர் என்ற சிறப்பை ரஹீம் பெற்றுக்கொண்டார். ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடியும் 137 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு முனையில் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டபோதும் மறுமுனையில், துடுப்பாட்ட வீரர்களுக்குச் சொர்க்க புரியாகத் திகழும் காலியில் தனது கன்னிச் சதத்தை பதிவு செய்தார் நசீர் உசைன். இறுதியில் பங்களாதேஷ் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 638 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் ரஹீம் 321 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 22 பவுண்டரிகள் அடங்கலாக 200 ஓட்டங்களையும், மொகமட் அக்ஷ்ரபுல் 417 பந்துகளை எதிர்கொண்டு 20 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 190 ஓட்டங்களையும், நசீர் உசைன் 151 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர, எரங்க, ஹேரத், மெண்டிஸ், டில்சான் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

68 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி நேற்றைய நான்காம்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டில்சான் 63 ஓட்டங்களுடனும், சங்கக்கார 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். இன்று போட்டியின் இறுதி நாளாகும். இலங்கை முதல் இனிங்ஸ் 570/4.

# முன்பள்ளி விளையாட்டு

(கட்டைக்காடு)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்.மேரிஸ் முன்பள்ளியின் வருடாந் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு தாளையடி பங்குத் தந்தை அருட்பணி ம. ஜெசுரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ள இப் போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன், சிறப்பு விருந்தினராக அருட்பணி ஏ. யங்ரீன், கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை அதிபர் த.யோகலிங்கம், முள்ளியான் கிராம அலுவலர் நா. பலசுந்தரம், ஜே.ஆர்.எஸ். நிறுவன இணைப்பாளர் ரி.ஜெஜி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

# கங்குலி அரசியல்வாதியா?

(கொல்கத்தா)

சேவாக் நீக்கப்பட்டதற்கு கப்டன் டோனி தான் காரணம் என நான் ஒருபோதும் கூறவில்லை என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கங்குலி மறுத்துள்ளார்.

முன்னதாக அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளில் இருந்து சேவாக் நீக்கப்பட்டதற்கு டோனிதான் காரணம். சச்சின், டோனி ஆகியோர் பெரிய அளவில் ஓட்டங்கள் குவிக்காத நிலையில் அணியில் தொடரும்போது சேவாக்கை மட்டும் ஏன் நீக்க வேண்டும் என்று கங்குலி கூறியதாக ஊடகங்களில் செய்தி வெளியானது.

இந்த நிலையில் இதை மறுத்துள்ள கங்குலி, பொதுவாக தேர்வுக் குழுக் கூட்டத்தின்போது கப்டன்கள் தங்களின் கருத்துகளை சொல்வார்கள். நான் (கங்குலி), ராவிட், சச்சின், கும்ளே, டோனி, அசார் என உலகின் எல்லா கப்டன்களுமே அதைத்தான் செய்வார்கள். அதற்காக எல்லா நேரங்களிலும் கப்டன்களின் கருத்தைத் தேர்வுக் குழுவினர் ஏற்றுக்கொள்வார்கள் என்று அர்த்தமில்லை. சில நேரங்களில் கப்டனின் கருத்தை கேட்பார்கள், சில நேரங்களில் அதைக் கவனத்தில் கொள்ளமாட்டார்கள். எனவே சேவாக்கின் நீக்கத்துக்கு டோனிதான் காரணம் என்று சொல்வது கடினமானது என்றார்.

# றொனால்டோவின் எழுச்சி வீழ்ந்தது செல்டா

(விகோ)

செல்டா விகோ அணிக்கு எதிரான லா லிகா கால்பந்து லீக் போட்டியில், றொனால்டோ இரண்டு கோல் அடித்து கைகொடுக்க, ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது. ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் லா லிகா கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் லீக் போட்டியில் ரியல் மட்ரிட், செல்டா விகோ அணிகள் மோதின.முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலை வகித்தது. இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட ரியல் மட்ரிட் அணிக்கு 61ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் றொனால்டோ முதல் கோல் அடித்தார். இதற்கு 63ஆவது நிமிடத்தில் செல்டா அணியின் இயகோ அஸ்பாஸ் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். பின், 71ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை ரியல் மட்ரிட் அணியின் றொனால்டோ கோலாக மாற்றி னார்.

கடைசி நிமிடம் வரை போராடிய செல்டா அணி வீரர்களால் கூடுதலாக கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில் ரியல் மட்ரிட் அணி 2 -1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




# டொனால்டின் பதிவு

கால்பந்து வீரர்கள் மரடோனாவும், பீலேயும் ஒருங்கிணைந்தது போன்ற சக்திமிக்கவர் சச்சின் டெண்டுல்கர் எனத் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் புகழாரம் சூட்டியுள்ளார். தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் அலன் டொனால்ட் (வயது-46). சச்சின், கிரிக்கெட்டர் ஓப் த செஞ்சுரி என்ற தலைப்பில் புத்தகத்தை எழுதியுள்ளார். டொனால்டின் கருத்தை எழுத்தாளர் விமல்குமார் பதிவு செய்துள்ளார். இம்மாத இறுதியில் இப்புத்தகம் வெளியாக உள்ளது.

இந்நிலையில் சச்சின் டெண்டுல்கர் பற்றி அலன் டொனால்ட் கருத்துத் தெரிவித்திருப்பதாவது, சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் ஜாம்பவான் என்றால், அது மிகையில்லை. ஒரு டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் கலந்து கொள்கிறார் என்றால், அவரது ஆட்டத்தை வெறும் இரு நாளுக்கு முன்பிருந்து எடை போடக்கூடாது. ஒரு மாதத்துக்கு முன்பிருந்து வரை அவரது ஆட்டத்தை கணித்து எடை போடவேண்டும். அப்போதுதான் அவரை எதிர்கொள்ள முடியும். மேலும், வலது கை அதிவேகப் பந்து வீச்சாளர்கள்தான் அவரது விக்கெட்டை சாய்க்க முடிந்துள்ளது. கால்பந்து ஜாம்பவான்கள் மரடோனா, பீலேயை ஒருங்கிணைத்தால் எப்படி சக்திமிக்க நபராக இருப்பாரோ அதைப் போன்றவர் சச்சின் டெண்டுல்கர். அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றால், இந்த ஆட்டமே விறுவிறுப்பு இல்லாமல் போய் விடும். கிரிக்கெட்டைப் பற்றி பேசினாலே சச்சின் ஞாபகம்தான் முதலில் வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதனையுடன் கிண்ணம்




(லண்டன்)

இங்கிலாந்து பெண்கள் பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடரில் டென்மார்க் வீராங்கனை சாதனையுடன் கிண்ணம் வென்றுள்ளார். கௌரவமிக்க இங்கிலாந்து பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டி பர்மிங்காம் நகரில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் டென்மார்க்கின் டினே பான் 21-14, 16-21, 21-10 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் ராட்சானோக்கை வீழ்த்தி 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வசப்படுத்தினார்.

இதன் மூலம் இங்கிலாந்து போட்டியில் பெண்கள் ஒற்றையரில் அதிக வயதில் மகுடம் சூடிய வீராங்கனை என்ற சிறப்புக்கும் 33 வயதான டினே பான் சொந்தக்காரர் ஆனார். ஏற்கனவே 2008, 2010ஆம் ஆண்டுகளிலும் அவர் இந்தப் பட்டத்தை வென்றிருக்கிறார். இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் லாங் சென் 21-17, 21-18 என்ற நேர் செட் கணக்கில் முதல் நிலை வீரர் மலேசியாவின் சோங் வெய் லீயை சாய்த்து முதல் முறையாக சம்பியனானார்.

# சுருண்டது பாகிஸ்தான்



(புளோம்பாண்டீன்)

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பெருவெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவின் புளோம்பாண்டீனில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 315 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலின் இங்ராம் 104 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 105 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் அரங்கில் இங்ராம் பெற்ற மூன்றாவது சதமாக இது அமைந்தது. மற்றும் ஸ்மித் 30, அம்லா 43, டிவில்லியர்ஸ் 65 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 316 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 190 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இறுதியில் பாகிஸ்தான் அணி 36.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 190 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 38 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கிளைன்வெல் நான்கு மெக்லரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக இங்ராம் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி செஞ்சூரியனில் நடைபெறவுள்ளது. அத்துடன் இத்தொடரை 5-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றினால் ஐ.சி.சி. ஒரு நாள் தரப்படுத்தலில் முதலிடத்தைப் பிடிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உத்தரவைப் பின்பற்றாத வட்சன் உள்ளிட்ட 4 வீரர்கள் நீக்கம்

அணியின் உத்தரவுகளைக் கடைப்பிடிக்காமல் ஒத்துழைப்பு நல்க மறுத்த வட்சன், பட்டின்சன், உஸ்மான் கவாஜா மற்றும் ஜோன்சன் ஆகியோர் இந்திய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் ஆர்தர் தெரிவித்துள்ளார். அணியின் துணைத் தலைவரான வட்சன்,. உஸ்மான் கவாஜா, ஜோன்சன், வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பட்டின்சன் ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பயிற்சியாளர் ஆர்தர் கூறியுள்ளார். இந்திய அணியுடனான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் 0-2 என்று தோல்வியைத் தழுவி கடும் சிக்கல்களை சந்தித்து வரும் அவுஸ்ரேலிய அணி அதிலிருந்து மீள நினைக்கும் தறுவாயில் இது புதிய பிரச்சினையை கிளப்பியுள்ளது. ஹைதராபாத் டெஸ்டிற்குப் பின்னர் அணிக்கு தங்களால் என்ன செய்ய முடியும் என்று 3 விடயங்களை மின்னஞ்சல் அல்லது நேரடி யாக தெரிவிக்குமாறு அனைத்து வீரர்களுக்கும் நிபந்தனை விதிக்கப்பட்டது. மற்ற .எல்லா வீரர்களும் இதனை சரியாக செய்து முடிக்க பட்டின்சன், வட்சன், கவாஜா, மற்றும் ஜோன்சன் எந்தவித பதிலும் இல்லாமல் வாளாவிருந்துள்ளனர். இதனால் அணிப்பயிற்சியாளர் ஆர்தர் அதிர்ச்சியடைந்ததோடு, அதிருப்தி அடைந்துள்ளார்.இந்த விளக்கத்தை அளிக்க 5 நாட்கள் அவகாசம் வேறு அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் இந்த 4 வீரர்களும் இதனைக் கண்டு கொள்ளவில்லை. தரநிலையில் எப்போதும் சமரசம் செய்து கொள்ளமுடியாது என்று கூறிய ஆர்தர் இது மிக மோசமான நடத்தை என்று சாடியுள்ளார்.


# மூன்றாவது சுற்றில்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நடந்து வரும் பி.என்.பி. பரிபாஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரில், ஆடவர் ஒற்றையர் போட்டியில் ரபேல் நடால், ரோஜர் பெடரர் ஆகியோர் 3ஆவது சுற்றில் நுழைந்துள்ளனர்.

2ஆவது சுற்றில் அமெரிக்காவின் ரியான் ஹாரிசனை எதிர்த்து நடால் விளையாடினார். இப்போட்டியில், ஆரம்பத்தில் நடால் சில தடுமாற்றங்களைச் சந்தித்தார். ஆனால், அதன் பின்னர் சுதாகரித்து விளையாட ஆரம்பித்தார். இதனால் ரியானுக்கு பெரிய அளவில் வாய்ப்பு தராமல் 7-6(7-3), 6-2 என்ற செட் கணக்கில் நடால் வெற்றி பெற்றார். இந்தப் போட்டி 33 நிமிடங்களில் முடிவடைந்தது.


மற்றொரு போட்டியில், உஸ்பெகிஸ்தான் வீரர் டெனிஸ் இஸ்டோமினுடன், சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் மோதினார். இப்போட்டியில், அபாரமாக விளையாடிய பெடரர் 6,2, 6,3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றில் நுழைந்தார்.





# 107ஆவது வடக்கின் போர்
# வெற்றியைப் பதிவாக்குமா? சென். ஜோண்ஸ்


**சென். ஜோண்ஸ் கல்லூரி**


ST JOHN'S COLLEGE JAFFNA • CEYLON


ஜே. அமிர்தயன்
(கப்டன்)



பி. துவாரகசீலன்
(துணைக் கப்டன்)



ஜி. அனோஜன்
சகலதுறை வீரர்



பி. பிருந்தாபன்
சகலதுறை வீரர்



எஸ். கபில்ராஜ்
துடுப்பாட்ட வீரர்



என். கிருத்திகன்
துடுப்பாட்ட வீரர்



எம். விந்தாரகன்
சகலதுறை வீரர்



எஸ். கவாஸ்கர்
சகலதுறை வீரர்


ஆர். லோகதீஸ்வர்
பந்து வீச்சாளர்


எம். நிலோஜன்
பந்து வீச்சாளர்


ரி. கபிலன்
பந்து வீச்சாளர்


ரி. சாஜன்
பந்து வீச்சாளர்



கே. சுபர்சன்
பந்து வீச்சாளர்



ஏ. கானமிர்தன்
சகலதுறை வீரர்



ஏ. சுவநீதன்
பந்து வீச்சாளர்


ஆர். பிரிசங்கர்
சகலதுறை வீரர்


எம். ஜெனதர்சன்
பந்து வீச்சாளர்


எஸ். பிரவீன்சன்
பந்து வீச்சாளர்


எஸ். ஜெனி பிளமின்
துடுப்பாட்ட வீரர்



(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படுகின்ற மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 14,15,16 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையில் இடம்பெற்று வரும் இந்தப் போட்டி 107ஆவது ஆண்டாக நடைபெறவுள்ளது.

கடந்த 1904 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் இக்கிரிக்கெட் போட்டி இலங்கை வரலாற்றில் முதன்மை மிக்க தொடராக விளங்கி வருகின்றது. அதாவது இலங்கையில் இரண்டாவதாக ஆரம்பிக்கப்பட்ட தொடராக இத்தொடர் விளங்குகின்றது.

இப்போட்டித் தொடரில் அதிக (34) வெற்றிகளைப் பதிவாக்கியுள்ள அணி என்ற சிறப்பை சென். ஜோண்ஸ் கல்லூரி அணி கொண்டுள்ளது.

இந்த ஆண்டு இடம்பெறும் போட்டியில் வெற்றியைப் பதிவாக்கிக் கொள்ளும் முனைப்புடன் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியின் கள வியூகங்கள் அமையும் என அதன் ஆதரவாளர்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தாண்டில் இதுவரை 14 போட்டிகளில் பங்குபற்றியுள்ள சென் ஜோண்ஸ் கல்லூரி அணி, ஏழு வெற்றிகளைப் பதிவாக்கியிருப்பது அதன் நம்பிக்கைக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையிலேயே அமையும் என அவர்கள் மேலும் நம்புகின்றனர்.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என எதிரணியை மிரளச் செய்யும் ஒரு சிறந்த கலவையாக சென். ஜோண்ஸ் கல்லூரியின் அணித் தேர்வும் இடம்பெற்றிருக்கின்றது.

எனவே, 107ஆவது வடக்கின் போரை வெற்றிகொள்ளும் முனைப்புடனும்,தனது ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலும் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணியின் களவியூகங்கள் அமையும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. (எஸ்.பி.)

## மாத்தளன் அ.த.க.பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி

(யாழ். நிருபர்)

முல்லைத்தீவு-மாத்தளன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.பாடசாலை அதிபர் இ. கெங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் கரைதுறைப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சேய். சோதிகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், விளையாட்டு ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் என அனைவரும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாக மூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (10)

## கனகசபை கேசவமூர்த்தி நினைவு கரப்பந்து இன்று அரையிறுதி ஆட்டங்கள்

(கருகம்பானை)

தெல்லிப்பளை - கருகம்பானை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கனகசபை கேசவமூர்த்தி நினைவு கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மத்தி, அச்சுவேலி ஸ்ரார், புத்தூர் கலைமதி, ஆவரங்கால் இந்து இளைஞர் ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடர் கருகம்பானை இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு 6.30 மணிக்கு மின்னொளியில் காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும், பன்னாலை கணேசன் அணியும் மோதின. இதில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் அணியும், நீர்வேலி ஐக்கியம் அணியும் மோதின. இதில் அச்சுவேலி ஸ்ரார் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.மூன்றாவதாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும், கூவில் சிவானந்தா அணியும் மோதின. இதில் ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. தொடர்ந்து புத்தூர் கலைமதி அணிக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா அணிக்குமிடையில் காலிறுதிப் போட்டி நடைபெறவிருந்தது. இதில் அச்சுவேலி விக்னேஸ்வரா அணி சமுகமளிக்காமையால் புத்தூர் கலைமதி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. அரையிறுதிப் போட்டிகள் இன்று மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும், இதில் பங்குகொள்ளும் அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## வட்டுக்கோட்டையில் இன்று கோட்ட மட்ட மென்பந்து

(வட்டுக்கோட்டை)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைஅணிகளுக்கிடையிலான கோட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணி முதல் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆண்-பெண் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ள இப்போட்டி அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் ஆட்டமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள அணிகளை குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு சங்கானை கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (93)

# 13ஆவது திருத்தச் சட்டமும் கூட்டமைப்பின் தடுமாற்றமும்

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் சுயாதீனமான வாழ்வை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டுவரப் பட்டதே 13ஆவது திருத்தச் சட்டம். எனினும், இதன் மூலம் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்ய முடியாதென்று கூறி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு உட்பட மிதவாத தலைமையான தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதனை நிராகரித்திருந்தது. இவ்வாறு அனைவராலும் நிராகரிக்கப்பட்டிருந்த பின்னணியிலேயே, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், பரந்தன் ராஜன் தலைமையிலான ஈழத் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டிருந்தன.

பிரபாகரன் - பிரேமதாச உடன்பாட்டின் அடிப்படையில் இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர், 13ஆவது திருத்தச் சட்டம் என்பது முளையில் வாடிய பயிரானது. கடந்த 2009 மே வரைக்கும் 13ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபைகளுக்கான அதிகாரங் களை அதிகரிப்பது தொடர்பில் பேச வேண்டிய அவசியம் எவருக்கும் இருந்திருக்கவில்லை. காரணம் விடுதலைப்புலிகள் அதனை அனுமதித்திருக்க வில்லை. விடுதலைப்புலி களின் அழிவுக்கு பின்னர், தமிழ் மக்களுக்கான தலைமைப் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றுவரை 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஒரு தெளிவான நிலைப் பாட்டை அறிவிக்கவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான கிழக்கு மாகாணசபை தேர்தலில் போட்டியிட்ட பின்னர் கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்து வது தொடர்பான உறுதியான கருத்துக்கள் எவற்றையும் தெரிவிக்கவில்லை. சமீபத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மாகாணசபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் அவசி யம் என்று கூறியிருக்கின்றார். 13ஆவது திருத்தச் சட்டத்தினை அடியொற்றிய தீர்வொன்றின் மீது கரி சனைகள் அதிகரித்து வருகின்ற சூழலில்தான் சம்பந்தரின் மேற்படி கருத்தும் வெளிவந்திருக்கிறது.



13ஆவது திருத்தச் சட்டம் தேவையா அல்லது இல்லையா என்னும் விவாதம் மேலெழுந்தபோது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா 13ஆவது திருத்தச் சட்டமூலம் அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு முயற்சியை மேற்கொண்டிருந் தார். மாகாணசபை முறை மைக்கு ஆதரவான நிலைப் பாடுள்ள 32 நாடாளுமன்ற உறுப்பினர்களது கையெழுத்து அடங்கிய மகஜரொன்றையும் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மகிந்தவிடம் கையளித்திருந்தார். இலங்கையின் மிகவும் சக்திவாய்ந்த நபரான பாதுகாப்புச் செயலர், 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்குவதற்கான அழைப்பை விடுத்த சந்தர்ப்பத்தில் டக்ளசின் மேற்படி முயற்சி குறிப்பிடத்தக்கதாகும். இதன் மூலம் மாகாணசபை முறைமையை இல்லாதொழிப் பதற்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவது அவ்வளவு எளிதல்ல என்னும் உண்மை வீதிக்கு வந்தது.

உண்மையில், மேற்படி முயற்சிக்கு கூட்டமைப்பு தலைமையேற்றிருக்க வேண்டும். ஆனால், கூட்டமைப்பின் தலைமையிட முள்ள தடுமாற்றமே, இது போன்ற முயற்சிகளிலிருந்து அவர்களை விலகியிருக்கச் செய்கிறது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சம்பந்தனிடம் இவ்வாறானதொரு பார்வை இருப்பினும் புற அழுத்தங்களை கருத்தில் கொண்டு அவர் பல்வேறு விடயங்களை விழுங்கிக்கொள்ள வேண்டிய இக்கட்டுக்கு ஆளாகியிருகின்றார் போன்றே தெரிகிறது.

13ஆவது திருத்தச் சட்டம் என்பது இலங்கையின் உடனடி அயல்நாடான இந்தியாவின் தலையீட்டினால் கொண்டுவரப்பட்ட ஒரு விடயம். எனவே 13ஆவது திருத்தச் சட்டம் என்பது இரு நாடுகள் தொடர்புபட்ட ஒன்று. வெறுமனே இலங்கை சுயாதீனமாக அதனை நீக்கிவிட முடியாது. உதாரணமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை இந்தியாவை புறம்தள்ளி இலங்கை அரசு நீக்க முற்படுமாயின், இந்தியாவும் கச்சதீவிற்கான ஒப்பந்தத்தை நீக்க முற்படலாம். இதன் காரணமாகவே, இந்தியா தொடர்ந்தும் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வொன்றுக்கான அழுத்தத்தை வழங்கி வருகிறது. இந்த பின்புலத்திலேயே றொபட் ஓ பிளேக் இலங்கை ஜனநாயகத்தில் பின்நோக்கிச் செல்வதற்கான காரணி களில் ஒன்றாக 13ஆவது திருத்தச் சட்டத்தை அடிக்கோடிட்டிருக்கின்றார்.

இதனை சற்று ஆழ்ந்து நோக்கினால் ஒரு விடயம் வெள்ளிடை மலையா- கிறது. இலங்கையில் புரையோடிப்போயுள்ள இன முரண்பாட்டுக்கான அரசியல் தீர்வின் அடிப்படையாக 13ஆவது திருத்தச் சட்டம் இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்க பிரேரணையை இந்தியா ஆதரித்திருக்கின்ற நிலையில்தான் இந்தியாவினால் கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டிய பொறுப்பை அமெரிக்கா கருத்தில் கொள்கின்றது. அமெரிக்க - இந்திய அழுத்தங்களின் பின்புலத்தில், 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு அமுல்படுத்தாது, அதிகாரப்பகிர்வு யோசனை களை அரசாங்கம் தொடர்ந்தும் புறம்தள்ளுமா யின் இரு பக்கத்திலும் அடிப்படைவாத சக்திகளின் கைகளே ஓங்கும்.

**- யதீந்திரா கட்டுரையிலிருந்து.**

# பிழையின்றித் தமிழ் 3

**- ஞானச்செல்வன் -**

**5.** முன்னூறு:

"நான் உனக்கு முன்னூறு ரூபா கொடுத்தேன்" என்றால், முன் - நூறு ரூபா கொடுத்தேன் என்று பொருளாகும். முந்நூறு கொடுத்தேன் என்றால், மூன்று நூறு ரூபா கொடுத்தேன் என்று பொரு ளாகும். மூன்று எனும் சொல்லில் றன்னகரம் வரி: னும் மூன்று + நூறு சேரும்போது, மூன்றில் உள்ள இரண்டு எழுத்தும் கெட்டு (நீங்கி) "மூ" எனும் நெடில் "மு" எனக் குறுகி மு+நூறு = முந்நூறு ஆகும். இலக்கியச்சான்று: "பாரியின் பறம்பு முந்நூறு ஊர் உடைத்தே".

**6.** பண்டகசாலை:

பண்டங்கள் உடைய இடம் பண்டகம் அல்லது பண்டசாலை எனல் போதுமானது. ஆனால் கூட்டுறவுப் பண்டக சாலை என்னும் வழக்கு நிலைபெற்றுள்ளது. அகம் எனின் மனம், வீடு, இடம் எனப் பலபொருள் உண்டெனினும் ஈண்டு இடம் எனப் பொருள் கொள்க. நூல்கள் உடைய இடம் நூலகம் பண்டங்கள் உடைய இடம் பண்டகம். பின் ஏன் சால்ல என்று ஒரு சொல். உணவுச்சாலை என்பது போல் பண்ட சாலை எனலும் சரியாம்.

**7.** பதட்டம்:

நம் மக்களின் பேச்சு வழக்கிலும் எழுத்திலும் பதட்டம் எனும் சொல் நிரம்பப் பயன்பாட்டில் உள்ளது. இச்சொல்லுக்குப் பொருள் இல்லை. இது பதற்றம் என்று இருத்தல் வேண்டும். பதறு, பதற்றம் எனும் சொற்கள் சரியானவை; பொருளுடையவை. இனி, பதட்டம் விட்டு பதற்றம் கொள்ளுவோம்.

**8.** கண்றாவி:

இப்படி ஒரு சொல் எந்த அகர முதலியிலாவது (அகராதி) பார்த்ததுண்டா? இப்படி ஒரு சொல் இல்லவே இல்லை. ஆனால் பத்திரிகை, தொலைக்காட்சிச் செய்திகளில் பார்க்கிறோம். கேட்கிறோம். மிகக் கொடிய காண்பதற்குக் கூடாத காட்சியை இப்படிச் சொல்லி வருகிறோம். இது கண் அராவும் காட்சி. ஆதலின் இச்சொல் கண்ணராவி என்றிருத்தல் வேண்டும். (அராவுதல்- இரும்பால் தேய்த்தல், அறுத்தல்)




ஒற்று மிகுதலும் மிகாமையும்

ஒற்று மிகுதலை வலி மிகுதல் என்று இலக்கண நூலார் சொல்வர். வல்லெழுத்து ஆறனுள் க,ச,த,ப என்னும் நான்கு மட்டுமே மொழி முதல் எழுத்தாக வரும். ஒரு சொல்லிருக்க (நிலை மொழி) மற்றொரு சொல் வந்து சேரும்போது சில இடங்களில் இந்த க,ச,த,ப - என்பவை மிகும். சில இடங்களில் மிகா. சிறந்த தமிழறிஞர்களின் நூல்களைப் படித்தாலே, மிகுதல், மிகாமை பற்றி இயல்பாகவே புரிந்து கொள்ள முடியும்.

எதற்கையா இந்த வம்பு? க்,ச், த்,ப் எதுவும் போடாமல் இரண்டு சொற்களை அப்படியே எழுதிவிட்டால் என்ன என்று கருதுபவர் இருக்கிறார்கள். வாழை பழம், கீரை கறி - படித்துப் பாருங்கள், இயல்பாக உச்சரிக்க முடிகிறதா? வாழைப்பழம், கீரைக்கறி என்று சொன்னால்தான் நிறைவாக உணர்கிறோம். இந்த ஒற்றெழுத்து மிகுவதாலும், மிகாமையாலும் பெரிய பொருள் வேறுபாடு உண்டு என்பதைத் தமிழர் அறிய வேண்டும். பல எடுத்துக்காட்டுகளைத் தரலாம்.

மருந்து கடை - மருந்தைக் கடை

மருந்துக்கடை - மருந்து விற்கும் கடை

ஏழை சொல் - ஏழையின் வார்த்தை

ஏழைச்சொல் - ஏழு எண்ணிக்கையைச் சொல்

வேலை தேடு - ஒரு வேலையைத் தேடிக் கொள்

வேலைத் தேடு - வேல் என்னும் ஆயுதத்தைத் தேடு

நடுகல் - செத்தார்க்கு நடப்படுவது

நடுக்கல் - நடுவில் உள்ள கல், உடம்பு நடுக்கல் (நடுக்குதல்)

சாகாடு - வண்டி

சாக்காடு - சாவு, மரணம்

கைமாறு - ஒருவர் கையிலிருந்து மற்றவர் கைக்கு மாறுவது

கைம்மாறு - நன்றிக்கடன்

பொய் சொல் - பொய் சொல்வாயாக

பொய்ச்சொல் - பொய்யான சொல்

# இந்தச் சுமையே சுமக்க முடியவில்லை...?

ஜெர்மானிய மன்னனான வில்லியம் கெய்சர் தன் அரண்மனைத் தோட்டத்தை விரிவுபடுத்துவதற்காக அருகில் வசித்த ஏழை எளிய மக்களின் வசிப்பிடங்களிலிருந்து நிலங்களைச் சுவீகரித்தான்.

அவர்களுடைய நிலங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு நஷ்டஈடு என்கிற பெயரில் சிறிது தொகையும் கொடுத்தான். அவனை எதிர்த்துக் கேட்க முடியாமல் அவன் கொடுப்பதை வாங்கிக் கொண்டு பேசாமல் இருந்தார்கள்.

அவனுடைய ஆசையும் விரிவடைந்தது. அரணமனைத் தோட்டத்தை மேலும் விரிவுபடுத்த விரும்பினான். சுற்றிலுமிருந்த மேலும் நிலங்களைக் கையகப்படுத்தத் தொடங்கினான்.

இம்முறை ஒரு கிழவி மட்டும் அவளுடைய நிலத்தைத் தரமுடியாது என்று மறுத்தாள்.

அரசன் அவளுக்கு எந்தத் தொகையையும் கொடுக்காமல் விரட்டியடித்தான்.

அவள் அதற்காகப் பயப்படவில்லை. நீதிமன்றத்தில் அரசன் மீது புகாரளித்தாள்.

அப்போது நீதிமன்றத்தின் நீதிபதியாக இபின்பெசின் என்பவர் இருந்தார்.

அவர் அரசனிடமிருந்து கிழவிக்கு அவளது நிலத்தை எப்படியாவது திருப்பிப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்.

அவர் அரசனிடம் சென்றார்.

கிழவியிடமிருந்து அபகரித்த நிலத்திலிருந்து ஒரு பையளவு மண்ணை மட்டும் எடுத்துக் கொள்ள அனுமதி வேண்டினார்.

அரசனும் அதற்குச் சம்மதித்தான்.

நீதிபதி தான் கொண்டு வந்த பையில் மண்ணை நிரப்பிக் கொண்டார்.

அந்த மண் நிரப்பப்பட்ட பையைக் கழுதை மேல் ஏற்ற உதவும்படி அரசனிடம் வேண்டினார் அந்த நீதிபதி.

அரசன் அந்தப் பையை இரு கைகளாலும் தூக்கப் பார்த்தான். ஆனால் அவனால் முடியவில்லை.

இந்தப் பை மிகவும் கனமாக இருக்கிறதே என்று மெதுவாகக் கூறினான்.

அதைக் கேட்ட நீதிபதி சிரித்தார்.

பின்னர், "மன்னா! இத்தனை பெரிய நிலத்திலிருந்து இத்தனை சிறிய பையில் எடுத்த இந்த மண்ணே இவ்வளவு கனம் கனக்கிறதே... கிழவியின் இவ்வளவு பெரிய நிலத்திலிருக்கும் அத்தனை மண்ணையும் ஒரு சேர சேர்த்தால் எவ்வளவு கனமிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்" என்றார்.

மேலும் தொடர்ந்து, "இந்த பையையே உங்களால் தூக்க முடியவில்லையே... இந்தக் கிழவியிடம் அபகரித்த நிலத்திற்காக இறைவன் அளிக்கும் தண்டனையை எப்படித்தான் சுமக்கப் போகிறீர்களோ..?" என்றார்.




வில்லியம் கெய்சருக்கு அப்போதுதான் தான் செய்த தவறு தெரிந்தது.

கிழவியிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுத்தான்.

அரண்மனைத் தோட்டத்துக்காகத் தான் குறைந்த தொகைக்கு எடுத்துக் கொண்ட நிலத்தையெல்லாம் திருப்பிக் கொடுத்தான்.

# அப்படியா!



- யானைகள் மரக்கிளைகளை ஒடித்து வைப்பதன் மூலமும், தந்தங்களால் மரக்கிளைகளை கீறி வைப்பதன் மூலமும், புலிகள் நகங்களால் மரப்பட்டைகளை கீறியும் தமது அடையாளச் சின்னங்களை விட்டுச் செல்கின்றன.
- யானை தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மட்டுமே பிற மிருகங்களுடன் சண்டையிடும்.
- உலகிலேயே அதிக அளவில் உற்பத்தியாகும் காய்கறி உருளைக்கிழங்கு. இரண்டாவது இடம் தக்காளிக்கு.
- தொடர்ச்சியாக மாதுளம் பழம் சாப்பிட்டு வந்தால் வயிற்றைச் சுற்றி சேர்ந்துள்ள கொழுப்பு கரையும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.
- ஒரு டி.எம்.சி. தண்ணீர் என்பது 200 கோடி குடங்களில் நிரப்பப்படும் தண்ணீருக்குச் சமம். அதாவது 2,800 கோடி லீற்றர் தண்ணீர்.
- பதினைந்தாம் நூற்றாண்டை சேர்ந்த ஐரோப்பியர்கள் திருமண மோதிரத்தை கட்டை விரலில் அணிவதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். இல்லறம் செழிப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையே அதற்கு காரணம்.
- அக்மார்க் என்பதன் விரிவாக்கம் Agriculture Mark என்பதாகும்.
- பாலூட்டிகளுக்கு காது வெளியே தெரியும். முட்டையிடும் இனங்களுக்கு காது வெளியே தெரியாது.
- ஆற்றுப் பிரிவின் கடைசிப் பகுதி கால்வாய்: முதற் பகுதி வாய்க்கால்.
- "மாப்பிள்ளை" என்பது கேரளப் பெண்களை மணந்த அரேபியர்களுக்குப் பிறந்த ஓர் இனம்.

# மாடி வீட்டு ஏழை!


எம்.ஜி.ஆரை கதாநாயகனாகப் போட்டு, "மாடி வீட்டு ஏழை" என்ற திரைப்படத்தை, தாமே டைரக்ட் செய்து, தயாரிக்கத் தொடங்கினார் நடிகர் சந்திரபாபு. முதல் நாள் படப்பிடிப்பிலேயே, இருவருக்கும் மோதல் ஏற்பட்டது. எம்.ஜி.ஆர்., மேற்கொண்டு நடிக்க வரவேயில்லை.

அப்போது, "கலை" என்ற பெயரில், ஒரு சினிமாப் பத்திரிகை வெளிவந்தது. அதில், சந்திரபாபு அளித்த பேட்டியில், "உங்களுக்குப் பிடித்த நடிகர்?" என்ற கேள்விக்கு, "இரண்டு பேர், ஒன்று - நான். மற்றொருவர் - சிவாஜிகணேசன்" என்று பதில் அளித்தார். எம்.ஜி.ஆரை கோபமூட்டுவதற்காகச் சொன்ன பதில்! சுவற்றில் அடித்த பந்து திரும்பி வந்தது. எம்.ஜி.ஆரின் அண்ணன், எம்.ஜி.சக்கரபாணி, சந்திரபாபுவிடம் கேட்டார்...

"என்ன, ஒரு பத்திரிகையில், உனக்குப் பிடித்த நடிகர் சிவாஜி கணேசன் தான் என்று சொல்லியிருக்கிறாய்?"

சந்திரபாபு சூடாகச் சொன்னார்: "பின்னே... உங்கள் தம்பி பெயரை சொல்வேன் என்று நினைத்தீர்களா? நெவர்!"

விளைவு - "மாடி வீட்டு ஏழை" படம் நிரந்தரமாக நிறுத்தப்பட்டது. சந்திரபாபு உண்மையிலேயே ஏழையாகிப் போனார்.




ஒருபடத்தில் நடிக்க, ஒரு இலட்ச ரூபாய் சம்பளம் வாங்கியவர் சந்திரபாபு. (அந்தக் காலகட்டத்தில் ஒரு அரச உத்தியோகத்தரின் ஒரு மாதச் சம்பளமே, 150 ரூபா தான்) அடுத்த ஏழு, எட்டு ஆண்டுகளில்,. வயிற்றுக்குச் சோறின்றி, வாழ வழியின்றி, வீட்டு மின்சாரக் கட்டணம் செலுத்தாமல், மின்துறையினர் வந்து, "பியூஸ்" பிடுங்கிவிட்டுப் போன நிலையில், மெழுகுவர்த்தி வாங்கவும் காசில்லாமல், மூன்று இரவுகள் இருட்டிலேயே வாழ்ந்தார்.

எந்த சிவாஜி கணேசனை உயர்த்திப் பேசியதற்காக எம்.ஜி.ஆரின் பகையாளி ஆகி, ஒரு வேளை சோற்றுக்கும் வழியின்றி வதைபட்டாரோ, அதே சிவாஜி கணேசனை, ஒரு நாள் தேடிப் போனார் சந்திரபாபு.

"கணேசா... இப்போது நான் பட வாய்ப்பு இல்லாமல், பட்டினி கிடக்கிறேன். உன் படங்களில் எனக்கு சிபாரிசு செய்து, வாய்ப்பு வாங்கி கொடு. ஏதோ, பிழைத்துக் கொள்கிறேன்..." என்றார்.

சிவாஜி கணேசன் சாவதானமாகச் சொன்ன பதில், "உனக்கு என்னப்பா கஷ்டம்? ஏன் பட்டினி கிடக்கிறாய்? தினமும் என் வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு போ. உனக்கென்று தனியாகவா உலை வைக்கப் போகின்றனர்...."

பதில் சொல்லாமல், கிளம்பிப்போன சந்திரபாபு, விரைவில் காலமானார்.

**(பிரபலங்கள் வாழ்வில் என்ற புத்தகத்தில்)**

# மனித முகமுள்ள நாய்!



அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் உள்ள, மிஸ்வாகா நகரில், ஒரு வினோதமான உருவமுள்ள நாய், விலங்குகள் நல காப்பக அதிகாரிகளால் மீட்கப்பட்டது. இந்த நாய்க்கு, 2 வயது தான் ஆகிறது. இதன் முகம், அச்சு அசலாக, மனிதர்களின் முகம் போல், காட்சி அளிக்கிறது. டிஜு" - பிடுல் ஆகிய இரு, வெவ்வேறு ரக நாய்களின், கலப்பில் பிறந்த இந்த நாய்க்கு, "டோனிக்" என, பெயர் சூட்டியுள்ளனர்.

டோனிக்கை, விரைவில் தத்து கொடுக்கவும், அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதன் புகைப்படம், இணையதளத்தில் வெளியானதை அடுத்து, அமெரிக்கா முழுவதுமிருந்து, அந்த நாயை தத்தெடுக்க, விண்ணப்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

விலங்குகள் காப்பக அதிகாரிகள் கூறுகையில், "வித்தியாசமான தோற்றத்தில் இருப்பதால், இதைப் பார்த்து, பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. மனிதர்களுடன், நன்றாக பழகுகிறது. ரொம்ப சாதுவாக இருக்கிறது. மிகவும் அரிதாகத் தான், இதுபோன்ற நாய்கள் கிடைக்கும்..." என்கின்றனர்.

# யார் என்று தெரிந்திருந்தால்...



புதுச்சேரியில் சுனாமி போல ஒரு புயல் வந்தபோது, அதில் மாண்டவர்களை பத்து இருபதாகச் சேர்த்து வைத்துக் கொளுத்தினார்கள். அப்போது அங்கிருந்த பாரதியோ தம் முண்டாசை அவிழ்த்து அதில் இறந்து போன காக்கை, குருவிகளை சேகரித்து, கடற்கரை மணலில் ஆழப் புதைத்தாராம். காக்கை, குருவி எங்கள் ஜாதி என்று பாடும் யோக்கியதை பாரதிக்கு இருந்திருக்கிறது.

அதுபோல், தம்மை தள்ளி வீழ்த்திய பார்த்தசாரதி கோயில் யானையைப் பற்றி அன்றைய சுதேசமித்திரனில் பாரதியார் இவ்வாறு குறிப்பிட்டார்:

"யானை இன்னார் என்று தெரியாமல் தள்ளிவிட்டது. தெரிந்திருந்தால் தள்ளியிருக்காது. துன்புறுத்தும் எண்ணம் இருந்திருந்தால் கீழே விழுந்ததும் தூக்கி எறிந்திருக்காதா? அப்படியே நின்றதன் அர்த்தம் என்ன? என்னிடம் அதற்குள்ள அன்பே காரணம்"

# கொள்வனவு இல்லாததால் மலிவு விலையில் பால் விற்பனை

## – வேரவில் கால்நடை வளர்ப்போர் அவதி –

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் வேரவிலில் பசுப்பா லினை உரிய விலைக்கு விற்கமுடியாத காரணத்தால் அப்பகுதியிலுள்ள கால்நடை வளர்ப்போர் பெரிதும் நஷ்டமடைவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதிகளில் பாலினை எவரும் கொள்வனவு செய்ய முன்வராமையால் அங்கு ஒரு லீற்றர் பாலின் விலை 20 ரூபாவிலிருந்து 25ரூபாவரை விற்பனை செய்யப்படுகிறது.

கடந்தகால யுத்தம் காரணமாக தமது கால் நடைகளையும் கைவிட்டு இடம் பெயர்ந்த மக்கள், மீளவும் மீள்குடியேறிய நிலையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தாம் கைவிட்டுச் சென்ற கால்நடைகளை மீட்டனர். இந்நிலையில் தற் போது நாளொன்றுக்கு நானூறுமுதல் ஐநூறு லீற்றர் பால்வரை கிடைக்கிறது. ஆனால் இவ்வாறு கிடைக்கும் பாலினை எவரும் கொள்வனவு செய்ய முன்வராமையால் மிகவும் மலிவு விலைக்கே அவற்றை வழங்க வேண்டியுள்ளதுடன் நாளாந்தம் மிகுதியாக உள்ள பாலினை என்ன செய்வதென தெரியாமல் கால்நடை வளர்ப்போர் திண்டாடிவருகின்றனர்.

குறிப்பாக வேரவில், பாலாவி, பொன்னா வெளி பகுதிகளைச் சேர்ந்த கால்நடைவளர்ப் பாளர்களே மிகவும் நஷ்டமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாணம் உட்பட பலபகுதிகளிலும் ஒரு லீற்றர் பாலின் வலை 50ரூபா விற்கு விற்பனை செய்யப்படும் நிலையில் தாம் இவ்வாறு பாலினை மலிவு விலையில் விற்பதனால் கால்நடைவளர்ப்பை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என அஞ்சுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே மாவட்ட அரச அதிபர், தனியார் நிறுவனங்கள், பாலினை நியாய விலைக்கு கொள் வனவு செய்ய ஆவண செய்யவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கடந்த வருடத்தில் மட்டும் 1800 சிறுவர்கள் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் மாத்திரம் 1800 பராயம் அடையாத சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகி இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவற்றில் 1600 வரையான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதில் 900இற்கும் அதிகமான சம்பவங்கள் மிகவும் கொடுமையான பாலியல் பலாத்காரமாக உள்ளதாக பொலிஸ் ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இவ்வாறான சம்பவங்களில் குறித்த சிறுவர்களின் உறவினர்களே ஈடுபட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் கடந்த வருடம் பெண்களுக்கு எதிரான தீவிர வன்முறை சம்பவங்களாக 28 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# மூன்றுநாள் விஜயமாக ஜனாதிபதி ஜப்பான் பயணம்

(கொழும்பு)

மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமர நாயக்க தெரிவித்தார்.

இவ்விஜயத்தின் போது ஜப்பான் நாட்டின் பிரதமர் சின்கோ அபே உட்பட அந்நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களுடன், இராஜதந்திர மட்டத்திலான பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி ஈடுபடுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது இருபக்க உறவுகள் மேம்பாடு, பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இலங்கைக்கும், ஜப்பானுக்குமிடையிலான இராஜதந்திர உறவின் அறுபதாண்டு நிறைவின் நிமித்தமே, ஜனாதிபதியின் இவ் விஜயம் அமைந்துள்ளது.

# தரம் குறைந்த பெற்றோலுடன் திருமலை துறைமுகத்தில் கப்பல்

தரம் குறைந்த 16 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோலை ஏற்றிய கப்பலொன்று திருகோணமலை துறைமுகத்தினை வந்தடைந்துள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன. இந்தக் கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள பெற்றோல் தரையிறக்கப்படும் பட்சத்தில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேசிய ஊழியர்கள் சங்கத் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் கொண்டுவரப்பட்ட இந்தப் பெற்றோல தரத்தில் குறைந்தது என மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தில் எரிபொருள் தரத்தினை ஆய்வு செய்யும்வசதிகள் இல்லாமையால் அதனை ஆய்வு செய்வதற்காக எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் ஆனந்த பாலித குறிப்பிட்டார்.

எனினும் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எரிபொருள் மாதிரி கொண்டுவரப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை தரம் குறைந்த பெற்றோலை இறக்குமதி செய்ய தாம் இடமளிக்கப்போவதில்லை என பெற்றறோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எஸ்.எஸ்.சமரதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் எரிபொருள் தொடர்பில் ஒழுங்குபடுத்தும் அதிகாரி ஒருவர் இல்லாமையால் தரம் குறைந்த எரிபொருள் இறக்குமதி தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாது என ஆனந்த பாலித சுட்டிக்காட்டியுள்ளார்.

# கணனிகுற்றவியல் சட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்

(கொழும்பு)

இலங்கையின் கணனி குற்றவியல் சட்டத்தை சீர்த்திருத்தம் செய்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளதாக, தகவல் தொழில் நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கணனி குற்றவியல் சட்டம் 2007ஆம் ஆண்டு உருவாக்கப் பட்டது. இது உருவாக்கப்பட்டு 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அது சீர்திருத்தத்துக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் இலங்கையின் 50இற்கும் மேற்பட்ட அரசாங்க இணையத்தளங்கள் இணைய முடக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இலங்கை மக்கள் மத்தியில் கணனி அறிவு 39 சதவீதமாக காணப்படுகின்ற அதேநேரம், பெரும்பாலான மக்கள் இணைய முடக்கல் தொடர்பில் அறியாதவர்களாக இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ஹலாலுக்கு இறுதித்திகதி நிர்ணயித்தது பொதுபலசேனா

(கொழும்பு)

எதிர்வரும் 31ஆம் திகதியுடன் ஹலால் சான்றிதழ் நாட்டில் இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்குமானால் மக்களை ஒன்று திரட்டி வீதியில் இறக்கி போராட்டம் முன்னெடுக்கப்படும் என பொதுபலசேனா எச்சரித்துள்ளது.

அடிப்படைவாத சக்திகளில் இருந்து பௌத்த மதத்தை பாதுகாக்கும் நோக்கில் பொதுபலசேனாவின் மாநாடொன்று நேற்று முன்தினம் மாலை மாலபேயில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பொதுபலசேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ஹலால் சான்றிதழ், என்பது எமது நாட்டுக்குத் தேவையில்லாத ஒன்று. அதனை எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நாட்டிலிருந்து முற்றாக அகற்றி விட வேண்டும்.

இல்லையேல் மக்களை ஒன்று சேர்த்து இந்த அமைப்பினூடாக போராட்டத்தினை முன்னெடுக்க நாம் தயங்க மாட்டோம்.

ஹலால் சான்றிதழ் வழங்கும் விவகாரத்தை அரசிடம் பொறுப்பேற்குமாறு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் கோரிக்கை விடுத்தன. ஆனால் அரசாங்கம் அதனை ஏற்க மறுத்துவிட்டது.

இது ஒரு சிங்கள - பௌத்த நாடு. இங்கு சிங்கள - பௌத்த கொள்கைகளுக்கு உட்பட்டு ஏனையோர் தமது மதக் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

நாட்டில் உள்ள பிற மதங்களின் அடிப்படைவாதிகளின் ஊடுருவலினால் பௌத்த மதத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பௌத்த மதத்தின் தர்மங்களை பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த பொதுபல சேனாவாகும். மாறாக இது ஒரு மதவாதம், இனவாதம் அல்லது ஒரு கட்சி சார்ந்த அமைப்போ கிடையாது.

இதேவேளை, இவ்வாறான அடிப்படைவாத சக்திகளில் இருந்து பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு எமது அமைப்பு நாடு தழுவிய ரீதியில் இவ்வாறான மாநாடுகளை முன்னெடுக்கும் என அவர் கூறினார்.

# பாடசாலை விளையாட்டு விரைவில் சுற்றறிக்கை

(கொழும்பு)


பாடசாலை பாடத்திட்டத்தில் விளையாட்டுத்துறையை உட்படுத்திய சுற்றறிக்கையை விரைவில் வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சும், உயர்கல்வி அமைச்சும் இணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார். பல்கலைக்கழக அனுமதியின் போது விளையாட்டுத்துறையில் காட்டிய விசேட திறமைக்காக புள்ளி வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



மக்கள் வங்கியின் மகளிர் தின நிகழ்வு ஸ்ரான்லி வீதிக்கிளையில் நடைபெற்றபோது கலந்துகொண்ட விருந்தினர்களையும், வனிதாவாசனா கணக்கில் பணம் வைப்பிலிட்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்னத்திற்கு வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர் தர்ம என் கமாம்பிள்ளை பரிசு வழங்குவதையும், கலந்து கொண்ட வாடிக்கையாளர்களையும் காணலாம். (02,54)

# விவசாயிகளின் நலன் கருதியே அமைப்புக்கள் செயற்படவேண்டும்



வலி. கிழக்கு பிரதேச விவசாயிகளின் தேவைகள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக வலி. கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் அபிவிருத்திச் சபையின் தலைவர் தம்பிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபையின் அங்குரார்ப்பண நிகழ்வில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன்(கமல்) பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்,

விவசாயச் செய்கையின் போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் இழப்பீட்டுத் தொகைக, விவசாய உபகரணங்கள் உரியவர்களுக்கு சென்றடையும் வகையிலான செயற்பாடுகளை விவசாய சம்மேளனத்தினர் முன்னெடுக்க வேண்டும்.

எமது நாடானது விவசாய நாடாகக் காணப்படுவதால் விவசாயச் செயற்பாடு களை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஜனாதிபதி,நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றார். அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாணத்தில் விவசாய மேம்பாட்டுக்கான பல்வேறு செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்ட மக்கள் வாழ்கின்ற பிரதேசமாகையால் அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அங்குரார்ப்பணம் செய்யப்படும் வலி.கிழக்கு விவசாய அபிவிருததிச்சபை சிறந்த முறையில் விவசாயிகளின் நலனை முன்நிறுத்திச் செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் உரையாற்றிய ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன் கடந்தகாலங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகள், உதவித்திட்டங்களை வழங்கும் போது முறைகேடுகள் இடம்பெற்றதன் காரணமாக உதவிப்பொருட்கள் உரியவர்களை சரியான வகையில் சென்றடையவில்லை இந்நிலைக்கு விவசாய சமேளனங்கள் உரியமுறையில் செயற்படாமையே காரணமெனத் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள விவசாய அபிவிருத்திச் சபையில் இப்பிரதேசத்திலுள்ள 31 விவசாய சம்மேளனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது, வலி.கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன், பிரதேசசபை உறுப்பினர் செல்வராசா(லிங்கேஸ்) மற்றும் விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# பிரதேசசபை உறுதியளித்தபடி வசதிகள் செய்துதரவில்லை

## – கட்டுடை மக்கள் விசனம்

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள வலி.தென் மேற்கு பிரதேச சபை தலைமையகம் அமைந்துள்ள காணியிலிருந்து வெளியேற்றப்பட்ட தமக்கு, வாக்குறுதி அளித்தபடி தாம் தற்போது குடியிருக்கும் பகுதியில் உரிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தின் போது தெரிவித்தனர்.

இது பற்றிமேலும் தெரியவருவதாவது, மானிப்பாயிலுள்ள பிரதேசசபையின் காணியில் ஐந்து குடும்பங்கள் நீண்டகாலமாக வாழ்ந்து வந்தன. கடந்த வருட முற்பகுதியில் பிரதேச சபைக்கு புதிய கட்டடம் அமைக்க உள்ளதாகவும், இதற்கு இடம் தேவைப்படுவதால் ஐந்து குடும்பங்களும் கட்டுடையில் உள்ள காணி ஒன்றில் வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுடன் குடியமர்த்தப்படுவர் என பிரதேச சபையினால் தெரிவிக்கப்பட்டது. இதற்கு இணங்க அவர்கள் கட்டுடையில் குடியமர்ந்தனர்.

குடியமந்து சுமார் ஒருவருடத்தை எட்டவுள்ளபோதும் தமக்கு உரிய வசதிகள் ஏற்படுத்தித்தரவில்லை எனவும், இதனால் தாம் பெரிதும் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும், தமக்கு கூறியபடி உரிய வசதிகளை செய்து தருமாறும் வேண்டுகோள் விடுத்தனர். இதன் போது பிரதேச சபை உறுப்பினர்கள் சிலர் சபையில் தீர்மானம் நிறைவேற்றி சபை நிதியிலிருந்து உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கலாம் என கூறினார்கள்.

இதனை மறுத்த பிரதேச சபையின் ஏனைய உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகளின் தொண்டு நிறுவனம் ஒன்றின் நிதியிலிருந்து இந்த வசதிகளை செய்து கொடுகலாம். எனத் தெரிவித்தனர்.

ஆயினும் இதில் திருப்தி அடையாத பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு உரிய பதில் தெளிவாக வழங்கப்படவில்லை என்று விசனத்துடன் தெரிவித்தனர்.(54)

# நாச்சிக்குடா கிராமத்தில் பள்ளிவாசல் திறப்பு



கிளிநொச்சி மாவட்ட நாச்சிக்குடா கிராமத்தில் 23 வருடங்களுக்குப் பின் மீள்குடியேறிய முஸ்லிம் மக்களுக்காக பூநகரி பிரதேச சபை உறுப்பினர் ஐ.ஆ.காசீண் வேண்டுகோளுக்கு இணங்க அமைச்சர் ரிசாட் பதியுதீனின் பணிப்பின் பேரில் அகில இலங்கை இஸ்லாமிய இளைஞர்கள் (அஷ்ஷபாப்) நிறுவனத்தினரால் புதிதாக அமைக்கப்பட்ட பள்ளிவாசல் கடந்த வெள்ளிக்கிழமை நிறுவனத்தின் பணிப்பாளர் அல்-ஹாஜ்.சபரால் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பூநகரி பிரதேச சபை உறுப்பினர்களான ஐ.ஏ.காசீன், யு.நோயல், ஈ.பி.டீ.பி கட்சியின் இணைப்பாளர் றொபின்சன் , மற் றும் அயல் ஊர்க் கிராம தமிழ் சகோதர தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் ஜும்ஆ பிரசங்கமும் அஸ்செய்ஹ் நாபீர் மௌலவியினால் நடத்தப்பட்டது இந்த நிகழ்வு அப்பள்ளியின் தலைவர் அப்துல் மஜீத் றபியுதீன் தலைமையில் நடைபெற்றது. (09)

# பதிவிறக்கப் பெட்டகம்

“என்னை யாராலும் ஏமாற்ற முடியாது!” என்று பெருமை அடித்துக் கொண்டான் அப்துல். அதைக் கேட்ட முல்லா நஸ்ருதீன், “உன்னால் இங்கே ஐந்து நிமிடம் காத்திருக்க முடிந்தால், அதற்குள் உன்னை ஏமாற்றும் வழியைக் கண்டுபிடித்து வருவேன்!’ என்றார்.

“ஓ... தாராளமாக!’ என்று இறுமாப்புடன் பதில் சொன்னான் அப்துல்.

அவசரமாக எங்கோ சென்றார் முல்லா.

நேரம் சென்றது, ஐந்து நிமிடம் அரைமணியாகியது; ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் ஓடி விட்டது. முல்லா திரும்பியபாடில்லை; அப்துலுக்கோ ஒரே கோபம்!

நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த அருகிலிருந்த கடைக்காரன், “என்ன அப்துல்! வெகு நேரமாய் நிற்கிறாய்?” என்று கேட்டான்.

“என்னை ஏமாற்றும் வழியைக் கண்டுபிடித்து வர முல்லா போயிருக்கிறார் அவருக்காகத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்...” என்றான்.

“முட்டாளே! அவர் போனதே உன்னை ஏமாற்றிவிட்டுத் தானே! இப்படியே வீணாக அவரை எதிர்பார்த்து நீ நிற்கப் போகிறாய்!” என்று சொல்லிச் சிரித்தான் கடைக்காரன்.

*** *** ***

ஒருசமயம், “மீன் பிடிக்கக் கூடாது” என்று தடை விதிக்கப்பட்டிருந்த இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இன்ஸ்பெக்டர் திடீரென வந்துவிட்டார். முல்லா அப்போதுதான தூண்டிலிலிருந்து ஒரு மீனை எடுத்துக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அந்த மீனை நீரினுள் விட்டுவிட்டு எந்தவித பரபரப்பும் காட்டாமல் அமர்ந்திருந்தார். அருகில் வந்த இன்ஸ்பெக்டர் “முல்லா என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார். “இந்த மீனுக்கு நீந்தக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்” என்றார் முல்லா.

*** *** ***

முல்லா நசுருதீன் ஊரிலுள்ள மசூதியின் திருத்த வேலைகளுக்கு நிதி திரட்டுவதற்காக வியாபாரி சுலைமான் வீட்டிற்குச் சென்றார். காவலாளியிடம் விஷயத்தைச் சொல்லி உள்ளே அனுப்பினார்.

போன வேகத்தில் திரும்பி வந்த காவலாளி, “ஐயா வெளியே போயிருக்கிறார். வீட்டில் இல்லை” என்றான்.

முல்லா அவனிடம் அமைதியாகச் சொன்னார்: “இல்லை... கொஞ்ச நேரத்துக்கு முன்பு அந்த ஜன்னல் அருகே சுலைமானுடைய தலையைப் பார்த்தேன். வெளியே போகும்போது விட்டுட்டுப் போய்விட்டார் போல... இனிமேல் வெளியே போகும போது மறக்காமல் தலையையும் கொண்டு போகச் சொல்லு...” என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தார்.

*** *** ***

முல்லா தன் கழுதை மீதேறி பயணம் போய்க்கொண்டிருந்தார். பாதையோரம் எதுவோ மிருகம் ஒளிந்திருப்பதைக் கண்ட கழுதை தலைதெறிக்க ஓட ஆரம்பித்தது.

அப்போது வழியில் வந்த ஒருவன், “முல்லா, இத்தனை வேகமாக எங்கே போகிறீர்கள்?” என்றான்.

முல்லா கழுதையை இறுகப் பற்றியபடி கத்தினார்: “இது நீ என் கழுதையைக் கேட்க வேண்டிய கேள்வி...”

*** *** ***

முல்லா தான் பாலைவனத்துக்கூடாகப் பயணம் செய்த சாகசத்தை நண்பர்களிடம் விவரித்துக் கொண்டிருந்தார். வழியில் திடீரென ஒரு கொள்ளைக்கூட்டத்திடம் மாட்டிக் கொண்டதாகவும், பின்னர் அக்கூட்டத்தினை ஓடச் செய்ததாகவும் கூறினார்.

“அதெப்படி அவர்களை ஓட வைத்தீர்கள்... நீங்கள் தனி ஆள்... அவர்களோ பல பேர்...?” என்று வியப்புடன் கேட்டனர் நண்பர்கள்.

“அது பெரிய காரியமா என்ன... அவர்களைக் கண்டவுடன் நான் ஓடினேன்... என்னைப் பிடிக்க அவர்கள் ஓடினார்கள்...” என்றார் முல்லா.

*** *** ***

முல்லா கனவு கண்டுகொண்டிருந்தார். யாரோ அவர் கையில் தங்க நாணயங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று போட்டுக் கொண்டிருக்கிறார்... ஒன்பது வந்ததும் போடுவதை நிறுத்தி விட்டார். “எனக்குப் பத்து வேண்டும்” என்று கத்தினார் முல்லா. அந்த சத்தத்தில் விழித்துக் கொண்டார். கை வெறுமையாக இருப்பதைப் பார்த்ததும், மறுபடியும் கண்களை மூடிக்கொண்டே முணுமுணுத்தார் “சரி, அதையே கொடுங்கள். ஒன்பதே போதும்”.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

**இரசாயனவியல்**

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

*சென்றவாரத் தொடர்ச்சி...*

**கார உலோகங்களுடன் ஐதரசனின் ஒற்றுமைகள்**

1. கார உலோகங்களைப்போல் மிகுந்த நேர்மின் இயல்பும் வலுவளவு ஒன்றும் உடைய மூலகமாகும்.

2. ஐதரசன் ஏலைட்டுக்களும், கார உலோக ஏலைட்டுக்களும் நீர்க் கரைசல்களில் நேர் அயன்களைத் தரும்
உ-ம் $Na^+$ $H^+$.

3. இலத்திரன் நிலையமைப்பில் வெளிச் சத்திப்படியில் ஒரு இலத்திரனை உடையதாகும்.
H(1) ; Li (2,1) ; Na (2,8,1) ;

4. ஐதரசனுக்கும், கார உலோகங்களுக்கும் அலோகங்களிடத்தில் அதிக நாட்டமுண்டு. ஆனால் உலோகங்களிடத்தில் நாட்டம் மிகக்குறைவு.
உ-ம் : குளோரினுடன் சேர்வைகள் HCI, NaCI, KCI
ஒட்சிசனுடன் சேர்வைகள் $H_2O$, $Na_2O$, $K_2O$

**அலசன்களுடன் ஐதரசனின் ஒற்றுமைகள்**

1. ஐதரசன் அலசன்களைப் போல அலோகவியல்பை உடையது. இவை வாயுக்களாகும். மின்னையும், வெப்பத்தையும் அரிதிற் கடத்தும் பொருட்களாகும்.

2. இலத்திரன் நிலையமைப்பில் ஐதரசன் அணு அதன் முதற் சத்திப் படியில் ஒரு இலத்திரனைக் கொண்டுள்ளது. ஒரு இலத்திரனைப் பெற்று ஈலியத்தின் அமைப்பைப் பெற்றுக்கொள்ளும். அவ்வாறே அலசன் அணுக்களும் ஒரு இலத்திரனைப் பெற்றுக்கொண்டு கிட்டிய சடத்துவ வாயுவின் அமைப்பைப் பெற்றுக்கொள்ளும்.

3. அயனாக்கற் சத்திகளின் பருமன் ஐதரசனுக்கும் அலசன்களுக்கும் ஏறக்குறைய ஒன்றாகக் காணப்படுகின்றது.
H= 13.e V, F=17.4eV, CI=13.0eV, Na=5.1eV

4. ஐதரைட்டுகளும், ஏலைட்டுகளும் உருக்கி மின் பகுக்கப்படும்போது ஐதரசன், அலசன்கள் ஆகியவை நேர்மின் வாய்களில் விடுவிக்கப்படு கின்றது. $CI^-$, $Br^-$ அயன்கள் உண்டாவது போல் $H^-$ அயன்களும் உண்டாகும். இலிதியம் ஐதரைட்டு LiH சோடியம் ஐதரைட்டு NaH ஆகியவை ஐதரைட்டு அயன்களைத் தரும்.

5. அலசன்களைப்போல் ஐதரசனும் ஒத்த பங்கீட்டுவலுச் சேர்வைகளை உண்டாக்குகின்றது.
உ-ம் : $SiH_4$, $CH_4$, $GeH_4$
$SiCI_4$, $CCI_4$, $GeCI_4$

6. ஐதரசனை அலசன்களால் இடம்பெயர்க்கக்கூடியதாக சில சேர்வைகள் உண்டு.
உ-ம் : $CH_4$, $C_2H_6$ ஆகியவற்றில் இருந்து ஐதரசனை இடம்பெயர்த்து $CH_3CI$, $C_2H_5CI$ போன்ற சேர்வைகள் உண்டாகும்.

**அலசன்கள் கார உலோகங்கள் ஆகியவற்றுடன் ஐதரசன் காட்டும் வேற்றுமைகள் :**

1. ஐதரசன் ஒட்சைட்டு ($H_2O$) நடுநிலையானது.
ஆனால் கார உலோகங்களின் ஒட்சைட்டுகள் காரவியல்பையும் (உ-ம் : $Na_2O$)
அலசன்களின் ஒட்சைட்டுகள் (உ-ம் : $CI_2O_7$) அமில இயல்பையும் காட்டும்.

2. ஐதரசன் அணுவின் அமைப்பு தனித்துவமானது. கருவில் ஒரே புரோத்தனையும், புறத்தே ஒரு இலத்திரனையும் கொண்டது. இலத்தி ரனை இழந்தால் அது ஒரு தனிப் புரோத்தனாகின்றது. இத்தகைய நிலையை வெறு எம் மூலகமும் அடைய முடியாது.

**காபனுடன் ஐதரசனின் ஒற்றுமை**

1. இவை இலத்திரன் நிலையமைப்பில் ஈற்றுச் சத்திப்படி 1/2 நிரம்பிய நிலையில் காணப்படுகின்றன. ஐதரசன் அணுவில் முதலாம் சத்திப்படி ஒரு இலத்திரனைக் கொண்டிருக்கும். ஆனால் கொள்ளக்கூடியது இரண்டு. இதேபோல் காபன் அணுவின் வெளிச் சத்திப்படி 8 இலத்திரன் களை மட்டும் கொண்டுள்ளது.

2. இலத்திரன் நாட்டம் காபனுக்கும் ஐதரசனுக்கும் ஏறக்குறைய ஒரே அளவினதாகும்.

3. பங்கீட்டு வலுச்சேர்வைகளை உருவாக்கும் ஆற்றல் இவ்விரு மூலகங்களுக்கும் உண்டு. இவற்றின் அணுக்களில் மட்டும் ஈற்றுச் சத்திப்படி இலத்திரன்கள் பங்கீட்டுப் பிணைப்புக்களில் ஈடுபட்ட பின்பு, சுயாதீனமான வெளிச்சத்திப்படி இலத்திரன்களோ அன்றேல் வெளிச் சத்திப்படிகளோ காணப்படுவதில்லை.

மேற்கூறியவற்றில் இருந்து ஐதரசன் 1 ஆம், 7 ஆம், 4 ஆம் தொகுதிவியல்புகளை ஓரளவு உடையதாய் காணப்படுகின்றது என்பது தெளிவாகின்றது. ஆகவே, ஆவர்த்தன அட்டவணையில் ஐதரசனின் நிலை எம் மூன்று இடங்களில் ஒன்றாகவிருக்கலாம். பொதுவாக இது 1 ஆம் தொகுதியில் 1 ஆம் ஆவர்த்தனத்தில் வைக்கப்படும்.

**ஐதரசனின் இருக்கை**

வளியில் மிக அருந்தலாகக் காணப்படும். எரிமலை வாயுக்களில் இருந்து வந்ததாகவிருக்கலாம். சூரியனிலும் பல நட்சத்திரங்களிலும் ஐதரசன் பெருமளவில் காணப்படுகிறது. சேர்வை நிலையில் நீரிலும், பெற்றோலியத்திலும், தாவர விலங்கு இழையங்களிலும் காணப்படு கின்றது.

**ஐதரசனைத் தயாரித்தல்**

**நீரில் இருந்து:**

1. சாதாரணவெப்பநிலையில் 1 ஆம் தொகுதி மூலகங்களும், Ca, Sr, Ba யும் நீரில் இருந்து ஐதரனை விடுவிக்கும்.
$2Na + 2H_2O \rightarrow 2NaOH + H_2\uparrow$

2. கொதி நீருடன் Mg, Zn, AI ஆகியவற்றின் தூள் தாக்கமுற்று உலோக ஒட்சைட்டையும், ஐதரசனையும் தரும்.
$Mg + H_2O \rightarrow MgO + H_2$

3. உலோகங்களை வெப்பமேற்றி அவற்றின் மீது கொதி நீராவியைச் செலுத்தி ஐதரசனைப் பெற்றுக்கொள்ளலாம். Mg, Zn, Fe, Co, Ni, Pb, Sr ஆகியவை இவ்வாறு தாக்கமுறும். **(மின் இரசாயனத் தொடரில் ஐதரசனுக்கு கீழ் உள்ள மூலகங்கள் நீரில் இருந்தோ அல்லது வேறு சேர்வைகளில் இருந்தோ ஐதரசனை வெளியேற்றாது).**
$Mg + H_2O \rightarrow MgO + H_2\uparrow$

$3Fe + 4H_2O \rightarrow Fe_3O_4 + 4H_2\uparrow$

4. நீரை மின் பகுத்து ஐதரசனைப் பெற்றுக்கொள்ளலாம். நீர் மின்னைக் கடத்தாது. நீருடன் ஐதான சல்பூரிக்கமிலத்தை கலந்து அல்லது ஏதாவது காரத்தைக் கலந்து, நிக்கல் பிளாற்றினம் அல்லது காபன் மின்வாய் களுக்கிடையில் மின் பகுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.
கதோட்டில் $2H^+ + 2e = H_2$
அனோட்டில் $4OH^- - 4e = 2H_2O + O_2$

5. ஐதரைட்டுக்கள் நீருடன் தாக்கமுறும்போது ஐதரசன் உண்டாகும்.
உ-ம் : LiH, NaH, $CaH_2$ (ஐதரோலித்)
$2H_2O + 2Na \rightarrow 2NaOH + H_2$

2. **அமிலங்களில் இருந்து**

அநேக உலோகங்கள் ஐதான அமிலங்களுடன் தாக்கமுறும்போது ஐதரசன் விடுவிக்கப்படும்.
உ-ம் : $Zn + H_2SO_4 \rightarrow ZnSO_4 + H_2\uparrow$

ஆய்வுகூடத்தில் ஐதரசன் இம்முறையில் தயாரிக்கப்படும். தாக்கத்தை விரைவாக்க சில துளிகள் செப்பு சல்பேற்றுக் கரைசலைச் சேர்க்கலாம்.

**செப்புசல்பேற்று ஊக்கியல்ல.**

செப்புசல்பேற்று நாகத்துடன் தாக்கமுறும்போது விடுவிக்கப்படும் Cu நாகத்தில் படிந்து ஒரு உலோக இணையாவதால் அரிப்புக்கல மொன்று உருவாகி நாகம் விரைவில் கரைகின்றது.
$CuSO_4 + Zn \rightarrow ZnSO_4 + Cu\downarrow$

ஐதரசனை நீரின்மேல் சேகரிக்கலாம். அல்லது வளியின் கீழ்முகப் பெயர்ச்சியால் சேகரிக்கலாம். ஐதரசனை உலர்த்த வேண்டுமானால் செறிந்த சல்பூரிக்கமிலத்தை அல்லது $CaCl_2$ ஐ உபயோகிக்கலாம்.

3. **காரங்களில் இருந்து**

நாகம், அலுமினியம், வெள்ளீயம் ஆகிய ஈரியல்புள்ள உலோகங்கள் சூடான காரக்கரைசல்களில் கரைந்து ஐதரனைத் தரும்.

$2AI + 2OH^- + 2H_2O \rightarrow 2AIO_2^- + 3H_2\uparrow$

$Zn + 2OH \rightarrow ZnO_2^{2-} + H_2\uparrow$

**தொழில் முறையில் ஐதரசனின் தயாரிப்பு**

1. நீரின் மின்பகுப்பு : மின்சக்தி மலிவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடத்தில் நீரின் (அமிலம் அல்லது 20% எரிசோடா சேர்க்கப்பட்ட) மின்பகுப்பால் பெற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்வாயுவில் இருந்து : செஞ்சூடான காபனின் மீது நீராவியைச் செலுத்தினால் பெற்றுக் கொள்ளும் வாயுக் கலவை ($CO + H_2$) நீர் வாயு எனப்படும்.

$C + H_2O \rightarrow CO + H_2\uparrow$

இக்கலவையில் இருந்து காபனோரொட்சைட்டு பலமுறைகளால் நீக்கப்படலாம். நீர் வாயுவை உயர் அமுக்கத்தில் குளிரச் செய்யும்போது CO திரவமாக, $H_2$ வை பெற்றுக்கொள்ளலாம்.

3. கொதி நீராவியை செஞ்சூடாக்கப்பட்ட இரும்பின் மேல் செலுத்தி ஐதரசனைப் பெற்றுக்கொள்ளலாம்.

$3Fe + 4H_2O \rightleftarrows Fe3O_4 + 4H_2\uparrow$

4. சோடியம் குளோரைட்டுக் கரைசலின் மின்பகுப்பினால் எரிசோடா (NaOH) தயாரிக்கப்படும்போது ஐதரசன் உப விளைபொருளாகக் கிடைக்கும்.

**ஐதரசனின் இயல்புகள்**

பௌதிக இயல்புகள்:

ஐதரசன் நிறமற்ற, மணமற்ற சுவையற்ற வாயு. நீரில் மிக அற்பமாகக் கரையும். எல்லா மூலகங்களிலும் பாரம் குறைந்த மூலகம் ஐதரசனாகும். அடர்த்தி 0.08987 கிராம் / லீற்றர். சில உலோகங்கள் ஐதரசனை புறத்துறிஞ்சும் (Adsorbtion)
உ-ம் : பிளாற்றினம் பலேடியம்.

**இரசாயனவியல்புகள் :**

1. பாசித்தாளுக்கு நடுநிலையானது.

2. வளியில் அல்லது ஒட்சிசனில் ஐதரசன் தாரை மங்கலான சுவாலையுடன் எரியும். தூய ஐதரசனால் நிரப்பப்பட்ட வாயுச் சாடியினுள் எரியும் குச்சியைச் செலுத்தினால் 'பொப்' என்ற ஓசையுடன் எரியும். ஐதரசன் ஒட்சிசனுடன் கலந்திருந்தால் எரியூட்டப்படும்போது **அபாயகரமாக வெடிக்கும்.**

$2H_2 + O_2 \rightarrow 2H_2O$

3. ஐதரசன் ஒரு தாழ்த்தும் கருவியாகும்.

$CuO + H_2 \rightarrow Cu + H_2O$

$2AgCI + H_2 \rightarrow 2Ag + 2HCI$

4. **நைதரசனுடன் தாக்கம் :** உயர் அமுக்கத்தில் ஊக்கி முன்னிலையில் (Pt) வெப்பமேற்றினால் அமோனியா வாயு உண்டாகும். $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ இது ஏபர் முறை எனப்படும்.

5. ஐதரசனில் வெப்பமேற்றினால் பல மூலகங்கள் அதனுடன் சேரும்.

$H_2 + S \xrightarrow[200-400^{\circ}C]{} H_2S$

$H_2 + Se \rightarrow H_2Se$

$C + 2H_2 \xrightarrow[370^{\circ}C]{1150^{\circ}C} CH_4$

$2Na + H_2 \rightarrow 2NaH$

6. ஐதரசனேற்றம் : நிரம்பாத சேதனச் சேர்வைகளை ஐதரசனுடன் Ni ஊக்கி முன்னிலையில் வெப்பமேற்றினால் இவை நிரம்பிய சேர்வைகளாக மாறும்.

$C_2H_2 + H_2 \rightarrow C_2H_4$
அசற்றலீன் → எதிலீன்

$C_2H_4 + H_2 \rightarrow C_2H_6$

நிரம்பாத தாவர எண்ணைகளை நிரம்பலாக்கி மாஜரின் போன்ற நிரம்பிய எண்ணைகள் இவ்வாறே தயாரிக்கப்படுகின்றன.

**தோன்று நிலை ஐதரசன்**

தாழ்த்தப்படவேண்டிய கரைசலினுள் ஐதரசன் உற்பத்தியாக்கப்பட்டால் இது தோன்று நிலை ஐதரசன் என்று அழைக்கப்படும்.
உதாரணம் : பொற்றாசியம் பரமங்கனேற்றுக் கரைசலினுள் நாகமும் ஐதான சல்பூரிக்கமிலமும் சேர்க்கப்பட்டால், அக்கரைசல் தாழ்த்தப்படுவதால் ஊதா நிறத்தை இழந்து நிறமற்றதாகமாறும்.

$2KMnO_4 + 4'H' + 3H_2SO_4 \rightarrow K_2SO_4 + 2MnSO_4 + 5H_2O$

ஆனால் ஐதான சல்பூரிக்கமிலமும் நாகமும் தாக்கமுறுவதால் பெற்றுக் கொள்ளும் ஐதரசனை ஒரு போக்குக் குழாய் மூலம் பொற்றாசியம் பரமங்கனேற்றுக் கரைசலுக்குள் செலுத்தினால் எவ்வித தாக்கத்தையும் அவதானிக்க முடியவில்லை. **புறத்தே தயாரிக்கப்படும் ஐதரசனிலும் பார்க்க, தோன்று நிலை ஐதரசன் சக்தி வாய்ந்ததாகும்.** இவற்றின் தொழிற்பாடு தோன்று நிலை ஐதரசனை உருவாக்கும் தாக்கங்களில் தங்கியுள்ளது. உதாரணம் நாகமும் ஐதான சல்பூரிக்கமிலமும் தாக்கமுற்று உருவாக்கும் தோன்று நிலை ஐதரசன் பொற்றாசியம் குளோரேற்றை ($KCIO_3$) பொற்றாசியம் குளோரைட்டாக தாழ்த்துகின்றது. ஆனால் சோடியம் இரசக்கலவையை நீருடன் தாக்கத்தில் ஈடுபடுத்தி உருவாக்கும் தோன்று நிலை ஐதரசன் $KCIO_3$ ஐ தாழ்த்தாது.

**அணு ஐதரசன்**

தாங்குதன் கோல்களுக்கிடையில் உண்டாக்கப்படும் மின்வில் (Arc) ஊடாக ஐதரசன் தாரையை செலுத்தினால் அவ் ஐதரசன் அணு ஐதரசனாக மாற்றமடையும் அணு ஐதரசன் உலோகத்தை தாக்கினால் மீண்டும் ஐதரசன் மூலக்கூறுகளாக மாறும்போது விடுவிக்கப்படும் வெப்பத்தில், அவ் உலோகம் உருகிவிடும் ($4000 - 5000^{0}c$) இம் முறையில் உண்டாகும் வெப்ப சத்தி உலோகங்களை உருக்கி ஒட்டப் பயன்படுகிறது.

**ஐதரசனின் சமதானிகள்**

**இயற்கை ஐதரசன் மூன்று சமதானிகளைக் கொண்டது :** புரோத்தியம் (protium ${}_1H^1$), துத்தேரியம் (Deuterium ${}_1H^2$ அல்லது D). திரித்தியம் (Tritium ${}_1H^3$ அல்லது T) புரோத்தியம் அல்லது ஐதரசன் கருவில் தனிப் புரோத்தன் மட்டுமே காணப்படும். துத்தேரியத்தின் கருவில் தனிப் புரோத்தனும், நியூத்திரனும் உண்டு. திரித்தியத்தில் தனிப் புரோத்த னும், இரண்டு நியூத்திரன்களும் உண்டு. புரோத்தியம் மட்டுமே இயற்கை ஐதரசனில் அதிகமாகக் காணப்படும். மற்றவை மிக அருந்தலாகவே காணப்படும். அதிலும் திரித்தியம் மிகமிக அற்பமாகக் காணப்படும். இது உறுதியற்றதும் கதிர்தொழிற்பாடு உடையதாகவும் காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

(குறிப்பு : பொதுவாக மூலகங்களின் சமதானிகளுக்கு தனிக்குறியீடுகள் கொடுக்கப்படுவதில்லை. 1931 இல் ${}_1H^2$ வை தயாரித்த யூரே இப் பார ஐதரசன் (Heavy Hydrogen) பல விசேடவியல்புகளைக் கொண்டிருப்பதனால் அதற்கு D என்ற குறியீட்டை வழங்கினர்)

சமதானிகளின் இயல்புகள் பண்பறியளவில் ஒற்றுமையுடையதாகக் காணப்பட்டாலும், அளவறி முறையில் அதிக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. திணிவு வித்தியாசத்தால் சமதானிகளில் இயல்பு வித்தியாசப்படுவதை **சமதானி விளைவு** எனப்படும்.

**பாரமான ஐதரசன் அல்லது துத்தேரியம்**
**பின்வரும் முறைகளால் தயாரிக்கப்படும்.**

1. திரவ ஐதரசனை அதன் மும்மை நிலைக்கு (triple point) அண்மையான வெப்பநிலையில் ஆவியாகவிட்டு செறிவாக்கப்பட எஞ்சிய திரவம் அதிக செறிவில் $D_2$ வைக் கொண்டிருக்கும்.

2. துண்டுகளைப் பிரிசுவர் ஊடாக ஐதரசனைப் பரவவிட்டு பாரம் கூடிய $D_2$ வை பிரிக்கலாம்.

3. **பாரமான நீரில் இருந்து :-**

சாதாரண நீர் ஏறக்குறைய 6000 : 1 என்ற விகிதத்தில் பாரமான நீரைக் கொண்டது. சாதாரண நீரை காரம் சேர்த்து நிக்கல் மின்வார்ப்பு களுக்கிடையில் மின்பகுக்கும்போது, 20 லீற்றர் உபயோகித்தால் 1ml பாரநீரை மிகுதியாகப் பெற்றுக் கொள்ளலாம். இதிலிருந்து பாரமான ஐதரசனைப் பெற்றுக்கொள்ள, இந்நீரை சோடியத்துடன் தாக்கமுறச் செய்யலாம்.

$2D_2O + 2Na \rightarrow 2NaOD + D_2\uparrow$

துத்தேரியம் சாதாரணமாக ஐதரசன் ஈடுபடும் தாக்கங்களில் மந்தமாக ஈடுபடும்.

உ-ம் : ஒட்சிசனில் எரிதல்

$2D_2 + O_2 \rightarrow 2D_2O$ (பார நீர்)

**ஐதரைட்டுக்கள் :**

ஐதரசனுடன் மூலகங்களின் இரு கூற்றுச் சேர்வைகள் ஐதரைட்டுகள் ஆகும். பலவகையான ஐதரைட்டுகளை வகுக்கலாம்.

1. **அயன் ஐதரைட்டுக்கள் :** மிகத் தாழ்ந்த மின் எதிர்மை உள்ள மூலகங்கள் ஐதரசனுடன் அயன் ஐதரைட்டுகளை உருவாக்குகின்றன. கார உலோகங்களும் ஐதரசனுடன் உருவாக்கும் ஐதரைட்டுக்கள் அயன் ஐதரைட்டுக்கள் ஆகும். இவை உயர்ந்த உருகு நிலையுடைய சேர்வைகள். இவை உருகிய நிலையில் மின்னைக் கடத்தும். மின் பகுக்கும்போது ஐதரசன் அனோட்டில் விடுவிக்கப்படும். இது $H^-$ அயன்கள் இச் சேர்வைகளில் காணப்படுகின்றன என்பதைக் காட்டும். இவை நீருடன் தாக்கமுறும்போது ஐதரசன் விடுவிக்கப்படும்.

$LiH + H_2O \rightarrow LiOH + H_2\uparrow$

2. **பங்கீட்டுவலு ஐதரைட்டுகள் :**

உயர்ந்த மின்னதிர்மை கூடிய மூலகங்கள் பங்கீட்டு வலு ஐதரைட்டு களை உருவாக்கும். இவை மூலக்கூற்றுச் சாலகங்கள் ஆகும். பங்கீட்டுவலு மூலக்கூறுகள் வந்தர்வாலிசுவின் விசைகளால் பிணைக் கப்பட்டு சாலகங்கள் உண்டாக்கப்படும். ஐதரசன் பிணைப்புகளும் சாலகங்களின் அமைப்பில் பங்குபற்றலாம். P தொகுப்பு மூலகங்கள் இவ்வகைச் சேர்வைகளைத் தரும். இச்சேர்வைகள் மெதுமையானவை, ஆவிப்பறப்பானவை, மின்னைக் கடத்தாது தாழ்ந்த உருகுநிலை, கொதிநிலை உடையவை. ஆனால் ஒரு மூலக்கூறில் அணுக்களுக்கிடை யில் உள்ள பிணைப்புக்கள் முற்றாக பங்கீட்டு வலுப் பிணைப்புகளாக இருக்காது. அணுக்களின் மின் எதிர்மை வித்தியாசமானபடியால் இப்பிணைப்புகள் ஓரளவு அயன் தன்மையையும் காட்டும்.

உ-ம் :- HF இல் ஐதரசன் புளோரீன் இடையில் உள்ள பிணைப்பு ஓரளவு அயன் தன்மையைக் காட்டும்.

3. உலோக அல்லது இடைவெளிக்குரிய **(Interstial)** ஐதரைட்டுகள்:

தாண்டல் மூலகங்கள் இவற்றை உருவாக்கும். இம்மூலகங்களின் உலோகச் சாலகங்களில், உலோக அணுக்களுக்கிடையில் ஐதரசன் அணுக்கள் காணப்படுகின்றன. இவை உலோகங்களுக்குரிய இயல்பு களைக்காட்டும்.

### தொகுப்பு மூலகங்கள்

**தாண்டல் மூலகங்கள் எவை**

புதிய ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் தொகுதிக்கும் மூன்றாம் தொகுதிக்கும் இடையில் உள்ள உபதொகுதி மூலகங்களை d தொகுப்பு மூலகங்கள் என அழைப்போம். இவற்றைத் தாண்டல மூலகங்கள் என்றும் அழைப்பர். ஆனால் செம்மை கொண்டுள்ள உப தொகுதி, நாகத்தைக் கொண்டுள்ள உபதொகுதி ஆகியவையும் தாண்டல் மூலகங்களாக அழைக்கப்படலாமா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. தாண்டல் மூலகங்கள் நிரம்பாத d உபசத்தி மட்டத்தை உடைய மூலகங்கள் என்று வரையறுக்கப்படும். இப்பாடத்தில் இடையில் இருக்கின்ற பத்து உபதொகுதிகளையும் d தொகுப்பு அல்லது தாண்டல் மூலகங்களாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உதாரணமாக நாலாம் ஆவர்த்தனத்தில் உள்ள காந்தியம் *(21)*, ரைற்றேனியம் *(22)*, வனேடியம் *(23)*, குரோமியம் *(24)*, மங்கனீசு *(25)*, இரும்பு *(26)*, கோபால்ற் *(27)*, நிக்கல் *(28)*, செம்பு *(29)*, நாகம் *(30)* ஆகியவை p தொகுப்பு மூலகங்களாகும். முதலாம் ஆவர்த்தனத்தில் உள்ள தாண்டல் மூலகங்களைப் பற்றி மட்டுமே விரிவாக ஆராயப்படும்.

**இலத்திரன் நிலையமைப்பு**

மேலே தரப்பட்ட பத்து மூலகங்களினதும் இலத்திரன் நிலையமைப்பு பின்வருமாறு:

| மூலகம் | குறியீடு | அணு எண் | இலத்திரன் நிலையமைப்பு |
|---|---|---|---|
| காந்தியம் | Sc | 21 | $15^2$, $25^2$, $2p^6$, $35^2$, $3p^6$, $3d^1$, $4s^2$ |
| ரைற்றேனியம் | Ti | 22 | ,, ,, ,, ,, ,, $3d^2$, $4s^2$ |
| வனேடியம் | V | 23 | ,, ,, ,, ,, ,, $3d^3$, $4s^2$ |
| குரோமியம் | Cr | 24 | ,, ,, ,, ,, ,, $3d^5$, $4s^1$ |
| மங்கனீசு | Mn | 25 | ,, ,, ,, ,, ,, $3d^5$, $4s^2$ |
| இரும்பு | Fe | 26 | ,, ,, ,, ,, ,, $3d^6$, $4s^2$ |
| கோபால்ற் | Co | 27 | ,, ,, ,, ,, ,, $3l^7$, $4s^2$ |
| நிக்கல் | Ni | 28 | ,, ,, ,, ,, , $3d^8$, $4s^2$ |
| செம்பு | Cu | 2 | ,, ,, ,, ,, ,, $3d^{10}$, $4s^1$ |
| நாகம் | Zn | 30 | ,, ,, ,, ,, ,, $3d^{10}$, $4s^2$ |

இவ்வட்டவணையில் இருந்து நாம் அவதானிப்பது வெளிச்சத்தி மட்டத்திற்கு முந்திய உள்சத்திமட்டத்து ன உபகத்திமட்டம் ஆவர்த்தனம் வழியே நிரப்பப்படுவதாகும். குளோமியமும், செப்பும் தவிர்ந்த மற்றைய மூலகங்களில் இறுதிச் சத்திமட்டத்தில் ($4_s$ உபசத்திமட்டம்) இரண்டு இலத்திரன்கள் உண்டு. செம்பிலும், குரோமியத்திலும் உள்ள இவ் ஒழுங்கீனத்திற்கு காரணம் 3 d, 4s உபசத்திமட்டங்கள் சத்தியில் ஏறக்குறைய சமமானவை. ஆகவே 4 s இலத்திரன் ஒன்றை உள்ளே இழுப்பதால் இம் மூலகங்களின் உள் உபசத்திமட்டங்கள் முறையே அரை நிரம்பிய ($3d_5$) முழு நிரம்பிய (3d10) நிலையை அடைகின்றன.

இந்நிலைகள் மூலகங்களின் அணுக்களுக்கு கூடிய உறுதிப்பாட்டைக் கொடுக்கின்றன. செம்பும், நாகமும் நிரம்பிய (10 இலத்திரன்களை உடைய) 3 d உபசத்தி மட்டத்தை உடையவையாய் இருப்பதால் அவற்றை தாண்டல் மூலகங்களுடன் சேர்க்கக்கூடாது என்று கூறப்படும். எவ்வாறாயினும் செம்பு மற்றைய தாண்டல் மூலகங்களுடன் ஒற்று மையைக் காட்டுவதாலும் நாகம் இவற்றின் இயல்புகளை ஓரளவு காட்டுவதாலும் இவற்றையும் தாண்டல் மூலகங்களுடன் சேர்த்துக் கொள்வது வசதியாகும்.

பொதுவாக தாண்டல் மூலகங்களின் கடைசி இரண்டு இலத்திரன் நிலையமைப்பையும் ஆவர்த்தனத்தில் பின்வருமாறு குறிக்கலாம்.

| Sc | Ti | V | Cr | Mn | Fe | CO | Ni | Cu | Zn |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| $(n-1)\,d^1\ ns^2$ | $(n-1)\,d^2\ ns^2$ | $(n-1)\,d^3\ ns^2$ | $(n-1)\,d^5\ ns^1$ | $(n-1)\,d^5\ ns^2$ | $(n-1)\,d^6\ ns^2$ | $(n-1)\,d^7\ ns^2$ | $(n-1)\,d^8\ ns^2$ | $(n-1)\,d^{10}\ ns^1$ | $(n-1)\,d^{10}\ ns^2$ |

இங்கே n என்பது எத்தனையாவது ஆவர்த்தனம் என்பதைக் குறிக்கிறது. இதன் உள் இலத்திரன் நிலையமைப்பு அதற்கு முந்திய ஆவர்த்தனத்தின் சடத்துவ வாயுவின் அமைப்பாகும்.

**உதாரணம்** :- இரும்பு (26), (Ar), (4-1) $d^6 4S^2$

அதாவது (Ar) $3d^6 4S^2$

ஐந்தாம், ஆறாம் ஆவர்த்தனங்களில் உள்ள மூலகங்களின் இலத்திரன் நிலையமைப்பும் மேலே விபரித்த விரிவாக்கத்தையே காட்டும்.

### பௌதிகவியல்புகள்

இம்மூலகங்களின் இயல்புகளில் காணப்படும் ஒற்றுமைகள், இவற்றின் இலத்திரன் நிலையமைப்பு இறுதிச் சத்திப்படியில் ஏறக்குறைய ஒருமையாகவிருக்க உள் உபசத்திமட்டத்தில் இலத்திரன்கள் நிரம்புவதால் ஏற்படும் விளைவாகும்.

**உலோகவியல்பு**

d தொகுப்பு மூலகங்கள் எல்லாம் உலோகங்கள் ஆகும். இது நாம் எதிர்பார்க்கவேண்டியதொன்றாகும். ஏனெனில் இறுதி உபசத்தி மட்டத்தில் காணப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கை மிகச் சிலவே (2 அல்லது 1) ஆகும். ஆனால் *1* ஆம், *2* ஆம் கூட்ட மூலகங்களுடன் ஒப்பிடும்போது இம்மூலகங்கள் வன்மையானவை, அடர்த்தி கூடியவை, உயர்ந்த உருகுநிலை, கொதிநிலையுடையவை. பின்வரும் அட்டவணை அவ்வியல்புகள் மாறும் தன்மையைத் தருகின்றன.

**அட்டவணை**

| மூலகம் | Sc | Ti | V | Cr | Mn | Fe | Co | Ni | Cu | Zn |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அடர்த்தி ($gcm^{-3}$) | 3·2 | 4·5 | 6·0 | 7·1 | 7·4 | 7·9 | 8·7 | 8·9 | 8·9 | 7·1 |
| வன்மை($Kgmm^{-2}$) | — | 200 | — | 100 | 300 | 70 | 48 | 70-80 | 30-40 | 30 |
| உருகு நிலை (°K) | 1673 | 1950 | 2190 | 2176 | 1517 | 1812 | 1768 | 1728 | 1356 | 693 |
| கொதி நிலை (°K) | 2750 | 3550 | 3650 | 2915 | 2314 | 3160 | 3.50 | 3110 | 2855 | 1181 |

இவ்வட்டவணையில் தரப்பட்டுள்ள இயல்புகள் அணு எண் அதிகரிக்க சீராக அதிகரிக்காமல் இரு தொகுதிகளாகப் பிரிக்கப்படு வதை அவதானிக்கலாம். Sc - Mn வரை ஒரு தொகுதியும், Fe தொடக்கம் Zn வரை இன்னொரு தொகுதியாகவும் பிரிகின்றது. இவ்வாறு இரு தொகுதிகளாகப் பிரிவதை இலத்திரன் ஏறும் ஒழுங்கின் படி விளக்கலாம். Mn வரை ஒவ்வொன்றாக ஒழுக்குகள் அரை நிரம்பி வருகின்றன. Mn க்கு மேல் இவ்வொழுக்குகள் ஒவ்வொன்றாக முழு தாக நிரம்பி வருகின்றன. இதற்கேற்ப பௌதிகவியல்புகளில் இம் மூலகங்கள் இரு தொகுதிகளாகப் பிரிகின்றன. இம்மூலகங்களின் உயர் அடர்த்தி இம்மூலகங்கள் குறைந்த அணு ஆரை உடையவை என்பத னால் ஆகும்.

(உ-ம் :: Sc அணுஆரை 1.44 $A^0$ அதற்கு முந்திய Ca யின் அணுஆரை 1.74 $A^0$)

வன்மை, நொருங்கும் தன்மை, உயர்ந்த உருகுநிலை, உயர்ந்த கொதி நிலை ஆகிய இயல்புகளுக்கான காரணங்கள்:

1) இவை உலோகப் பிணைப்புக்கு அநேகமாக இரண்டு S இலத்திரன் களை ஈடுபடுத்தக் கூடியவையாக இருக்கின்றன.

2) இவை ஈற்று S உபசத்திமட்டத்திற்கு முந்திய d உபசத்திமட்டத்தில் உள்ள இலத்திரன்களை பங்கீட்டுப் பிணைப்புகளில் ஈடுபடுத்தி அணுக் கள் (உண்மையில் $M^{2+}$ அயன்கள்) ஒன்றுடன் ஒன்று வலுவாகப் பிணைக்கப்படுகின்றன.

இம் மூலகங்களின் அணுவாரை 1 ஆம் அயனாக்கற்சத்தி ஆகிய இயல்புகளில் திட்டமான கோலங்களில் மாற்றங்கள் காணப்படுவ தில்லை.

(தொடரும்...)

# மருத்துவ மாணவி துஷ்பிரயோகம்

# முக்கிய குற்றவாளி தற்கொலை



(புதுடில்லி)

டில்லியில் கடந்த டிசம்பர் மாதம் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி ஒருவர் கும்பல் ஒன்றால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின்னர் உயிரிழந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாகச் சேர்க்கப்பட்ட பேருந்து ஓட்டுநர் ராம்சிங், திகார் சிறையில் நேற்றுக் காலை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். அவர் துணிகளை வைத்து தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாக திகார் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால், அவர் கயிறை உபயோகித்து தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சிலர் தெரிவித்துள்ளனர்.

வழக்கு நடந்து வரும் நிலையில், நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ள பேருந்து ஓட்டுநரான ராம்சிங், முக்கியக் குற்றவாளியாக வழக்கில் சேர்க்கப்பட்டவர் என்பதால், இந்த வழக்கு குறித்து பரபரப்பு ஏற்பட்டுள்ளது. தற்கொலை செய்துகொண்ட ராம்சிங்கின் உடல், தீனதயாள் உபாத்யாய மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தத் தற்கொலை குறித்து கருத்துத் தெரிவித்த ராம்சிங்கின வழக்குரைஞர் வி.கே.ஆனந்த், இவரது சாவில் மர்மம் இருப்பதாகத் தெரிகிறது என்று கூறியுள்ளார்.

இதேவேளை தனது மகன் கொல்லப்பட்டிருக்கிறான். அவன் தற்கொலை செய்யவில்லை. அவன் சாகும் முடிவை எடுத்திருக்க மாட்டான்.

அவனை சக கைதிகள் அடித்து கொன்று தூக்கிலிட்டுள்ளனர் என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது எனராம் சிங்கின் தாயார் கூறியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# பிரதமரை நிராகரித்த ஜனாதிபதி

அமைச்சரவையில் பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனையின் பேரில் மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஒப்புதல் பிரணாப் முகர்ஜிக்கு அனுப்பப்பட்டது. அதனை அவர் நிராகரித்து கையெழுத்திட மறுத்துள்ளார்.

வங்காள தேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜிக்கும், மத்திய பெட்ரோலிய இணை அமைச்சராக உள்ள பனபாக லட்சுமிக்கும் ஜவுளித்துறை இணை அமைச்சர் பொறுப்பையும் கூடுதலாக அளிக்க மன்மோகன்சிங் முடிவு செய்த கோப்பு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த நிலையில் பிரணாப் முகர்ஜியிடம் கோப்பில் கையெழுத்து பெற அதிகாரிகள் முயற்சி செய்தனர்.


ஆனால் அந்த கோப்பில் கையெழுத்திட பிரணாப் மறுத்துவிட்டார். அதனை பிரதமர் அலுவலகத்திற்கே திருப்பி அனுப்ப உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக, குடியரசுத் தலைவர் ஊழியர்கள் உள்நாட்டு விஷயங்கள் தொடர்பான மத்திய அரசின் ஆலோசனையை வெளிநாட்டு பயணத்தில் இருக்கும்போது ஏற்றுக் கொள்ள முடியாது என்ற அடிப்படையில்தான் கோப்பில் கையெழுத்திட பிரணாப் மறுத்து விட்டதாக கூறப்படுகின்றது. என்றாலும் பிரணாப்பின் இந்த நடவடிக்கை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# லயோலா கல்லூரி மாணவரின் உண்ணாவிரதம் நிறைவடைந்தது



ஈழத் தமிழருக்காக கடந்த 4 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் நேற்று அதிகாலை 2 மணிக்கு பொலிஸாரால் வெளியேற்றப் பட்டனர். பின்னர் அவர்களுக்கு ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. இலங்கை மீது சர்வதேச விசாரணை கோரியும், அந் நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கவும் வலியுறுத்தி கோயம் பேட்டில் லயோலா கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. இந்நிலையில், உண்ணாவிரதம் இருந்துவந்த 8 மாணவர்களை நேற்று அதிகாலை 2 மணிக்கு பொலிஸார் கட்டாயமாக அங்கிருந்து வெளியேற்றினர். பின்னர் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு கட்டாய சிகிச்சை அளிக்கப்பட்டது. இதே போல் மாணவர்களுக்கு ஆதரவாக கோயம்பேடு வளாகத்தில் இருந்த 126 பேர் கைது செய்யப்பட்டு சமூக நலக் கூடத்தில் தங்க வைக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர்.

# கூடங்குளம் அணு உலைக்கு எதிராக படகுகளில் முற்றுகைப்போர்



கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூட வலியுறுத்தி போராட்டக்காரர்கள் நேற்று கடல் வழியாக படகுகளில் சென்று முற்றுகையிட்டனர். இப்போராட்டத்தால் அப்பகுதியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஜப்பானின் புகுஷிமா அணு உலை விபத்து தினம் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது. இந்த நாளில் அணு உலையின் ஆபத்தை விளக்கும் வகையிலும், அணு உலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் நேற்று கடல் வழியாக படகுகளில் சென்று அணு உலை முற்றுகைப்போராட்டம் நடத்தப்பட்டது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. 2000 பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தை சுற்றி 7 கி.மீ. தொலைவுக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பலத்த பொலிஸ் பாதுகாப்பையும் மீறி போராட்டக்காரர்கள் நேற்று கடல் வழியாக படகுகளில் சென்று முற்றுகையிட்டனர்.

கடல் பகுதியிலும் பொலிஸார் பாதுகாப்பு அரண் அமைத்து உள்ளதால் போராட்டக்காரர்கள் அணு உலையை நெருங்க முடியவில்லை.

உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த போர்ாட்டத்தில் இடிந்தகரை, கூடங்குளம், பெருமணல், கூட்டப்புளி, கூத்தங்குழி உடபட நெல்லை மாவட்ட மீனவர்கள் கலந்து கொண்டனர்.

கூடங்குளம் அணு உலை முற்றுகைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ராமேஸவரம், கன்னியாகும்ரி மீனவர்கள் வேலை நிறுத்தப் போரர்ட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## குணப்பட விரும்புகிறாயா?

(எசேக்கியேல் 47 : 1 - 9, 12)
(யோவான் 5 : 1 - 16)

இன்றைய நற்செய்தியில் இயேசு படுக்கையில் இருந்தவனைக் கேட்கும் கேள்வி அவர் நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்வி "நீ குணப்பட விரும்புகிறாயா"

எங்களில் இரும்பாய் இறுகிப்போன பழக்க வழக்கங்கள், தீயகுணங்கள், இயல்பாகிவிட்ட பாவங்கள் இவற்றிலிருந்து சுகப்பட, விடுதலையடைய நாம் விரும்புகின்றோமோ? இந்தத் தவக்காலம் நாம் இது சம்பந்தமாய் ஆன்மசோதனை மேற்கொள்ளத் தகுந்த காலம்.

நாம் பாவங்களிலிருந்து குணப்பட விரும்பாமைக்கு என்ன காரணங்கள் என்று ஆராய்வது நல்லது. நமது பாவங்களை நாமே உணராதிருக்கும் குருட்டாட்டம் ஒரு காரணம். இது கண் பார்வையில்லா குருட்டாட்டம் அல்ல. கண்ணிருந்தும் பார்க்க முடியாத, உணரமுடியாத குருட்டாட்டம் (யோவான் 9 : 39 - 41)

பிறர் எங்கள் குற்றங்களை எமக்குச் சுட்டிக்காட்டும் போது நாம் அக குணங்களை உணர்ந்து எம்மைத் திருத்திக்கொள்ள, கடவுளிடம் சுகம் வேண்ட நாம் தயாரா? அல்லது எப்போதும் எங்களில் குறை இல்லை மற்றவர்களில்தான் என்று நியாயப்படுத்துகின்றோமா? மற்றவர்கள் எங்கள் காயங்களைச் சுட்டிக் காட்ட முடியாமல் "கவசம் அணிந்து கொள்ளும்" மனப்பான்மையே இது.

நாம் குணப்பட வேண்டுமானால் குணப்படுவதற்குத் தேவை குணப்பட விரும்பும் மனது. பாவங்களுக்காய் மனம் கசியும் மனது. தன் பாவம் உணரும் மனது. பாவத்தை அறிக்கைசெய்யும் மனது. தன் பாவத்தை விட்டுவிட ஏங்கும் மனது.

வி.பி.தனேந்திரா.


# தரையிறங்கிய விமானம் தாறுமாறாக ஓடி விபத்து

## 140 பயணிகள் அருந்தப்பு

மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கிய தனியார் விமானம், திடீரென சறுக்கிச் சென்று விபத்துக்கு உள்ளானது. அதிரஷ்டவசமாக, அதில் பயணம் செய்த, 140 பயணிகள் உயிர் தப்பினர். சண்டிகர் நகரிலிருந்து, மும்பைக்கு, "இண்டிகோ" என்ற தனியார் பயணிகள் விமானம், நேற்று முன்தினம் மதியம் வந்தது. மும்பை விமான நிலையத்தின், முக்கிய ஓடு பாதையில் விமானம் தரையிறங்கிக் கொண்டிருந்தது. அப்போது திடீரென, சறுக்கிய படி, ஓடு பாதையிலிருந்து விலகிய விமானம், அங்கிருந்த விளக்குகள், சிறு கம்பங்களை தகர்த்தது.

எனினும், விமானி துரிதமாக செயல்பட்டு, விமானத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார், அதில் பயணித்த, 140 பயணிகளும உயிர் தப்பினர். விபததுக்கான காரணம் குறித்து, பைலட் கூறும் போது, திடீரென வீசிய பெருங்காற்றால் விமானம் தடுமாறியது என்றார். அவரிடம், விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு தலைமை இயக்குனர் விசாரணைக்கு, உத்தரவிடப்பட்டுள்ளது.

# விசேட பாதுகாப்பை நிராகரிக்கும் குர்ஷித்



வி.ஐ.பி.களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விடயத்தில் எனக்கு உடன்பாடு இல்லை. எனக்கும், எந்த விதமான சிறப்புப் பாதுகாப்பும் தேவையில்லை, என, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர், சல்மான் குர்ஷித் கூறினார்.

மத்திய சட்ட அமைச்சரும், உ.பி.மாநிலம், பருக்காபாத் லோக்சபா தொகுதியின், காங். எம்.பி.யுமான, சல்மான் குர்ஷித், காஜியாபாத்தில் நடந்த, மத்திய தொழில் பாதுகாப்பு படை தின விழாவில், பங்கேற்று, செய்தி யாளர்களிடம் கூறியதாவது, இப்போதெல்லாம், வி.ஐ.பி.களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விடயத்துக்கு அதிக முக்கியத் துவம் தரப்படுகிறது. பாதுகாப்பு படையினரில், கணிச மான பகுதியினரை, வி.ஐ.பி.களின் பாதுகாப்புக்காக ஒதுக்க வேண்டியுள்ளது. இதனால், சட்டம் - ஒழுங்கு உள்ளிட்ட மற்ற பாதுகாப்பு பணிகளுக்கு, போதிய அளவில் பொிஸாரை ஈடுபடுத்த முடியவில்லை. என்னைப் பொறுத்தவரை, வி.ஐ. பி.க்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விடயத்தில், உடன்பாடு இல்லை.

இதுபோன்ற விடயங் களை ஊக்கு விக்க கூடாது. எனக்கும், எந்தவிதமான சிறப்பு பாதுகாப்பும் தேவையில்லை என அவர் தெரிவித்தார்.



# ஆப்கனில் தொடரும் குண்டுவெடிப்பு

## அமெரிக்கா, தலிபான் கூட்டுச் சதி

## ஜனாதிபதி ஹர்சாய் குற்றச்சாட்டு

(காபூல்)

ஆப்கான்ஸ்தானிலிருந்து வெளிநாட்டு துருப்புகள் வெளியேறினால் நிலைமை மோசமாகுமென ஆப்கானியர்களை நம்ப வைக்க அமெரிக்காவும் தலிபானும் கூட்டுச்சதி செய்து குண்டு வெடிப்புகளை நடத்துவதாக ஆப்கன் அதிபர் ஹமீத்ஹர்சாய் பரபரப்புக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.



கடந்த சனிக்கிழமை ஆப்கன் பாதுகாப்பு அமைச்சகம் அருகே நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் 19 நபர்கள் கொல்லப்பட்டனர். மேலும் அதே நாளில் கிழக்கு கோஸ்ட் மாகாணத்தில் காவல்துறை சோதனைச்சாவடி அருகே இன்னொரு தாக்குதலும் நடந்தது.

இத்தாக்குதல் குறித்து கருத்துத்தெரிவித்த ஆப்கன் அதிபர் ஹர்சாய் 'இத்தாக்குதல்கள் அமெரிக்காவின் விருப்பப்படியே நடந்துள்ளன. திட்டமிட்டபடி ஆப்கனை விட்டு வெளிநாட்டுப் படைகள் வெளியேறினால் இத்தகைய சம்பவங்கள் நடக்கும் என்று எங்களை பயமுறுத்த நினைக்கின்றனர்' என்றார்.


மேலும் தலிபான்கள் தங்கள் பலத்தை நிரூபிக்க இத்தாக்குதல்களை நடத்தவில்லை என்றும் அமெரிக்கர்களின் இருப்பை ஆப்கானில் நீடிக்கவே தலிபான்கள் விரும்புகின்றனர் என்றும் ஹர்சாய் கூறினார். ஏற்கனவே தலிபானுடன் இணையப் போவதாக மிரட்டிய வர் ஹர்சாய் என்பதும் நேட்டோ படைகளை ஆப்கனின் வளங்களை கொள்ளையடிக்க வந்தவர்கள் என்றும் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

## விண்வெளியிலும் பதிவான ஜப்பானிய பூகம்ப அதிர்வு

(லண்டன்)

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் டொஹோகு என்னுமிடத்தில்,மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டது. இதன் மெல்லிய கேளா அதிர்வு அலைகள் காற்றுமண்டலத்தில் கலந்து விண்ணில் சுற்றிக்கொண்டிருந்த கோஸ செய்மதியில் பதிவாகி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.



பூமியில் இருந்து 255 கிலோமீற்றர் தூரத்தில் விண்ணில் சுற்றிவந்த அந்த கோஸ் செய்மதியில் பொருத்தப்பட்டிருந்த 100 மடங்கு அதி நுண்திறன் கொண்ட பதிவுக்கருவியில் இந்த கேளா ஒலி அலைகள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒலியானது பூகம்பம் ஏற்பட்ட 30 நிமிடத்தில் பசிபிக் பகுதியிலும், மற்றும் ஐரோப்பாவின் மேல் பகுதியில் 25 நிமிடத்தில் விண்ணில் கடந்து சென்றதாகவும் சொல்லப்படுகிறது. ஈசா என்ற விண்கலமும் இந்த சப்த அலைகளை பதிவு செய்ததாக கூறப்படுகிறது. பொதுவாக, பூமியில் பெரிய அளவிலான பூகம்பம் ஏற்படுகிறபோது, அதன் கேளா ஒலி அலைகள் காற்று மண்டலத்தில் கலந்து மேல் நோக்கி செல்வது வழக்கம் என்று சொல்லப்படுகிறது.

## கடத்தப்பட்ட 77பேரை மீட்டது சீனப் பொலிஸ்

சீனாவில் குழந்தைகள் மற்றும் இளம்பெண்களை கடத்தி விற்கும் கூட்டத்தின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.


இதனைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் தொடர்ந்து எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வகையில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சகம் சார்பாக 20 மாகாணங்களில் நடத்தப்பட்ட அதிரடி சோதனைகளின் பலனாக 63 குழந்தைகள் மற்றும் 14 இளம்பெண்கள் மீட்கப்பட்டுள்ளதாக அமைச்சக உயரதிகாரி ஒருவர் கூறினார்.

6 ஆயிரம் பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டையில் கடத்தல் கும்பல்களைச் சேர்ந்த 368 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

## தாத்தாவின் இறுதி ஆசையை நிறைவேற்றிய 8வயதுப் பேரன்

(லண்டன்)

மரணப் படுக்கையில் கிடந்த தாத்தாவின் கடைசி ஆசையை பூர்த்தி செய்யும் விதமாக 8 வயதுச் சிறுவன், 61 வயது பெண்ணை திருமணம் செய்து கொண்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தென்னாபிரிக்காவில் உள்ள ட்சுவானே பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர், தனது 8 வயது பேரனின் திருமணத்தை பார்த்துவிட்டு கண்ணை மூடிவிட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

சிறுவனின் தாயான தனது மகளிடம் கூறி, அதே பகுதியைச் சேர்ந்த 5 குழந்தைகளின் தாயான ஹெலன் ஹாபாண்டு என்ற 61 வயதுப்பெண்ணை எட்டே வயது நிரம்பிய சனேலே மசிலேலாவிற்கு திருமணம் செய்து வைக்க அவர் ஏற்பாடு செய்தார்.

முகூர்த்தத்திற்கான நல்ல நேரம் குறிக்கப்பட்டு, சுமார் 100 உறவினர்கள் முன்னிலையில் மணமக்கள் இருவரும் மோதிரம் மாற்றிக்கொண்டு, ஒருவரையொருவர் ஆரத்தழுவி முத்தமிட்டுக் கொண்டனர்.

இந்த வினோத திருமணம் குறித்து சிறுவன் மசிலேலாவிடம் கேட்டபோது, "ஹெலனை திருமணம் செய்துகொண்டது மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால், நான் வளர்ந்த பின்னர் என் வயதுக்கேற்ப வேறொரு அழகான பெண்ணைத் திருமணம் செய்து கொள்வேன்" என்று கூறினான்

## இராணுவ அருங்காட்சியகத்தில் வெனிசுலா ஜனாதிபதியின் உடல்

(காரகாஸ்)

வெனிசுலா அதிபர் ஹியூகோ சாவேசின் உடல், இராணுவ அருங்காட்சியகத்தில், மக்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. தென் அமெரிக்க நாடான, வெனிசுலாவின் அதிபராக, கடந்த, 1999 முதல் பதவி வகித்த, ஹியூகோ சாவேஸ், புற்றுநோயால், கடந்த 5ஆம் திகதி மரணமடைந்தார். மறைந்த சாவேசின் உடலுக்கு, வெனிசுலா மக்களும், உலக நாடுகளின் தலைவர்களும், அஞ்சலி செலுத்தி வருகின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த இறுதிச்சடங்கில், கியூபா நாட்டின் அதிபர் ரவுல் காஸ்ட்ரோ, ஈரான் அதிபர் அகமதி நிஜாத் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள், கலந்து கொண்டனர். ஏராளமான பொது மக்கள், நீண்ட நேரம் காத்திருந்து, அவரது உடலுக்கு, அஞ்சலி செலுத்தினர்.



இந்நிலையில், ''அவரது உடல், இராணுவ அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்படும்'' என, இடைக்கால அதிபர், நிகோலஸ் மடுரோ, அறிவித்துள்ளார். இது குறித்து, அவர் கூறியதாவது: ரஷ்ய முன்னாள் அதிபர் லெனின், வியட்னாமின் முன்னாள் அதிபர் ஹோசிமின் மற்றும் சீன பொதுவுடைமை கட்சித் தலைவர் மா சே துங் ஆகியோரின் உடல்கள், பதப்படுத்தப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இதேபோல், அதிபர் சாவேசின் உடல், பதப்படுத்தப்பட்டு, கண்ணாடிப் பேழையில், அதிபர் மாளிகைக்கு அருகில் உள்ள, இராணுவ அருங்காட்சியகத்தில், பார்வைக்கு வைக்கப்பட உள்ளது. பொதுமக்கள் அஞ்சலி செலுத்தும் விதமாக, வரும் வாரம் முழுவதும், அவரது உடல், அங்கு வைக்கப்படும். இவ்வாறு, நிகோலஸ் கூறினார்.

எனினும், சாவேசின் உடல் நிரந்தரமாக, பார்வைக்கு வைக்கப்படுமா என்பது குறித்து உறுதியான தகவல்கள் இல்லை.

## அமெரிக்க விமானத்தாக்குதல் ஆப்கானின் பிரபல நடிகர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோப்படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் அந்நாட்டின் பிரபல நடிகரான நஸார் முகம்மத் மஜ்நோன்யார் ஹெல்மாண்டி பலியாகியுள்ளார். தீவிரவாதம், போதை மருந்து கடத்தலுக்கு எதிரான பல படங்களில் நடித்து தலிபான்கள்,



அல் கொய்தாவின் எதிர்ப்புக்கு உள்ளானவர். இவர் தங்களை உளவு பார்ப்பதாகக் கருதிய தலிபான்கள் சமீபத்தில் இவரை சிறை பிடித்து, ஆப்கானிஸ்தானின் தெற்குப் பகுதியில் உள்ள ஹெல்மாண்டி மாகாணத்தில் வைத்திருந்தனர். இந் நிலையில் தீவிரவாதிகள் மீது விமானத்தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு நேட்டோ படையினர் நடத்திய தாக்குதலில் நஸாரும் அவரை பயணக் கைதியாக வைத்திருந்த 3 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை அமெரிக்கத் தரப்பு மூடி மறைக்க முயன்றது. ஆனால், ரஷய செய்தி நிறுவனங்கள் இந்தத் தகவலை வெளியுலகுக்குத் தெரிவித்துள்ளன.

## சிரியாவில் சுட்டுக்கொல்லப்பட்ட 20 இளைஞர்களின் சடலங்கள் மீட்பு



(அலெப்போ)

சிரியாவில் உச்சக்கட்ட போர் நடந்துவருகிறது. இதில் இராணுவமும் புரட்சிப்படையினரும் கடுமையான மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று முன்தினம் சிரியாவின் வர்த்தக நகரமான அலெப்போ நகரில் உள்ள குவைக் ஆற்றில் சுட்டுக் கொல்லப்பட்ட 20 இளைஞர்களின் உடல்களை போராளிகள் வெளியே எடுத்தனர்.

இவர்கள் அனைவரையும் இராணுவத்தினர் கைகளை கட்டி நெற்றியில் சுட்டும் வெட்டியும் கொன்றுள்ளதாக போராளிகள் குற்றம்சாட்டியுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் அங்கு இதுபோன்று ஆற்றுப்பகுதியில் சுட்டு வீசப்பட்ட 65 சடலங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் இருதரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

## காணி விவகாரங்களை கவனிக்க யாழில் புதிய அலுவலகம் திறப்பு



யாழ் மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கு முகமாக யாழ். செயலகத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஒன்று நேற்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இந்த அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக நாடாவை வெட்டி திறந்துவைத்தார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிகழ்விற்கு வருகைதந்திருந்த காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் சிறிபால கம்லத், அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அமைச்சின் அலுவலகம் திறந்துவைக்கப்பட்டதனை அடுத்து அங்கு நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் யாழ். மாவட்டத்தில் பணியாற்றுவதற்காக 20 பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்களையும் வழங்கிவைத்தார்.

இவ்வாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகங்களில் பணியாற்றுவதற்கு மேலும் 40 பட்டதாரி பயிலுநர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் அலுவலகத்தில் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் யாழ். மாவட்ட காணி மற்றும் காணி பயன்பாடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளார். இந்தக் கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள் பங்குபற்ற அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (பா)

## துமிந்த சில்வாவுக்கு கிடைக்குமா பிணை?

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா குணமடைவதற்கு இன்னும் இரண்டு தொடக்கம் மூன்று வருடங்கள் தேவைப்படும் என அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் நேற்று அறிவித்தனர். இதனால் இவருக்கு பிணை வழங்குவதற்கான விண்ணப்பத்தினை சட்டமா அதிபர் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்தது.

இதேவேளை, துமிந்த சில்வாவிற்கு பிணை வழங்குவது பற்றி கவனமெடுப்பதற்காக சட்டமா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரை மே 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் அறிவித்தது.

## அகதி அந்தஸ்துக்கு அதிகரிக்கிறது வாய்ப்பு

(கொழும்பு)

பிரித்தானியாவில் எதிர்காலத்தில் அதிக அளவிலான இலங்கை அகதிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் துன்புறுத்தலுக்கு உட்படுகின்ற அல்லது உயிர் அச்சுறுத்தல் உள்ளவர்கள், இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம் என்று பிரித்தானியாவின் குடிவரவுத் துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படுவதுடன், பிரித்தானியாவில் இருந்து நாடுகடத்தப்படுகின்றவர்கள் பாதுகாப்பு தரப்பினரால் துன்புறுத்தப்படுகின்றமை ஏறத்தாழ உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அகதி அந்தஸ்துக்கான விண்ணப்பங்களை பிரித்தானிய குடிவரவு கட்டுப்பாட்டுச் சபை அவதானமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மட்டு. கல்லடிப் பாலத்தை ஜனாதிபதி திறந்து வைப்பார்

மட்டக்களப்பு கல்லடிப்பாலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் எதிர்வரும் 23 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. இதனையொட்டி மட்டக்களப்பு நகரில் நடைபெற்றுவரும் தேசத்திற்கு மகுடம் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும், மாநகர அழகுபடுத்தும் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வேலைகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பினையடுத்து மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றுவரும் வேலைத் திட்டங்கள் பார்வையிடப்பட்டன.

இம்மாதம் 23 ஆம் திகதி அம்பாறையில் நடைபெறவுள்ள தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை ஒட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் பல மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதில் ஒரு பகுதியாகவும் முக்கியமானதாகவும் உள்ள மட்டக்களப்பு மாநகர அழகுபடுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் நீதிமன்றம் அருகிலுள்ள முதியோர் பூங்கா, காந்திப் பூங்கா, இருதயபுரம் சந்திக்கு அருகிலுள்ள லீனியர் பார்க், திருமலை வீதியின் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட அபிவிருத்தி வேலைகளை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் பார்வையிட்டதுடன் வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருபவர்களுக்கும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு நகர அழகுபடுத்தல் திட்டத்தின் கீழ் நகரின் மத்தியில் உள்ள காந்தி சதுக்கம் காந்தி பூங்காவாக மாற்றம்பெறுகிறது. தேசத்தின் மகுடம் (தயட்ட கிருள) வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெறும் இந்த அபிவிருத்தித்திட்டத்துக்கென 38.301 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டத்தினை மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்துகின்றன.

### ஜெனிவாவில்....

இலங்கைக்கு ஆதரவாக மேற்படி நாடுகள் ஜெனிவாவில் களமிறங்கி தீவிர பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக இலங்கை அரசுக்கு ஆதரவாக பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்கு பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துள்ளது.

தொழில்நுட்பக் காரணிகள், காலதாமதம் உட்பட முக்கிய சில விடயங்களைக் கருத்திற் கொண்டே பாகிஸ்தானின் பிரேரணையை ஐ.நா. மனித உரிமைகள் சபை ஏற்க மறுத்துவிட்டது என அறிய முடிகின்றது. பாகிஸ்தானின் இறுதிக்கட்ட முயற்சி கைகூடாமையானது இலங்கைக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படவேண்டும். இலங்கை இறையாண்மைமிக்கதொரு நாடு. எனவே, அதன் உள் விவகாரங்களில் சர்வதேச தலையீடு இருக்கக்கூடாது ஆகிய சரத்துகள் உட்பட மேலும் பல விடயங்கள் பாகிஸ்தானின் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டிருந்தன என அறியமுடிகின்றது. இருப்பினும், பாகிஸ்தானின் பிரேரணையை மனித உரிமைகள் சபை தொழில்நுட்பக் காரணங்களால் ஏற்க மறுத்துவிட்டது.

### பிரபாகரன்...

வவுனியா, ஓமந்தையில் வைத்து ஊடகவியலார்களுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதிவு விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்து நுழைந்துள்ளதாகவும் தகுதியில்லாதவன் எனப் பலரும் தெரிவித்து வருகின்றனர். எனக்கு அவ்வாறான நிலைமை தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

நான் பதவிக்காக அலைபவன் அல்ல. விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் ,என அன்று கூறியவர்கள் இன்று அவர்களின் ஏக பிரதிநிதிகளாக செயற்படுகின்றனர். கூட்டமைப்பாக பதிவு செய்ய நினைப்பவர்கள் என்னைப் பற்றி யோசித்தால் நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் தேவையில்லை என்றால் என்னை விட்டு விடுங்கள் என்று கூறுவதை தவிர வேறொன்றையும் என்னால் கூறமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

எனது அரசியல் அனுபவத்தை கேட்டிருந்தால் பிரபாகரனும் உயிருடன் இருந்திருப்பார். நாற்பதினாயிரம் மக்களும் உயிருடன் இருந்திருப்பர். அது மட்டுமன்றி கோடிக்கணக்கான பொருட்களையும் காப்பாற்றியிருக்க முடியும்.

ஆனால், புலிகளை தூக்கி வைத்து அவர்களது ஆதரவாளர்களை தூக்கி வைத்து நாட்டையும் இனத்தையும் அழித்து இளம் துளிர்களை கிள்ளி எறிந்து ஒழித்துவிட்டு இன்று வீரம் பேசுபவன் நான் அல்ல. 3 இலட்சம் மக்களின் சாபத்திற்கு ஆளாகப்போகின்றீர் என நான் அன்றே பிரபாகரனுக்கு கூறினேன். ஆனால் பிரபாகரன் எனது பேச்சை கேட்கவில்லை எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

4 கட்சிகள் இணைந்து பதிவு செய்தால் ஆதரவளிப்பீர்களா என செய்தியாளர்கள் கேட்டபோது,

நான் இவர்களை பதியுமாறும் கேட்கவில்லை பதிய வேண்டாம் எனவும் கூறவில்லை. எனக்கு பதவி தேவையில்லை. நேர்மையாகவும் விசுவாசமாகவும் செயற்பட்ட கட்சித் தலைவர்களுடன் அரசியல் நடத்தியவன் நான். சில்லறைத்தனமாக நான் அரசியல் நடத்தவில்லை. அவ்வாறான அரசியலை நடத்தவும் மாட்டேன் எனக் கூறினார்.

மக்களின் விருப்பப்படி நான் செயற்படுவேன். அதனை விடுத்து மரத்துக்கு மரம் பாயும் குரங்குபோல் என்னால் செயற்படமுடியாது. என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

### அரசியல்...

வேண்டும். இதன்போது, உள்நாட்டின் அரசியல் நோக்கங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய அவசியம் இல்லை என 'இந்து' நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

ஜெனிவாவில் அமெரிக்க யோசனைக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என கோரி தமிழகத்தில் பாரிய எதிர்ப்புகள் வெளிக்காட்டப்பட்டு வருகின்றன.

இதனை கருத்தில் கொண்டு 'இந்து' செய்தித் தாள் இந்த கருத்தை முன்வைத்துள்ளது. இதேவேளை, இலங்கை அரசாங்கம் சர்வதேச செய்தியாளர்களுக்கும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளருக்கும் சுதந்திரமாக சென்று பணியாற்றக் கூடிய நிலைமையை தமது நாட்டிற்குள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என இந்தியாவின் மற்றொரு பத்திரிகையான த பயினியர் செய்தித்தாள் கோரிக்கை விடுத்துள்ளது.

### மீண்டும்...

பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவிகள் குறித்து தீவிர கண்காணிப்பு செய்யப்பட வேண்டுமென கோத்தாபய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

### சுயாதீன..

தொடர்பான சுயாதீன விசாரணைகளை அரசாங்கம் சர்வதேச சதித்திட்டமாக அடையாளப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். பக்கச்சார்பற்ற, வெளிப்படையான ஓர் பொறி முறைமையின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும், இதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதன் மூலம் நன்மதிப்பை வென்றெடுக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். மறைப்பதற்கு எதுவுமில்லை என்றால் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். விமர்சனங்களை ஆக்கபூர்வமாக ஏற்றுக் கொண்டு அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் பழகிக்கொள்ள வேண்டுமென சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

### படையினர்...

இது சில அரசியல்வாதிகளின் தவறான வழிநடத்தலின் விளைவே என்றும் குறிப்பிட்ட அமைச்சர், இந்த அலுவலகத் திறப்பை அடுத்து கிளிநொச்சி செயலகத்திலும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அலுவலகங்களில் பணியாற்ற காணி சம்பந்தமாக மேலும் 40 பட்டதாரி பயிலுநர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)

# கரவெட்டியில் ஆரம்பப் பாடசாலை உதயம்

# கல்வி வளர்ச்சிக்கு மைல்கல்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை ஸ்தாபிக்கப்படவுள்ளது என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலையின் புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அதிபர் மகாவிக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், கிராமங்கள் மற்றும் பின்தங்கிய பிரதேசங்கள் எனக் கருதப்படும் இடங்களிலுள்ள மாணவர்களின் நலன் கருதியே எமது செயற்பாடுகள் அமையும். இதேபோன்றே ஜனாதிபதி அவர்கள் யாழ். குடாநாட்டுக்கு அண்மையில் விஜயம் செய்த போது நகரங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளதைப் போன்று கிராமங்களும் அபிவிருத்தி அடையவேண்டுமெனத் தெரிவித்திருந்தார்.

பல பாடசாலைகள் ஊட்டப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் இப்பாடசாலை துரதிஷ்டவசமாக தெரிவு செய்யப்படவில்லை. எனினும் கௌரவ அமைச்சர் டகளஸ் தேவானந்தாவின் பெருமுயற்சியின் பயனாக இவ் ஆரம்பப் பாடசாலை புதிதாக நிர்மானிக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து பாடசாலைக்கான அடிக்கல்லினை ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), மற்றும் அதிதிகள் நாட்டி வைத்தனர். இந்நிகழ்வுகளில் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி பிரதேச இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் (ரங்கன்), வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சேவா லங்கா நிறுவனத்தின் 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இப்பாடசாலைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளமை இங்கு. குறிப்பிடத்தக்கது.

# பாலியல் தொழிலில் இலங்கைப் பெண்கள்

## சிங்கப்பூரில் மும்முரம்

இலங்கைப் பெண்கள் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு தெரிவிக்கின்றது. இது தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளாதாக அதன் பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்ரமசிங்க கூறினார்.

சிங்கப்பூரில் இலங்கை பெண்கள் சிலர் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். எனவே சிங்கப்பூருக்கு தொழில் நிமித்தம் செல்வோர் கட்டாயமாக வெளிநாட்டு வேலைலவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக செல்ல வேண்டும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த விக்ரமசிங்க குறிப்பிட்டார். பணியகத்தில் பதிவுசெய்த பின்னர் சிங்கப்பூருக்குப் பயணிப்பதன் மூலம் இவ்வாறான ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்புப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஹலால் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

ஹலால் சான்றிதழ் தொடர்பான ஏழு தீர்மானமங்கள் அறிவிக்கப்பட்டடுள்ளன. ஹலால் சான்றிதழ் தொடர்பிலான அறிவிப்பினை மேற்கொள்ளும் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே இந்த ஏழு தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஊடகவியலாளர் மாநாடு இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் அனுசரணையில் சம்மேளனத் தலைவர் சுசந்த ரத்னாயக்க தலைமையில் இடம்பெற்றது.

பெல்லன்வில விமலரத்ன தேரர், அகில இலங்கை ஜம்இயயதுல் உலமா தலைவர் அல் ஹெய்க் றிஸ்வி முப்தி உட்பட பல சமயத்தலைவர்கள் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர். இதன்போது,

1. உள்நாட்டு சந்தையில் விற்பனையாகும் உற்பத்திகளுக்கு ஹலால் இலச்சினை காட்டப்பட வேண்டிய அவசியமில்லை.

2. இருப்பினும் வெளிநாட்டு சந்தைக்காக ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திகளுக்கு மட்டும் தற்காலிக அடிப்படையில் வழமைபோல் உற்பத்தி நிறுவனங்கள் ஹலால் சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம்

3. இந்த ஹலால் சான்றிதழை அகில இலங்கை ஜமிய்யத்துல் உலமா கட்டணமின்றி வழங்கல் உட்பட ஏழு தீர்மானங்கள் இதன்போது அறிவிக்கப்பட்டன.

# டெங்கு நோயை ஒழிக்க ஆசிய நாடுகள் அணிதிரள்வு

டெங்கு நோயை ஒழிக்கும் பொருட்டு ஆசிய நாடுகளை ஒன்றிணைத்து திட்டங்களை செயற்படுத்த உலக சுகாதார நிறுவனம் தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு நாடும் செயற்படுத்தும் ஒவ்வொரு திட்டங்களை ஒன்றிணைத்து திட்டத்தை வலுப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, இலங்கை, இந்தியா, பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து, இந்தோனேசியா, தீமோர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை இணைத்து இத்திட்டம் செயற்படுத்தப் படவுள்ளது. இது குறித்த விசேட மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. உலக சனத்தொகையில் வருடாந்தம் 100 மில்லியன் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுவதாக உலக சுகாதார நிறுவனம குறிப்பிட்டுள்ளது.

# தமிழ் இளைஞர் கடத்தல் ஆனமடுவவில் சம்பவம்

(கொழும்பு)

ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ள நிலையில் அவ்விளைஞன் பயணித்த கார் முந்தல் நகரில் வைத்து நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனமடுவ பிரதேசத்தைச் சேர்ந்த ராஜேந்திர சிவலிங்கம் எனும் இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார். இவர் நேற்றைய தினம் கொழும்பிலிருந்து ஆனமடுவவுக்கு செல்கையிலேயே காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த இளைஞர் வீட்டுக்கு வர தாமதித்ததினையடுத்து ஆனமடுவ பொலிஸில் பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக குறித்த இளைஞர் பயணம் செய்த கார், முந்தல் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. காரினுள் அதன் திறப்பு மற்றும் ஆவணங்களும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளினை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கப்பலில் கைகலப்பு பிலிப்பைன்ஸ் பிரஜை மரணம்

## கொழும்புத் துறைமுகத்தில் விபரீதம்

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டுள்ள தாய்வான் நாட்டு கப்பலிலிருந்து பிலிப்பைன்ஸ் நாட்டு பிரஜையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர். பிரேபின் மெகலோன்ஸ் பொனியுஸ் (வயது-37) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுக பண்டாரநாயக்க பகுதியில் நங்கூரம் இடப்பட்டுள்ள தாய்வான் நாட்டுக்குச் சொந்தமான கப்பலில் இருந்த சேவையாளர்கள் இடையே இன்று இடம்பெற்ற கைகலப்பின் போதே அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் தெரிவித்தனர்.

இந்த கைகலப்புடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் பிலிபைன்ஸ் பிரஜைகள் அறுவரும் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


**UK, Australia, New Zealand, Canada, America & Malaysia**

பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான

**கருத்தரங்கும் உடனடி அனுமதியும்**



2012 ஜூலையில் நடைபெற்ற கருத்தரங்கு



அனுமதி பெற்றுச் சென்ற மாணவர்கள்

INTI International University Laureate International Universities · University of Wollongong Australia · University of Bradford Making Knowledge Work · University of Bedfordshire

| | |
|---|---|
| க.பொ.த. (உ/த) 3 பாட சித்தி (3Cs) => | 3 வருடங்களில் பட்டக்கல்வி பூர்த்தி |
| க.பொ.த. (சா/த) 5 பாட சித்தி (5Cs) => | 4 வருடங்களில் பட்டக்கல்வி பூர்த்தி |

**50-70%** கட்டணக் கழிவு

IELTS வங்கிப்பணம் தூதரக நேர்முகத்தேர்வு **இல்லை**

உலகம் முழுவதும் 29 நாடுகளில் 100க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக வலைப்பின்னலான

**INTI Laureate International Universities**

பிரதிநிதி Kumara Raj ஐச் சந்தித்து அனுமதி பெறுங்கள்

(சான்றிதழ்கள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலருடன் வரவும்)

**On 14-03-2012 வியாழன் மு.ப. 10.00 - பி.ப. 3.00**

**@ ஞானம்ஸ் ஹொட்டேல்**

**பல்கலைக்கழக அனுமதி முதல் பட்டம், தொழில்வாய்ப்பு பெறும் வரையில்**

கூடவே இருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

(C/2471)

**சிகரம்** SIKARAM — Media & Education — கல்வி - தொழில் வழிகாட்டி

221. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

தொ.பே.: 021 300 80 60

நேரடி: 0773 616 798

மி.அ.: edusikaram@gmail.com இணையம்: www.sikaram.lk



**NALIN IT இன் MEGA OFFER**

hp DELL Laptops, Branded PC

மற்றும் Assembled PC என்பன அதிரடி விலைக்குறைப்புடன்....



1 வருடம் முதல் 3 வருட உத்தரவாதம்

ஏராளமான வெகுமதிகள்...

மேலதிக விபரங்கள் எமது facebook தளத்தில்

(C/2506)

NALIN INFORMATION TECHNOLOGIES PVT. LTD

195/2, Palaly road, Parameswara Junction, Jaffna.

TP-0212221121 0777667975

www.facebook/nalinit.com


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.